KALKI
16.3.1969. 40 காசு

கல்கி





பிரபல சமையல் கலைஞர் திருமதி பிரேமா லால் தமது விசேடிப் பக்குவ முறை ஒன்றை உங்களுக்கு உதவுகிறார்.

பிரவுன் & போல்ஸன்

கஸ்டர்டு பவுடர்

உபயோகித்து சாக்கோ மூஸ் செய்து பார்த்திருக்கிறீர்களா?

இன்சுவை ததும்பும், மென்மையான சாக்கோ மூஸ் உங்களுக்குக் கிடைக்கும்.



பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர் மென்மையானது, செழுமையானது, சத்தானது. பிரீனி, ஐஸ் கிரீம், டிரிபிள் போன்ற பலவகைப் புட்டிங்குகளையும், பழவகைத் தின் பண்டங்களையும் தயாரிக்க அது எப்போதும் கைவசமிருக்கட்டும். தனி, ஜெல்லி, ப்ரூட் ஸாலட்டு களுடன் சேர்க்கும்போது இன்சுவை பெருகும். பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர் அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப் பட்டது.



பக்குவ முறை:

- 2 டேபிள் ஸ்பூன் பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர் (ப்ளெயின்)
- 2 டேபிள் ஸ்பூன் கோகோ
- ½ லிட்டர் பால்
- 4 டேபிள் ஸ்பூன் அல்லது தேவையான சர்க்கரை.
- சில துளிகள் வெனில்லா எஸென்ஸ்
- 25 கிராம் டேவிஸ் ஜிலடின்
- 125 திரவ கிராம் பாலேடு

1. பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும் கோகோவையும் கிண்ணம் பாலில் கலக்கவும்; எஞ்சிய பாலை கொதிக்க வையுங்கள். 2. கொதிக்கும் பாலில் கஸ்டர்டு பவுடர் கலவையில் விட்டுக் கிளறவும். 3. அதை ஒரு பாத்திரத்தில் திருப்பிக் கொட்டி இரண்டு நிமிஷங்களுக்கு வேகவிடவும், அடிக்கடி கிளறிவிடவும். 4. சர்க்கரையையும் எஸென்ஸையும் சேர்த்து, சற்றே குளிர வைக்கவும். 5. ஆறு மேசைக்கரண்டி வெந்நீரில் கரைத்த ஜெலடினை சேர்க்கவும். 6. கட்டியாகும் வரை பாலேட்டைக் கலக்கி, கலவையுடன் சேர்க்கவும். 7. எண்ணெய் தடவிய அச்சில் ஊற்றவும்; இறுகும் வரை விட்டு வைக்கவும்.

பக்குவ முறைகள் அடங்கிய இலவசமான செட் ஒன்றை எனக்கு ஆங்கிலம்/இந்தி/வங்காளம்/தமிழ்/தெலுங்கு மலையாளம்/குஜராத்தி மராத்தி/கன்னடம் மொழியில் தயவு செய்து அனுப்பவும்.

பெயர்

முகவரி


இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக:
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1 பிஆர்

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்!

இதுபோல் இன்னும் பல உணவு வகைகளைத் தயாரித்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பிஆர்)

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்.
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ் 1.
மற்றும் அவர்களது கிளைகள்





எழில் பொங்கும் பருவ மங்கைக்கு!

லவ் அ:.பேர்—ஒரு கோயா தயாரிப்பு.
உணர்ச்சியைத் தூண்டும் உயரிய சுகந்தம்!
சிங்காரத்தின் சிகரம்! பருவ மங்கையரின் வசீகரத்திற்கு
சிறந்ததொரு வாய்ப்பு! காதல் பறவையென
கவர்ச்சி கொள்ளும் நறுமணம்! இதுவே கோயாவின்
''லவ் அ:.பேர்''! இதோ மூன்று கோயா திலகங்கள்:
மனோகரமான பினாகரோஸ், புது மலர் மணமுள்ள
கார்மனியா, பரவசப்படுத்தும் பாஸ்போர்ட்,
உங்களை நாள் முழுவதிலும் குளுமையுடன்,
புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.

இந்த நறுமணப் பொருட்களைத்
தயாரிப்போர்:

கோயா


பாரிஸ் . லண்டன் . நியூயார்க்



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்)
லிமிடெட் (இங்கிலாந்தில்
இணைக்கப்பட்டது)

AGC-7 TAM

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட
ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!





ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா.

Bensons/0391/TAM

கல்கி

பொருளடக்கம்

கீலக வருஷம், பங்குனி 3உ ● **1969 மார்ச் 16உ**

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


திட்டத்தின் இலக்குகள்
"கற்பனை மண்டலத்திலிருந்து பூமண்டலத்துக்கு எப்படி இறக்குவது என்பதே பிரச்னை!"
PK


நிதி நிலைமை எப்படி இருக்கிறது?
சட்டமும் ஒழுங்கும் எவ்வளவு திவ்வியமாக இருக்கின்றதோ அவ்வளவு திவ்வியமாக..



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 ★ இதழ் 33

தில்லி பட்ஜெட்

ஏழைகளின் மீது வரி விதிக்கத் தேவை ஏற்படும்போது நிதி மந்திரிகள் ஒரு மதுரமான சொற்றொடரை உபயோகிப்பது வழக்கம். 'வரி விதிப்பின் அஸ்திவாரத்தை விரிவு செய்வது' என்பதே இந்தச் சொற்றொடர். மொரார்ஜி தேசாயும் இந்தப் பதத்தைப் பிரயோகித்து விட்டார்.

வரியின் அடிப்படையை விஸ்தரிப்பதாகச் சொல்லி, மக்கள் வாங்கி உபயோகிக்கும் பண்டங்களின் மீது உள்ள வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதனால் ஏழை மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகமாகிறது. வரி விதிப்பினால் தொழிற்சாலைகளில் உற்பத்திச் செலவும் அதிகமாகிறது. இதனை எவ்வளவுதான் எடுத்துக் காட்டினாலும் இந்திய அரசாங்கம் வரிச் சுமையை உயர்த்திக் கொண்டே போவதில் பிடிவாதமாக உள்ளது. வரிப் பளுவைக் குறைப்பது பற்றிப் பாரத சர்க்கார் சிந்திப்பதில்லை. அண்டை நாடான பாகிஸ்தானுடன் நட்பு இல்லாததாலேயே ராணுவத்துக்காகப் பெரும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ராணுவச் செலவைக் குறைக்க வழி கண்டால் வரிப் பளு தன்னால் குறையும். ஆனால் இத்திசையில் மத்திய அரசாங்கத்தின் எண்ணம் செல்வதில்லை. வரிச் சுமையை ஏற்றிக் கொண்டே வருகிறது.

மக்களுக்கு உபயோகமான முறையில் முதலீடு செய்யப்படாத சொத்துக்களுக்கு வரி விதித்தால் அது நியாயம். ஆனால் நல்ல முறையில் முதலீடாகிற சொத்துக்கு வரி விதிப்பது நிதி பரிபாலனத்தில் நீதியாகாது. இந்த மடமையை இரட்டிப்பாக்கியிருக்கிறது, விவசாயச் சொத்துக்களின் மீதும் இவ்வருடம் விதிக்கப்பட்டுள்ள புது வரி.

வருடா வருடம் பற்றுக்குறை பட்ஜெட் போட்டு அதற்காக ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டுச் செலாவணியாக்கியதில் ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே வந்திருக்கிறது. இதனாலும் விலைவாசிகள் ஏகத்தாறாக உயர்ந்து, மக்களின் வாழ்க்கைச் செலவு ஏறியிருக்கிறது. பற்றுக்குறை நிதி உயர்ந்து கொண்டே வருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த பற்றுக்குறை ரூ. 100 கோடி எனில், இன்றைய பட்ஜெட்டின் பற்றுக்குறையோ ரூ. 250 கோடி!

சர்க்காரின் செலவை அதிகரித்துக் கொண்டே போய், அதற்காக வரிகளின் வருமானம் போதாதபோது இவ்விதம் காகிதத்தை ரூபாயாக அச்சிட்டுப் புழங்க விடுவதன் விபரீத விளைவுகளைப் பொருளாதார அறிஞர்கள் அறிவர். ஆனால் இதை அவர்கள் பொதுமக்களுக்குப் போதிய அளவு தெளிவு படுத்தவில்லை. ரூபாய் நோட்டு அச்சடித்து வழங்கி அதன் மதிப்பைக் குறைப்பது, நாணயத்தை உபயோகிக்கும் சகலரையும் பாதிக்கிறது. அதாவது, காகித நோட்டு அச்சிடுவது, ரூபாய் கொடுத்துப் பண்டங்களை வாங்குகிற எல்லாப் பிரஜைகளின் மீதும் விதிக்கப்படும் மறைமுக வரியாகும். வெறுமே 'ரூபாய்' என்று அச்சடிக்கப்பட்ட காகிதம் உண்மையில் ரூபாயின் மதிப்புப் பெற்றதல்ல. அதற்கு ரூபாயின் மதிப்பு உண்டு என்ற சர்க்காரின் வாக்குறுதியிருப்பதாலேயே அது கைக்குக் கை நாணயம் என்ற பெயரில் மாறுகிறது. ஆனால் விலை உயர்ந்த பண்டங்களில் மட்டமான சரக்கைச் சேர்ப்பது போல் இந்த அச்சிட்ட காகிதமும் 'கலப்பட ரூபாய்'தான். இந்த வெறும் காகித ரூபாய்களும் புழக்கத்துக்கு வந்து, ஏற்கனவே செலாவணியிலுள்ள ரூபாய்களோடு சேருகிறது. உற்பத்தி அதிகம் பெருகாத நிலையில் மக்களின் செலாவணியிலுள்ள ரூபாய் நோட்டு மட்டும் பெருகுவதால் விலைவாசி உயர்கிறது. அதாவது புதிய ரூபாயைக் கொண்டு முன்பு வாங்கிய அளவுக்குப் பண்டங்களை வாங்க இயலுவதில்லை. இப்போது அதிக விலை கொடுத்தே எந்தப் பண்டத்

மகாத்மாவின் மணிமொழி

எங்குமே எனக்கு அந்தஸ்து வேண்டும் என்று நான் விரும்பவில்லை. அந்தஸ்து என்பது தர்பார் நடத்துகிற அரசர்களுக்கே வேண்டியது. நானோ ஒரு வேலைக்காரன். ஹிந்துக்களின் தாசன். அதே அளவுக்கு முஸல்மான்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் பார்ஸிகளுக்கும், யூதர்களுக்கும் தாசன். வேலைக்காரனுக்குத் தேவைப்படுவது அன்புதான்; அந்தஸ்து அல்ல. நான் விசுவாசமாக வேலை செய்கிற வரையில் எனக்கு இந்த அன்பு கிடைக்கும் என்பது உறுதி.



தையும் வாங்க நேருகிறது. 'வரி' என்று இல்லாமல் 'விலை அதிகரிப்பு' என்ற பெயரில் மக்கள் தமது பணத்தை இழக்கின்றனர். புழக்கத்திலுள்ள ரூபாயோடு புதிய ரூபாயைச் சேர்த்து அதன் மதிப்பைச் சர்க்கார் நீர்த்துப் போகச் செய்வதே ஏழை மக்களைப் பாலில் தண்ணீரை ஊற்றி விற்கத் தூண்டுகிறது; அல்லது இதர விதங்களில் கலப்படம் செய்ய உந்துகிறது.

ரூபாயின் மதிப்புக் குறைவதால், சர்க்கார் காரியாலயங்களிலும் இதர நிறுவனங்களிலுமுள்ள அதிகாரிகளிலிருந்து தொடங்கி, நம்மிடம் கூலி பெறும் எளிய தொழிலாளர்கள் வரையில் அனைவரும், அவர்களுக்கு எவ்வளவு வருமானம் என்று சொல்லப்படுகிறதோ அதற்குக் குறைவான ஒன்றையே உண்மை மதிப்பில் பெறுகின்றனர். மக்களின் பார்வைக்குத் தெரியாமலே இப்படி ஒரு மறைமுக வரி போட்டு பட்ஜெட் சரிக்கட்டப்படுகிறது. விலை உயர்கிறது என்று மட்டுமே பாமர மக்கள் காண்கின்றனர். உண்மையில் விலை உயரவில்லை; காகித ரூபாய்தான் மதிப்பில் தாழ்ந்து வருகிறது.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

பஞ்சம் பஞ்சாய்ப் பறக்கட்டும்!

சென்னைமாநகரில் உள்ளவர்கள் கோடை வருவதற்கு முன்பே இப்போதிருந்தே குடி தண்ணீர்ப் பிரச்னையையும் நினைத்துக் கலங்குகின்றனர். கிருஷ்ணா நதி, வீராணம் ஏரி என்றெல்லாம் பல்லாண்டுகளாகப் பேசப்பட்ட போதிலும் இவற்றில் ஒன்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் இன்னும் செயலுருவம் கொள்ளாதது அலுப்பும் சலிப்பும் ஊட்டுவதாக உள்ளது.

சென்னை மட்டுமின்றித் தமிழகத்தையே கவலையில் ஆழ்த்தும் தகவல் வெளியாகியுள்ளது. சென்ற ஆண்டில் ராஜஸ்தானத்தில் ஏற்பட்ட வறட்சி நிலைக்குச் சமமான கொடுமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறதென்று அமைச்சர் மதியழகன் கூறியுள்ளார். மழையின்மையால் பயிர்கள் விளைச்சல் குன்றிப் பாழாகியுள்ளன. தண்ணீர் இல்லாமல் கால்நடைகள் பெரும் அவதிக்கு ஆளாகியுள்ளன. ஓரிரு மாவட்டங்களில் நிலைமை மிக மோசமாக இருப்பதோடு மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதையுமே வறட்சி நிலை மிகவும் பீடித்திருப்பதாக மந்திரி கூறியிருக்கிறார்.

மத்திய சர்க்காரிலிருந்து ஒரு லட்சம் டன் அரிசி பெறும் முயற்சி பலிதமாயின் உணவுப் பிரச்னை ஓரளவு தீரும். தமிழகத்தின் நியாயமான கோரிக்கைக்குத் தில்லி செவிசாய்க்கும் என நம்புகிறோம்.

இத்தகைய இன்னல்களிடையே கொஞ்ச நஞ்சம் தானியம் விளைவிப்பவர்களையும் கடுமையான கொள்முதல் கட்டுப்பாடுகளால் ஆயாசப்படுத்தி, ஊக்கத்தைக் குலைக்காமலிருக்க வேண்டும். தானியம் விளைவிப்பவர்களும், பஞ்ச நிலையினால் தாங்கள் பெருமளவு லாபம் அடிக்கலாம் என்கிற துர் எண்ணத்தைக் களைந்து, தங்களால் இயன்ற அளவுக்கு நியாய விலையில் தானியத்தை வழங்க முன்வரவேண்டும்.

தீவிர சாகுபடித் திட்டங்களை எவ்வளவு முடுக்கி விட்டாலும், வானம் பொய்த்து விட்டால் மனித முயற்சி வெற்றி பெற முடியாது. பதினேழாண்டுகளுக்கு முன்பு ராஜாஜி முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற போது, 'ஈசுவர அநுக்கிரகத்தால்தான் மழை பெய்யும்; எல்லோரும் பிரார்த்தனை புரியுங்கள்' என்றார். மக்கள் அந்த மகானின் வாக்குப்படியே செய்தனர். மழையும் கொட்டு கொட்டு என்று கொட்டியது. இன்று அதை நினைவுகூர்ந்து, செயலாக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

மனிதர்களுடைய நற்பண்புகள் வறண்டால் வானம் பொய்த்து நாடும் வறட்சி அடையும் என்பது ஆன்றோர் கருத்து. நல்லாட்சியும், மக்களின் நற்பண்புமே இயற்கைச் சக்திகளை மனித சமுதாயத்துக்கு அநுகூலமாக்கித் தரும். மனித அறிவுகொண்டு என்னதான் திட்டம் தீட்டினாலும், தேச சுபிட்சம் நம்மை மீறிய ஒரு மகாசக்தியின் கையிலேயே உள்ளது என்பதைப் புரிந்து கொண்டு எளிமையுடனும் பக்தியுடனும் பிரார்த்தித்து நெஞ்சை ஈரமாக்கிக் கொண்டால் நீர்வள, நிலவளங்கள் பெருகும்; பஞ்சமும் பஞ்சாகப் பறக்கும்.

புதுதில்லி சங்கீத நாடக அகாடமி 1968க்கான பரிசுகள்.



※

வீணை :

ஸ்ரீ கே. எஸ். நாராயணசுவாமி



கலைஞர்களுக்கு உப ராஷ்டிரபதி ஸ்ரீ வி. வி. கிரி பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்.

※

கர்நாடக சங்கீதம் :

ஆலத்தூர் ஸ்ரீ சீனிவாச அய்யர்



புதுதில்லி ரவீந்திர பவனில் இந்நிகழ்ச்சி பிப்ரவரி 25ல் நடைபெற்றது.

※

பரதநாட்டியம் :

ஸ்ரீமதி கமலா

ராஜாஜியின் கருத்துக்கள்

ஜனநாயகம் என்பது உபயோகமற்ற ஒன்றாக ஆவதைத் தடுக்க வேண்டுமாயின், நாம் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. இவற்றில் முதன்மை பெறுகிற விஷயம் வாக்காளர் தேர்தல் சாவடிக்கு நடந்தோ, வாகனங்களிலோ செல்ல அவசியமில்லாமல், தங்கள் வீட்டு வாசலிலேயே வாக்குப் பதிவு செய்ய வசதி தருவது.

புதிய தேர்தல் தலைமை அதிகாரி இவ்விஷயத்தை ஆராய்ந்துகொண்டிருப்பது கண்டு உற்சாகம் அடைகிறேன். நடைமுறைக்கு உதவாத ஆதரிசக் கருத்து என்று கருதி இந்த எண்ணம் கைவிடப்பட மாட்டாது என நம்புகிறேன். நடமாடும் வாக்குச் சாவடிகளைக் கொண்டு வாக்காளர்களிடமிருந்து அவர்களது வீட்டிலேயே வாக்குப் பெற்றால்தான் இன்று தேர்தலில் காணும் பலவித ஊழல்களையும் அச்சுறுத்தல்களையும் தடுக்க முடியும்.

ஒருவர் அதிகார ஸ்தானம் பெறுவது மக்களுக்குத் தேர்வு செய்வதில் உள்ள உரிமையைப் பொறுத்ததே. இவ்வுரிமையை வாக்காளர்கள் சுதந்திரமாகப் பிரயோகிக்க விடாமல், அதிகாரத்தை நாடும் வேட்பாளர்கள் வெற்றி பெற முயல்கின்றனர். இதனால் பலவிதமான லஞ்ச ஊழல்கள் பிறக்கின்றன. 'இதைச் செய்வோம்; அதைச் செய்வோம்' என்று வாக்காளர்களுக்கு வாக்குறுதிகளும் தரப்படுகின்றன. தேர்தலில் எல்லா வேட்பாளர்களும் தமக்காகப் பிரசாரம் செய்வதைத் தவிர்ப்பதற்கில்லை. ஆனால் இதிலிருந்து விளையக்கூடிய தீமைகளை அதமபட்சமாகக் குறைப்பது சாத்தியமே.

இதோடு, ஒருவர் மந்திரியாகப் பதவி ஏற்றுவிட்டால், அதன் பின் அவர் எல்லா மக்களுக்கும் தம்மைச் சேவகராகக் கருத வேண்டுமேயன்றி, தம்மைத் தேர்தலுக்கு நிறுத்தி வைத்த கட்சிக்கு மட்டும் பற்று உள்ளவராக எண்ணலாகாது. இதை ஆட்சி முறையின் அடிப்படை விதியாகச் செய்வதும் சாத்தியமே. ஒருவரைத் தேர்தலுக்கு நிறுத்தி வைக்கும்போது, அவரைக் கட்சியின் பிரதிநிதியாக மட்டுமின்றி, எல்லா மக்களின் பிரதிநிதியாகவும் நிறுத்தி வைப்பதாக அரசியல் கட்சிகள் உணர வேண்டும்.

* * *

தில்லியின் ஆட்சியாளரும், ராஜ்யங்களின் ஆட்சியாளர்களும் ஒரே கட்சியினராக இருந்தபோது சரியாகச் செயல்பட்டு வந்த சில முறைமைகள் இன்று அறிவுக்குப் பொருந்தியனவாகவோ, நடைமுறைக்குச் சௌகரியமாகவோ இரா. ஒரு ராஜ்ய மந்திரி சபையின் கொள்கைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கவர்னரொருவர் அந்த மந்திரி சபையினால் எழுதப்பட்ட உரையைப் படிக்குமாறு தம்மையே நிர்ப்பந்தம் செய்து கொள்ள முடியாது. இவ்விதம் கவர்னர் உரையை ஒரு கட்டாயச் சடங்காக நிறைவேற்றுவதில் எவ்வித லாபமும் இல்லை.

மத்திய சர்க்காரால் நியமிக்கப்படும் கவர்னர், அரசியல் கொள்கைகள் காரணமாக ராஜ்யத்தின் நிரந்தரச் சர்க்கார் ஊழியர்கள் பாதிக்கப்படாமல் காப்புத் தருவதற்குப் பொறுப்புப் பெற்றிருக்க வேண்டும். இதில் அவரே தலையாய அதிகாரம் படைத்திருக்க வேண்டும். சர்க்கார் ஊழியர்களின் நியமனம், நடத்தை ஆகியவற்றைப் பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன்களும், கவர்னர்களும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

கட்சிப் பற்றின்றி, சட்டத்தையும் ஒழுங்குப்பாட்டையும் காப்பதில் கவர்னருக்கே விசேஷ அதிகாரம் இருக்க வேண்டும்.

இவ்வாறு தம் பொறுப்பிலுள்ள விஷயங்களைக் குறித்து கவர்னர், மேல் சபை கீழ்சபை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தலாம். ராஜ்யத்தின் சூழலுக்குப்

இசைக் கோயில் திருப்பணி

திருவையாற்றிலுள்ள சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் சமாதி உடனடியாகத் திருப்பணி செய்தாக வேண்டிய நிலையில் உள்ளது. இந்த நல்ல காரியத்தைச் செய்து, புனித சங்கீத ஆலயமாகத் திகழும் சமாதிக்குக் கும்பாபிஷேகம் நடத்த சென்னை சத்குரு சங்கீத சமாஜத்தினரும் பெங்களூர் நாகரத்தினம்மாள் டிரஸ்டும் ஒன்று சேர்ந்து ஒரு குழு நிறுவியுள்ளனர்.

பெரிய நன்கொடைகளாக ஒருசிலவற்றைத் திரட்டி இந்தத் திருப்பணியை நிறைவேற்றிவிட முடியும். ஆயினும் நம் பொதுமக்களுக்குத் தியாகைய சுவாமிகளிடம் உள்ள பக்திக்கும், அவர்களுடைய சங்கீத ரசிகத் தன்மைக்கும் ஒரு ஸ்தூல வடிவம் தரத் திருப்பணிக் குழுவினர் வழிசெய்திருக்கிறார்கள். அதாவது மக்கள் அனைவரும் இந்தக் கைங்கரியத்தில் கலந்து கொள்ளும் வகையில் 1 ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் மதிப்பிட்ட மூன்று வகைக் கூப்பன்களை வெளியிட்டுள்ளனர். எந்த ஒரு தனி மனிதரிடமிருந்தும் 10 ரூபாய்க்கு அதிகமாகப் பெறுமலே, ஏராளமான அன்பர்களின் காணிக்கையைப் பெற்று, பல துளி பெருவெள்ளமாகத் திருப்பணி நடத்த உத்தேசம். உங்கள் ஊரிலும் இக்கூப்பன்களை விநியோகிக்க அன்பர்கள் வருவார்கள். அப்போது பத்தோ, ஐந்தோ, குறைந்தது ஒரு ரூபாயோ தந்து ஒரு கூப்பன் வாங்கி சங்கீத சத்குருவின் சமாதித் திருப்பணி நிறைவு பெற அவசியம் உதவுவீர்கள் என நம்புகிறோம்.

பொருத்தமானது என அவர் கருதுகிற கருத்துக்களை மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட கட்சிப் பற்றற்ற பிரதிநிதி என்கிற முறையில் அவர் எடுத்துக் கூறலாம். ராஜ்யத்தின் ஆட்சிக் கொள்கைகளை விளக்கும் பொறுப்பை முதன் மந்திரிக்கே விட வேண்டும்.

இன்று இந்தியாவின் அரசியல் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை உத்தேசித்து, மந்திரி சபையின் கொள்கைகளை விளக்கி கவர்னர் உரையாற்றுகிற சடங்கு காலத்துக்கு ஒவ்வாதது என்று உணர்ந்து கைவிட வேண்டும்.

இதற்காகச் சம்பிரதாயங்களை மாற்றிக் கொள்ள நேரிடும். ஒருவேளை அரசியல் சாஸனத்தையே மாற்றவும் நேரலாம். எப்படியாயினும், மாறுதல் தேவை. அறிவுக்குப் பொருந்ாதவற்றை நீடிப்பதற்கில்லை. ஒருவருடைய இதயத்துக்கு ஏற்காதவற்றை அவர் சொல்லித்தானாக வேண்டும் என்று அச்சுறுத்துவதாலோ, பலவந்தப்படுத்துவதாலோ யாருக்கும் நல்லதில்லை.

❖❖❖

மேற்கு வங்காள விவகாரத்தை மேலும் பார்ப்போம்: மந்திரி சபை தயாரித்த உரையை அப்படியே முழுவதும் கவர்னர் தமதாக ஏற்று, சட்டசபைகளின் கூட்டுத் தொடர் தொடக்கத்தில் படித்திருக்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இதற்கு நமது அரசியல் சாஸனத்திலோ, இதுவரை நடைமுறைக்கு வந்துள்ள சம்பிரதாயங்களிலோ எவ்வித அதிகாரபூர்வமான சான்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

கவர்னரின் உரை, புதிய மந்திரி சபை இனி கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கைகளின் அறிக்கையாகவே உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இடைத் தேர்தல்களுக்கு **முன்பு** நடந்த நிகழ்ச்சிகள் பற்றிப் புதிய மந்திரி சபைக்கெனச் சில அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் புது சட்டசபையில் கவர்னர் நிகழ்த்த வேண்டிய உரையைத் தயாரிக்கும் போது அதில் இந்த அபிப்பிராயங்களை உள்ளடக்குவது நியாயமல்ல. இந்த அபிப்பிராயங்களை கவர்னரும் ஏற்று, தமது பேச்சில் வெளியிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. மந்திரி சபையின் ஆலோசனைப்படி **செயல் எடுக்க** கவர்னர் கடமைப்பட்டுள்ளார். ஆனால் இது புதிய சர்க்காரின் செய்கை பற்றிய விஷயம். இவ்விதம் காரியம் செய்வதில் கவர்னரும் மந்திரி சபையும் ஒன்றுபடுவதை வைத்துக் கொண்டு, மந்திரி சபை தோன்று முன்பே நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அரசு கொண்டிருக்கும் கருத்துக்களையும் கவர்னருடையதாக்க வேண்டும் என்பது பொருந்தாது. மேற்கு வங்க சர்ச்சைக்குக் காரணமான உரைப் பகுதி — கவர்னர் படிக்காத பகுதி— இடைத் தேர்தலுக்கு **முன்** நடந்த சம்பவங்கள் பற்றிய கண்டனமேயாகும். இது குறித்து கவர்னர் மீது குறை கூற மேற்கு வங்க மந்திரி சபைக்கு எவ்வித நியாயமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

❖❖❖

வங்காளத் தேர்தலில் காங்கிரஸுக்கு இழைக்கப்பட்ட அவமானமும் தோல்வியும் அக்கட்சிக்கு வேண்டியதே. அது குறித்து நான் வாஸ்தவத்தில் மகிழ்ச்சியே அடைந்தேன். ஆனால் 'காங்கிரஸ் தோற்றது' என்ற இந்த அம்சத்தை விடுத்துப் பார்ப்போமானால் அகில இந்தியாவும் பூஜிக்கும் தேசபக்தர்களை ஈன்றெடுத்த மகத்தான வங்கம் இன்று விவேகத்திலிருந்து எதேச்சாதிகாரத்துக்குத் திரும்பிவிட்டதே என்று விசனிக்க வேண்டியிருக்கிறது.

வங்கத்தின் புதிய ஆட்சி குறித்த என் பயம் பொய்த்துப் போகக் கூடும் என்று நம்புகிறேன். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியிருப்பினும் புதிய வங்காள சர்க்கார் இன்றுள்ள நிலையிலிருந்து வருங்காலத்தில் மாறுபடலாம் என நம்புகிறேன். உழவுக்கும் தொழிலுக்கும் புதிய

அரசாங்கம் ஆதரவு தந்து, மூலதனம் போடுபவர்களுக்கும்உழைப்பை அளிப்பவர்களுக்கும் இடையில் சுமுகமான உறவு வளரத் துணை புரிந்து, மக்கள் அனைவருக்கும் சுபிட்சம் விளைவிக்க உதவும் என நம்புவோம். அப்போது தான் வங்கம் தனக்குத் தானே உண்மையாக நடந்து கொண்டதாக ஆகும். அப்போது தான் அம்மாநிலத்தில் தோன்றிய மகாத்மாக்களிடம் வங்கம் விசுவாசத்துடன் நடந்துகொண்டதாக ஆகும். கம்யூனிஸ்ட் சின்னமான சுத்தியலும் அரிவாளும் உண்மையிலேயே தொழில் வளர்ச்சிக்கும் விவசாய அபிவிருத்திக்கும் சின்னமாகப் புதிய பொருள் பெறட்டும்!

ஃஃஃ

உத்தரப்பிரதேசத்திலும் பீஹாரிலும் காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வந்துவிட்டது என்று பத்திரிகைத் தலைப்புகள் கூறுகின்றன. காங்கிரஸ் முதன் மந்திரிகள் பதவிப் பிரமாணம் எடுத்திருப்பது உண்மை. ஆயினும் பெரும்பான்மை பலம் பெறுவதற்காக காங்கிரஸல்லாதார் சிலரின் ஆதரவைப் பெற்றே மந்திரி சபைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் காங்கிரஸல்லாத அங்கத்தினர்களின் தயவைப் பொறுத்தே இந்த மந்திரி சபைகள் நடக்க முடியும் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

ஃஃஃ

ருஷியப் பகுதியின் அச்சுறுத்தல்களால் கலக்கமுறாமல், மார்ச் 6ந் தேதி மேற்குப் பெர்லினில் ஜனாதிபதி தேர்தலை நடத்தியதன் மூலம் மேற்கு ஜெர்மனி தார்மிக அடிப்படையில் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர் கொண்ட சபையில் லூப்கேக்குப் பிறகு அப்பதவிக்கு வர ஹைனமன்னை அன்று தேர்ந்தெடுத்தது. ரத்தம் சிந்தாமலே தீரத்தைக் காட்டிய மாபெரும் சாதனையாகும்.

ஃஃஃ

பல்வேறு மக்களின் நன்னெறிக் கோட்பாடுகளிடையே மாறுபாடுகள் உள்ளன. இருப்பினும் ஒரு சில கோட்பாடுகள் அனைத்துக்கும் சாரமாயிருப்பதைக் காண்கிறோம். உலகில் ஒழுங்கு நடத்தைக்கான நாகரிகக் கோட்பாடுகளை மதமே அளிக்கிறது. மனிதர்கள் எதையேனும் வழிபட்டாக வேண்டும் என்பது எல்லோருக்கும் பொதுவாக உள்ளது. விக்கிரக ஆராதனை, அல்லது ஒரு தலைவரை வழிபடுவது, அல்லது வேறுவித பூசனை — யாதாயினும் வழிபட வேண்டும் என்பதில் மக்களுக்குப் பொதுவான பசியிருக்கிறது. இது மனித இயற்கையின் அங்கம். இதைத் தவிர்க்க முடியாது. இந்தப் பசி ஏதேனும் ஓர் உருவம் எடுத்தே தீருகிறது. எந்தத் தெய்வத்தையும் வழிபடக் கூடாது என்று ஒரு பெரியவர் போதித்தால் கூட, அப்படித் தடுத்தவரே பிறகு கடவுளாக்கப்பட்டு வழிபாட்டுக்கு இலக்காகிறார்!

வாழ்க செல்லம்மாள்!

தமிழகத்திலே உள்ள சிரிய பள்ளிகளுள் ஒன்று எனப் பெயரெடுத்தது லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி. அங்கு ஆண்டுதோறும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதும் மாணவிகளில் 80 சதவிகிதத்துக்குக் குறையாமல் தேர்வு பெற்று வெளியேறுகின்றனர். இதிலிருந்து அங்கு அளிக்கப்படும் கல்விப் பயிற்சியின் தரத்தை ஒருவாறு ஊகிக்கலாம். அதற்காக மட்டும் அப்பள்ளி பெயர் எடுத்து விடவில்லை. அப்பள்ளியில் பாரதப் பண்பை, முக்கியமாகப் பெண்களுக்கு வேண்டிய பாரத நாட்டுப் பெண்குலப் பெருமைகளையெல்லாம் சிறு வயது முதலே புகட்டி யனுப்புகிறார்கள் என்பதால் தனிப் பெயர் எடுத்துள்ளது. இவ்வளவுக்கும் காரணமாக இருந்தவர் அப்பள்ளியின் தலைமையாசிரியராக இருந்து அரும்பணியாற்றிவந்த ஸ்ரீமதி செல்லம்மாள் எம். ஏ., எல். டி. அவர் இந்தப் பள்ளியாண்டுடன் தமது பதவிக் காலம் முடிந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு அவருடன் பணியாற்றிய ஆசிரியைகளும், பழைய மாணவிகளும், தாய்மார்களும், இன்றைய மாணவிகளும் சேர்ந்து இனிய பிரிவு உபசார வைபவம் நடத்தி இருக்கிறார்கள். அவ்வமயம், அவர் பெயரில் "செல்லம்மாள் பால வித்தியாலயம்" என்று பாலர் பள்ளி தொடங்க ஒரு சிறு நிதி அளித்திருக்கிறார்கள்.





ஸ்ரீமதி செல்லம்மாள்

ஸ்ரீமதி செல்லம்மாளின் வாழ்க்கை ஒரு தியாக வாழ்க்கை. சிறு பிராயத்திலேயே சகோதரி சுப்புலட்சுமி அம்மாளின் நிழலில் ஒண்டிய அவர் வாழ்க்கை முழுவதையும் பெண் கல்விக்கே அர்ப்பணித்தார். ஆம்! சுமார் 34 ஆண்டுகள் ஆசிரியப் பணி புரிந்திருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். தாம் எந்தப் பள்ளியின் உயர்வுக்காக உழைத்தாரோ அந்தப் பள்ளிக்கே தாம் சம்பாதித்துச் சேர்த்த ரூபாய் ஐம்பதாயிரத்தையும் நன்கொடையாக அளித்துவிட்டார்.

இப்படி எல்லா விதத்திலும் லட்சிய ஆசிரியையாகத் திகழும் ஸ்ரீமதி செல்லம்மாள் பெயர் என்றும் நிலைத்து நிற்க அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாம் முனைந்து நின்று முயலும்போது அம்முயற்சி பெருவெற்றியடையும் என்பதில் என்ன சந்தேகம்?

வாழ்க ஸ்ரீமதி செல்லம்மாள்! வாழ்க செல்லம்மாள் பால வித்தியாலயம்! வாழ்க லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி!


ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்
ஐடெக்ஸ் கண்மை
ஐடெக்ஸ் பிந்தி
குங்கும் சாந்து
ஐடெக்ஸ் குங்கும் பேஸ்ட்
EYETEX
ARAVIND LABORATORIES
P. B. 1415., MADRAS-17


VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEEN
வீணா
Veena • எம்ப்ராய்டரீஸ்
S. S. M. பிரதர்ஸ் (பி) லிட்.,
அமர்ஜோதி டிரேடர்ஸ்

அயராத உழைப்பின் அபார சாதனை!

சிறிய ஆனால் கச்சிதமான அக்கட்டடத்தினுள் அடி வைத்ததும் நம்மை இன்முகத்துடன் வரவேற்கிறார் கம்பெனி முதலாளி திரு பி. தங்கராஜ். பார்த்தால் ஒரு தொழிற்சாலைக்கு அதிபர் என்று கூறமுடியாத அளவுக்கு எளிமையான தோற்றத்துடன் காணப்படும் அவர் தம் சுயமுயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வெற்றி கண்டவர்.

மதுரையைச் சேர்ந்த தங்கராஜ் வறுமையின் காரணத்தால் ஏழாவது வகுப்புக்கு மேல் படிப்பைத் தொடர முடியவில்லை. மாதம் ஆறு ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு மொத்தமாக விற்கும் பலசரக்குக் கடையில் வேலைக்கு அமர்ந்தார். அவ்வப்பொழுது 'சரக்கு' சப்ளை செய்யப் பல்வேறு கடைகளுக்குச் செல்ல நேர்ந்த அவர், கற்பூரம் குறைந்த விலைக்கு விற்கப்படாததைக் காண நேர்ந்தது. அந்தக் காலத்தில் கால் அணாவுக்குக் கற்பூரம் தேவைப்பட்டவர்களும் வேறு வழியின்றி இரண்டு அணாவுக்கும் நான்கு அணாவுக்கும் தங்கள் தேவைக்கு அதிகமாக வாங்கிக் கொண்டு செல்வதைப் பார்த்த தங்கராஜ் தாமும் ஓர் எட்டணா கற்பூரத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்தார். அந்தக் கட்டிக் கற்பூரத்தை மாத்திரை அளவுக்குப் 'பில்லை'க் கற்பூரமாக ஆக்கிக் குறைந்த விலைக்கு விநியோகிக்க முடியுமா என்ற ஆராய்ச்சியில் இறங்கினார். அவர் முயற்சி வீண் போகவில்லை. விளைவு: சிறிது நாட்களில் மாத்திரைக் கற்பூரம் மார்க்கெட்டுக்கு வர ஆரம்பித்தது. அதற்கு நல்ல கிராக்கியும் ஏற்படவே, இவ்வளவு நாட்களாகக் கட்டிக் கற்பூரத்தைக் கைகளினாலேயே மாத்திரை அளவுக்கு மாற்றியவருக்கு அவைகளை இயந்திரங்கள் மூலம் உருமாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தாமே அந்த இயந்திரங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதிலும் வெற்றியைக் கண்டார். தொடர்ந்து சில வருட காலம் கற்பூர வியாபாரத்தையே செய்து வந்தார்.





நாட்கள் நகர்ந்தன. தங்கராஜ் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு வந்தார். ஒரு குழந்தையும் பிறந்தது. மனைவியின் ஆரோக்கியத்தைக் கருதி ஓவல்டினும் ஹார்லிக்ஸும் கொடுக்க வேண்டி வந்தது. நண்பர் ஒருவர் இவரிடமிருந்து இருபத்தி ஐந்து ரூபாய் வாங்கிக் கொண்டு ஓவல்டின், ஹார்லிக்ஸ் வாங்கித் தருவதாகக் கூறித் திரும்பி வராமலேயே இருந்து விட்டார். ஏமாற்றம் அடைந்த தங்கராஜின் மூளை மீண்டும் ஆராய்ச்சியில் இறங்கிற்று. ஓவல்டின் போலவே சத்துள்ள ஓர் உணவை ஏன் நாமே தயாரிக்கக் கூடாது என்ற எண்ணம் அவரிடம் மேலிட்டது. ஒரு டின் ஓவல்டின் வாங்கிக் கொண்டார். மனைவிக்காக மட்டுமல்ல; மக்களுக்காகவும்கூட! அதை ஆராய்ந்து அதில் அடங்கியிருந்த மூலப் பொருள்களை அறிந்து கொண்டார். அதன்படியே தாமும் ஒரு சத்துள்ள உணவைத் தயார் செய்தார். இதுதான் ஆல்விடோன். இவரது புதிய தயாரிப்பை வாங்க அதிகம் பேர் முன் வரவே சொற்ப காலத்தில் அதிக அளவு ஆல்விடோன் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தீவிரமாகச் சிந்தித்து ஆல்விடோனை அதிக அளவில் தயாரிப்பதற்கு வேண்டிய இயந்திரங்களையும் தாமே கண்டுபிடித்தார். மண்ணடியிலும் மூர்மார்க்கெட்டிலும் மிஷின்களுக்கு வேண்டிய தனித் தனிப் பகுதிகளைக் குறைந்த விலைக்கு வாங்கி இணைத்து வெற்றி கண்டார்.

"இதற்கு ஒரு தொழிற்சாலை நிறுவ நான் பட்ட கஷ்டங்களைச் சொல்லிச் சாத்தியப்படாதுங்க! பரங்கிமலையில் இடம் கிடைத்தும் 'லைசென்ஸ்' கிடைக்கவில்லை. மேலதிகாரிகள் என்னைப் பார்க்க மறுத்து விட்டனர். எனக்கோ அதிகம் ஆங்கிலம் தெரியாது. எனக்கு ஏற்பட்ட இன்னல்களை

யும் இடைஞ்சல்களையும் சமாளித்து 1957ல் இத்தொழிலை ஆரம்பித்ததை இப்பொழுது நினைத்துப் பார்த்தால்கூட ஆச்சரியமாகத் தான் இருக்கிறது'' என்கிறார் திரு தங்கராஜ்.

''ஆல்விடோன் என்று இதற்கு ஏன் பெயர் வைத்தீர்கள் ?''

''முதலில் ஒவல்டோன் என்றுதான் பெயரிடத் திட்டமிட்டிருந்தேன். இந்தப் பெயர் ஒவல்டினையே ஒத்திருந்ததால் அதைப் பதிவு செய்ய மறுத்து விட்டனர். எனவே, ஆல்விடோன் என்று மாற்றிக் கொண்டேன். அதாவது எல்லா வைட்டமின்களும் ஒரு பொருளில் (All Vitamins in one) என்ற கருத்தில்தான்.''

- தொழிற்சாலைக் கட்டிடம்
- கிரிஸ்டல்கள் விழுவதை விஜயராஜ் கவனிக்கிறார்.
- மிக்சர் அரைக்கப்படுகிறது.
- டப்பாக்களுக்கு 'சீல்' வைக்கப்படுகிறது.





ஆல்விடோன்'' தயாரிப்பு ஒரு மாதிரி ஸ்திரமானதும் இவர் சும்மா இருந்துவிடவில்லை. ஹார்லிக்ஸுக்கு இணையாகப் பிரிதொரு உணவு தயாரிக்க விரும்பினார். 'ஆல்விமில்க்' அறிமுகமாயிற்று. வசதியும் ஓரளவு பெருகிற்று. பல்லாவரத்தில் சொந்தமாக மனை வாங்கிக் கொண்டு தம் தொழிற்சாலைக்கு ஒரு கட்டடத்தையும் எழுப்பிக் கொண்டார்.



திரு பி. தங்கராஜ்

இவ்வளவு நேரம் தங்கராஜுடன் பேசிக் கொண்டிருந்த நாம் அவரது தொழிற்சாலையைப் பார்வையிடச் செல்கிறோம்.

ஆல்விடோன் தயாரிக்க அத்தியாவசியமான மூலப் பொருள்களான பால் பவுடர், 'பார்லி' மால்ட், கோக்கோ ஆகிய மூன்றும் ஓர் இயந்திரத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு குழம்பு போல் ஆக்கப்படுவதைப் பார்க்கிறோம். பிறகு அவை ஒரு தட்டில் வைக்கப்பட்டுப் பிரிதொரு இயந்திரத்தில் ஆவிமூலம் உலர்த்தப்படுவதைக் காண்கிறோம். உலர்த்தப்பட்ட 'மிக்சர்' ஓர் அரைக்கும் மிஷினில் கட்டிகளாகப் பெயர்த்துப் போடப்பட, அவை சிறு சிறு 'கிரிஸ்டல்'களாக வெளிவருகின்றன. இறுதியாக, 'மெட்டல் பாக்ஸ்' கம்பெனியிலிருந்து தருவிக்கப்படும் 'டின்'களில் அடைக்கப்பட்டு வேறொரு இயந்திரத்தின் மூலம் அவற்றுக்கு 'ஸீல்' வைக்கப்படுகிறது. இங்கு காணப்படும் ஆறு இயந்திரங்களில் நான்கு தங்கராஜின் கரங்களாலேயே உருவாக்கப்பட்டவை.

தங்கராஜ் இப்போது 'இன்ஸ்டன்ட் டீ' (Instant Tea) தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார். 'நெஸ் கஃபே' காப்பிபோல் இந்த டீத் தூளை நேராகப் பாலில் கரைத்துக் குடித்து விடலாம். தவிர இவரது மகன் விஜயராஜ் 'கோக்கோ டீ' என்னும் புதியதொரு கண்டு பிடிப்பில் இறங்கியுள்ளார். நாக்கில் இருக்கும்பொழுது கோக்கோவின் ருசியுடைய இப்பானகம் தொண்டைக்குள் சென்றதும் டீயாக மாறும் என்கிறார்!

ஒரு பட்டம் பெற்ற விஞ்ஞானி செய்ய வேண்டியதையும், ஒரு தேர்ச்சி பெற்ற 'மெக்கானிக்' ஆற்ற வேண்டிய பணியையும் அதிகப் படிப்பில்லாத தங்கராஜ் விடா முயற்சியையும், அயராத உழைப்பையும் மட்டுமே துணையாகக் கொண்டு சாதித்துள்ளதைக் காணும்போது நாம் வியக்காமல் இருக்க முடியுமா ?

— குட்சின்

போட்டோ : என். பாலகிருஷ்ணன்

பரத முனிவர் அளித்த நாட்டிய சாஸ்திரத்திலிருந்து பிறந்து வளர்ந்த பல கிளைகளுள் ஒரிஸ்ஸா நாட்டு நாட்டியமான ஒரிஸ்ஸியும் ஒன்று.

இந்த நாட்டியமும் பரதநாட்டியத்தைப் போலவே சமீப காலம் வரை யாருக்கும் தெரியாமல் அந்த ஊர்க் கோயில்களில் ஒளிந்து கொண்டிருந்தது. பாகவத மேளத்தையும், கூச்சிப்புடி என்று சொல்லிற ஆந்திர தேசத்து நாட்டியத்தையும் போல இந்த ஒரிஸ்ஸி நாட்டியம் கோயில்களில் ஒரு வழிபாட்டு முறையாகவே வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. இன்றைக்கும் கொனரகாவிலும், புவனேசுவரத்திலும் உள்ள கோயில்களில் இந்நாட்டியம் சிற்பங்கள் வடிவில் எழில் ததும்பக் காட்சி தருவதைப் பார்க்கலாம்.

மேலும் இது ஸ்ரீ ஜெயதேவரின் கீத கோவிந்தத்துடன் பின்னிப் பிணைந்து இணைந்தே போய் விட்டது. அதுதான் இது என்று சொல்லுமளவுக்கு ஒன்றிவிட்டது. பக்தர்கள் அனைவரும் தங்களை ராதையாகவே பாவித்துக் கொண்டு பரமாத்மாவை நினைத்து



மேடையில் ஒரு மழை



நினைத்து ஏங்கும் சூழ்நிலையில் பயிலப்பட்டு வந்துள்ள இந்த நாட்டியம் சிருங்கார ரஸத்தில் அப்படியே தோய்ந்து அமிழ்ந்து போயிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

ஸ்ரீ மங்கள்தாஸ் பக்வாஸாவின் பேத்தியான ஸ்ரீமதி ஸோனல் மான்ஸிங் மணிபுரி நடனத்திலும் பரதநாட்டியத்திலும் பயிற்சி பெற்ற பிறகு இந்த நவீனமான ஒரிஸ்ஸி நாட்டியத்தையும் விரும்பிக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கிறார். நாரத கான சபாவின் ஆதரவில் இவர் மியூஸிக் அகாடமி ஹாலில் செய்த கச்சேரியில் இவருடைய திறமை முழுதும் வெளியாயிற்று.

''மாணிக்ய வீணாம்'' என்று ஸரஸ்வதி தேவியின் துதியுடன் ஆரம்பிக்கப்பட்ட மங்கள சுலோகத்திலேயே களை கட்டி விட்டது. எளிதும் ஆடம்பரமற்ற ஒரிஸ்ஸா நாட்டு ஆடையாபரணங்களை அழகுற அணிந்து அவர் நாட்டியமாடியது குளுமையாக இருந்தது.

பிறகு அவர் ஆடிய பல்லவிகளில் அவருடைய திறமை முழுவதும் வெளிப்

படங்கள் : ☐ குருவும் சிஷ்யையும்.
☐ ஸ்ரீமதி ஸோனல் மான்ஸிங்.

பெர்க்லி-கல்கி இலக்கியப் பரிசுத்திட்டம்



பெர்க்லி — கல்கி சிறுகதைப் போட்டிகளுக்கு வந்த கதைகளைக் கீழ்க்கண்ட பஞ்சாயத்தார்கள் பரிசீலனை செய்ய விருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1. **திரு ஏ. ஜீ. வெங்கடாச்சாரியார்,**
   துணை ஆசிரியர், தினமணி, சென்னை.

2. **திரு கலி சுப்பிரமணியம்,**
   நாடகத் தயாரிப்பாளர்,
   அகில இந்திய ரேடியோ, சென்னை.

3. **ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன்,**
   தாம்பரம்.

4. **ஸ்ரீ ஜெகசிற்பியன்,**
   கோடம்பாக்கம், சென்னை.

5. **ஆசிரியர் 'கல்கி',**
   சென்னை - 31.

பட்டது. ஸ்ரீமதி ஸோனல் மான்ஸிங் ஒரு மான்குட்டி துள்ளித் துள்ளி ஓடுவதுபோல் மேடை முழுவதும் ஓடி ஓடி நாட்டியம் செய்தது மிகவும் ரம்மியமாக இருந்தது. இந்த நாட்டிய முறையை இவர் மிகவும் ஊக்கத்துடன் சிரமப்பட்டுப் பயின்றிருக்கிறார். அடவுகளும் கோவைகளும் கட்டுமாலை கட்டிக் குஞ்சலம் தொங்க விட்டாற் போல விளம்ப காலத்திலிருந்து துரித காலம் வரை களைப்பே இல்லாமல் தெளிவாகச் செய்து காட்டி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். அவருடைய பாதங்களில் காலப்பிரமாணம் ''பேஷ்'' என்று மெச்சும்படி இருந்தது.

அபிநயத்துக்கு அவர் எடுத்துக்கொண்ட பாடல்களில் இரண்டு அஷ்டபதி. இன்னொன்றும் அதே சாயலாக இருந்தது. மாயக் கண்ணனைப் பற்றியே எல்லாப் பதங்களும் இருப்பதால் அதிக வித்தியாசம் தெரியவில்லை. ஆனால் இந்த ஒரிஸ்ஸி நாட்டியமே ராதா கிருஷ்ணனை மையமாகக் கொண்டு வளர்ந்திருக்கிறது என்பதை நினைத்துக்கொண்டே பார்க்க வேண்டும்.

ஸ்ரீமதி ஸோனல் மான்ஸிங் நல்ல பண்பும் படிப்பும், ஆராய்ச்சித் திறனும் உள்ளவர். அபிநயத்துக்கு எடுத்துக்கொள்ளும் பதங்களைக் கொஞ்சம் கவனத்தோடு பார்த்துப் பொறுக்கி எடுத்துக் கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்கும். பழைமை என்பதற்காக அப்படியே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. ராதாகிருஷ்ண பாவம் மிகவும் ஜாக்கிரதையாகக் கையாளப்பட வேண்டிய விஷயம். இம்மி குறைந்தாலும் அதன் ரஸம் கெட்டுப் போகும்.

புல்லாங்குழல் வாசித்தவர் மிகவும் சுத்தமாகவும் இனிமையாகவும் குழலிசைத்தார்.

ஸ்ரீ கேளுசரம் மஹோபத்ரா குருவாகக் கிடைத்திருப்பது இந்த நாட்டியமணி செய்த பாக்கியம்.

ஸ்ரீமதி மான்ஸிங் பட்டணங்களில் மேடைக் கச்சேரி செய்வதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. அவர் போகுமிடமெல்லாம் பக்தியையும், கலை உணர்ச்சியையும் பரப்ப வேண்டும் என்று ஆசைப்படுபவர். சின்னஞ்சிறு கிராமங்களில் கூடக் கச்சேரிகள் செய்கிறார். கலைக்குத் தொண்டு புரிவதில் ஆர்வமுடையவராய் இருக்கிறார்.

''கிராமங்களில் உங்கள் நாட்டியத்தை எப்படி வரவேற்கிறார்கள்?'' என்று ஒருவர் அவரைக் கேட்டார்.

''சென்னை போன்ற நகரங்களில் ரஸிகர்கள் கைகளைத் தட்டித் தம் பாராட்டுதலைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் என் நாட்டியத்தைக் கண்ணீர் வழியப் பார்க்கிறார்கள்'' என்று சொன்னார். அதில் தொனித்த பெருமிதம் இவர் ஓர் உண்மைக் கலைஞர் என்ற எண்ணத்தை உண்டாக்கியது.

—ஆனந்தி

ஜி-11 கொண்ட சிந்தால் இப்பொழுது அதிக நறுமணமும் நுரைவளமும் கொண்டுள்ளது



உங்கள் நன்மைக்காக இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது

புதிய மீடியம் (மத்திய) சைஸ் சிந்தால் உங்கள் பட்ஜெட்டுக்குப் பொருத்தமானது. இந்த சோப், எல்லா விதங்களிலும் சொகுசுமிக்கது—எனினும் மலிவானதுதான்.

அதிக நறுமணம்—ஆழ்ந்த மணம், நீடித்திருப்பது. அதிக நுரை—மென்மையும், வளமையும் கூடியது. சிந்தாலுக்கே உரிய, ஒப்பற்ற ஜி-11 உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.



CINTHOL

பொன்னியின்

எட்டாம் அத்தியாயம்

பூதத் தீவு

வானமா தேவி இருக்கிறாளே, அவள் புத்தி விசாலத்தில் மனித குலத்தை ஒத்தவள்தான் போலும்! பரஞ்சோதியாகிய இறைவனை மனிதர்கள் தங்கள் இதய ஆகாசத்திலிருந்து நழுவிச் செல்ல விட்டு விடுகிறார்கள். பிறகு, இருண்ட ஆலயங்களின் பிராகாரங்களிலும், கர்ப்பக் கிருஹங்களிலும் லட்ச தீபம் ஏற்றி அந்தப் பரஞ்சோதியைத் தேடுகிறார்கள்!

வானமாதேவியும் அத்தகைய புத்தி சாலித்தனமான காரியத்தைத் தினந்தோறும் செய்கிறாள்! ஜோதிமயமான சூரிய பகவானைத் தன்வசத்திலிருந்து கடலில் நழுவ விட்டு விடுகிறாள். பிறகு தன் நாதனைக் காணவில்லையே என்ற கவலை அவளுக்கு உண்டாகி விடுகிறது. லட்ச தீபம் ஏற்றிச் சூரியனைத் தேடுகிறாள்! லட்ச தீபம் மட்டுமா ஏற்றுகிறாள்? கோடானு கோடி தூங்கா விளக்குகளை ஏற்றி இரவெல்லாம் அவளும் தூங்காமல் சூரியனைத் தேடிக் கொண்டிருக்கிறாள்!

வந்தியத்தேவனுக்கு உணர்வு வந்து கண்ணைத் திறந்து பார்த்தபோது, தன்



செல்வன்

அமரர் **கல்கி**

கண் முன்னே பல்லாயிரம் தீபச் சுடர்கள் மின்னுவதைக் கண்டான். எந்தக் கோவிலிலே இவ்வளவு அலங்காரமாக லட்சதீபம் ஏற்றியிருக்கிறார்கள் என்று வியந்தான். பின்னர், அவை தீபங்கள் அல்லவென்றும், வானத்தில் சுடர் விடும் நட்சத்திரங்கள் என்றும் உணர்ந்தான். படகில் தான் அண்ணாந்து படுத்



இருப்பதையும் தன் இடுப்பைச் சுற்றி ஈரத் துணியின் மீது கயிறு ஒன்று கட்டியிருப்பதையும் அறிந்தான்.

ஜிலு ஜிலு வென்று குளிர்ந்த காற்று அவன் உடல் மீது பட்டு அவனுக்கு எல்லையற்ற சுகத்தையும் அமைதியையும் அளித்தது.

அமைதியான கடலில் எழுந்த ஓங்கார நாதம் அவன் உள்ளத்தில் அபூர்வமான சாந்தியை உண்டாக்கியது.

அந்த நாதத்தினிடையே ஒரு கீதமும் கேட்டது. அது என்ன கீதம்? அதை அவன் இதற்குமுன் எங்கே எப்பொழுது கேட்டிருக்கிறான் ?

''வாரிதியும் அடங்கி நிற்க
மாருதமும் தவழ்ந்து வர
காரிகையென் உளந்தனிலே
காற்று சுழன் றடிப்பதுமேன்?
அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவதேன்?''

ஆகா! அந்த விசித்திரமான பெண்! பூங்குழலி ! சற்று நிமிர்ந்து உட்கார்ந்து எதிரே பார்த்தான். ஆம், அவள்தான் ! படகு தள்ளிக் கொண்டிருக்கிறாள் ! அந்தச் சோக கீதத்தைப் பாடிக் கொண்டு படகு வலிக்கிறாள்! காரிருளிலே ஒரு மின்னல் மின்னிப் பல பொருள்களை ஒரு நொடிப் பொழுதில் காட்டி விடுவது போல், முன்னிரவில் நடந்ததெல்லாம் வந்தியத்தேவனுக்குப் பளிச்சென்று ஞாபகம் வந்தது. அதாவது, அவன் கடலில் தத்தளித்த போது பூங்குழலியும் கடலில் குதித்து அவனை நோக்கி வந்தவரையிலேதான். பிறகு நடந்தது ஒன்றும் அவனுக்கு நினைவில் இல்லை. தன்னை அந்தப் பெண் காப்பாற்றிப் படகில் ஏற்றியிருக்க வேண்டும். படகு அசையும் போது தான் மீண்டும் கடலில் விழுந்து விடாமலிருப்பதற்காக இடுப்பில் கயிற்றைச் சுற்றிப் படகின் குறுக்குக் கட்டையில் சேர்த்துக் கட்டியிருக்கிறாள். கயிறு உடம்பின் தோலில் பட்டு வலிக்காதபடி அரை ஆடையின் மீது சுற்றிக் கட்டியிருக்கிறாள்.

இடுப்புத் துணியைச் சுற்றியிருந்த அரைச் சுருளை வந்தியத் தேவன் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பணமும் ஓலையும் பத்திரமாயிருக்கக் கண்டான். ஆகா ! இந்தப் பெண் மீது தான் சந்தேகங் கொண்டது எவ்வளவு பெரிய தவறு? வேறுவிதமான துர்நோக்கம் இவளுக்கு இருந்தால் தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அவசியமில்லையே ? கை சளைத்து உணர்விழந்த தன்னைக் கடலிலிருந்து படகில் ஏற்றுவதற்கு இவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்? எப்படித்தான் தன்னந் தனியாகச் செய்தாளோ ? அபூர்வமான நங்கை இவள் !

இதோ அவள் எழுந்திருக்கிறாளே, ஏன் ? தான் விழித்து விட்டதைப் பார்த்துவிட்டுத்தான் தன்னை நெருங்கி வருகிறாளோ? வந்து என்ன செய்யப் போகிறாள்? இல்லை, இல்லை! வேறு ஏதோ செய்கிறாள். ஆகா ! பாய் மரத்தில் பாயைக் கட்டப் போகிறாள்! எவ்வளவு கடினமான வேலை! அதுவும் தன்னந் தனியாகச் செய்வது ?

''பூங்குழலி! பூங்குழலி !''

''ஓகோ ! விழித்துக் கொண்டு விட்டாயா ?''

'' என் கட்டை அவிழ்த்துவிடு ! நானும் உனக்கு உதவி செய்கிறேன்.''

'' நீ சும்மா இருந்தால் போதும்; அதுவே பெரிய உதவி. கயிற்றை அவிழ்க்க வேண்டுமென்றால் நீயே அவிழ்த்துக் கொள்ளலாம். ஆனால் மறுபடியும் கடலில் குதித்து விடாதே!''

வந்தியத் தேவன் தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டுக் கொண்டான்.

பூங்குழலி பாய் மரத்தைத் தூக்கி நிறுத்தினாள்; அதில் பாயை விரித்துப் பறக்க விட்டாள். படகு இப்போது உல்லாசமாகச் சென்றது. விரைவாகவும் சென்றது.

''சமுத்திர குமாரி !''

'' ஏன் ?''

''தாகமாயிருக்கிறது!''

''உப்புத் தண்ணீர் குடித்திருக்கிறாய் அல்லவா ? தாகம் எடுக்காமல் என்ன செய்யும்?''

சுரைக் குடுக்கை ஒன்றை எடுத்துக் கொண்டு சமுத்திர குமாரி வந்தியத் தேவன் அருகில் வந்தாள்.

'' உனக்குச் சாப்பாடு கூடக் கொண்டு வந்தேன். நீ கடலில் குதித்த போது அதுவும் விழுந்து விட்டது ! நல்ல வேளையாக இந்தச் சுரைக் குடுக்கை தப்பிப் பிழைத்தது.''

இப்படிச் சொல்லிக் கொண்டே சுரைக் குடுக்கையை மூடியிருந்த தக்கையை எடுத்துவிட்டுக் கொடுத்தாள். வந்தியத்தேவன் அதை வாங்கித் தண்ணீர் குடித்தான்.

தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு, '' உன்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டு விட்டேன். அதற்காக வருத்தப்படுகிறேன் '' என்றான்.

''அதனால் ஒன்றும் பாதகமில்லை. நீ யாரோ ? நான் யாரோ? பொழுது விடிந்தால் பிரிந்துவிடப் போகிறோம்.''

''இப்போது நேரம் என்ன?''

''வானத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்; சப்த ரிஷி மண்டலத்தைப் பார்!'' என்றாள் பூங்குழலி.

வந்தியத் தேவன் வட திசையில் அடிவானத்தைப் பார்த்தான். அவன் படகு ஏறும் போது பார்த்ததற்கு இப்போது சப்தரிஷிகள் இடம் மாறிப் பாதி வட்டம் வந்திருந்தார்கள். அந்த அருந்ததி நட்சத்திரம் வசிஷ்டருடன் எப்படி ஒட்டிக் கொண்டே வருகிறது! அதிசயந்தான்! துருவ நட்சத்திரம் மட்டும் இருந்த இடம் விட்டு அசைய வில்லை. வானவெளியும் மூலைக் கடலும் சேரும் அந்த இடத்தில் துருவ நட்சத்திரம் யுக யுகமாக நிலைத்து நின்று வருகிறது! எத்தனை எத்தனையோ கப்பல் மாலுமிகளுக்கு வழியும் திசையும் காட்டிக் கொண்டு வருகிறது. துருவ நட்சத்திரம்!—அதை யாருக்கோ உதாரணமாகச் சொன்னார்களே? யார் சொன்னது? யாரைச் சொன்னது? ஞாபகம் வருகிறது. குடந்தை ஜோசியர் சொன்னார். இளவரசர் அருள்மொழிவர்மருக்கு வட துருவத்தை உதாரணமாகச் சொன்னார். இளவரசரைப் பார்க்கும் பேறு நமக்கு உண்மையிலேயே கிடைக்கப் போகிறதா? இந்தப் பெண்ணின் உதவியினால் கிடைக்கப் போகிறதா?

பூங்குழலி தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

''நேரம் என்னவென்று தெரிந்ததா? மூன்றும் ஜாமத்தில் பாதி நடக்கிறது. காற்று திரும்பி விட்டது. பொழுது விடிய நாகத் தீவுக்குப் போய் விடுவோம்'' என்றாள்.

''நாகத் தீவா?'' என்று வந்தியத் தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

''ஆமாம்; இலங்கையின் வடபகுதி ஓரத்தில் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நாகத் தீவு. அதில் இறங்கினால் மறுபடியும் கடலைக் கடக்கும் அவசியமில்லாமல் கரை வழியாகவே இலங்கைத் தீவை அடைந்து விடலாம்....''

''என்னை இறக்கிவிட்ட பிறகு நீ என்ன செய்வாய்?''

''என்னைப் பற்றி உனக்கு என்ன கவலை?'' என்றாள் பூங்குழலி.

''எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்தாய் அல்லவா? உன்னிடம் நான் நன்றி செலுத்த வேண்டாமா? என்னிடம் ஏதோ பிரதி உபகாரம் கேட்கப் போவதாகச் சொன்னாயே, அது என்ன?'' என்றான்.

''அந்த எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டு விட்டேன். உன்னிடம் ஒன்றும் நான் கேட்கப் போவதில்லை. நீ நன்றி இல்லாதவன்.''

அவள் அவ்விதம் குற்றம் சாட்டுவதற்குக் காரணம் உண்டு என்பதை வந்தியத்தேவன் உணர்ந்தான். மீண்டும் ஒரு தடவை அரைச் சுருளைத் தடவிப் பார்த்துக்கொண்டு ஓலை இருக்கிறது என்று உறுதி பெற்றான்.

''சமுத்திர குமாரி! நேற்று முன் இரவில் உன்னைச் சந்தேகித்து நடந்து கொண்டதை நினைத்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதற்காக என்னை மன்னித்து விடு!''

''ஆகட்டும்; நீயும் அதை மறந்து விடு! நடக்க வேண்டியதைப் பற்றி யோசி! இலங்கையில் உன்னை நான் இறக்கிவிட்ட பிறகு என்ன செய்வாய்? இளவரசர் இருக்குமிடத்தை எப்படிக் கண்டுபிடிப்பாய்?''

''இந்தக் கடலைக் கடப்பதற்கு எனக்கு உதவி செய்த கடவுள் அதற்கும் உதவி செய்வார்!''

''கடவுளிடம் உனக்கு மிக்க நம்பிக்கை போலிருக்கிறது. நம்மைப் போன்ற அற்ப மனிதர்களின் காரியங்களில் கடவுள் சிரத்தை கொள்கிறார் என்று நினைக்கிறாயா?''

''அவ்வளவு தூரம் நான் தத்துவ விசாரணை செய்ததில்லை. ஏதாவது கஷ்டமோ, அபாயமோ நேர்ந்தால் கடவுளைப் பிரார்த்திப்பேன். கடவுளும் சமயத்தில் உதவி செய்வார். இந்தக் கடலில் எனக்குப் படகு தள்ளுவதற்காகக் கடவுள் உன்னை அனுப்பி வைத்தார் அல்லவா?''

''அவ்வளவு கர்வம் உனக்கு வேண்டாம். நான் உனக்காகப் படகு தள்ள வரவில்லை. என்னை உனக்கு உதவி செய்யும்படி கடவுள் கனவிலே சொல்லி அனுப்பவும் இல்லை....''

''பின் எதற்காக நேற்று என்னைத் தப்புவித்தாய்? எதற்காக இப்போது படகு தள்ளிக் கொண்டு வருகிறாய்?''

''அதைப் பற்றி நீ கேட்க வேண்டாம். அது என் சொந்த விஷயம்.''

வந்தியத்தேவன் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். அவனுடைய கர்வங் கொண்ட உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. தன்னுடைய வீர சௌந்தரிய வடிவழகைக் கண்டு தன் பேரில் இப்பெண் மோகங் கொண்டு விட்டாளோ என்று நினைத்தான். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். இவளுடைய பேச்சும் நடவடிக்கைகளும் அம்மாதிரி எண்ண இடந் தரவில்லை. வேறு ஏதோ மர்மமான காரணம் இருக்கிறது. இவ

டைய வாயைப் பிடுங்கி அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஒரு விஷயத்தை நினைத்தால் கொஞ்சம் எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது....'' என்றான்.

"அது என்ன? உனக்குக் கூடவா கவலையா யிருக்கிறது?''

''இலங்கையில் காடும் மலையும் அதிகம் என்று சொல்லுகிறார்கள்.''

''இலங்கையில் பாதிக்கு மேலே காடும் மலையுந்தான்.''

''காட்டு மிருகங்கள் அங்கே அதிகம் என்று சொல்கிறார்கள்.''

''காட்டு யானைகள் மந்தை மந்தையாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். சில சமயம் காடுகளுக்கு வெளியிலும் யானைக் கூட்டம் வந்துவிடும்!''

''இலங்கையில் உள்ளவர்கள் காட்டு மிராண்டி மக்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''அது முழுப் பொய்.''

''அப்படியானால் சரி; நீ சொன்னால் உண்மையாகத்தானிருக்கும். அப்படிப் பட்ட காட்டுப் பிரதேசத்தில் இளவரசர் அருள்மொழி வர்மர் எங்கே இருக்கிறார் என்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.''

''அது ஒன்றும் கஷ்டமில்லையென்று சற்றுமுன் சொன்னாயே ?''

''ஆமாம்; சொன்னேன். சூரியன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியுமென்று முதலில் நினைத்தேன்.''

"இப்போது ஏன் வேறுவிதமாக நினைக்கிறாய் ?''

''சூரியனை மேகங்கள் மறைத்திருக்கலாம்; அல்லது கடலுக்கு அடியில் சென்றிருக்கலாம்.''

"இந்தச் சூரியனை எந்த மேகமும் கடலும் மறைத்துவிட முடியாது. பொன்னியின் செல்வரை மறைக்க முயலும் மேகமும் ஒளி பெறும்; கடலும் ஜொலிக்கும் !''

இளவரசரைப் பற்றிப் பேசும் போது இவளுடைய உற்சாகம் எப்படிப் பொங்குகிறது? சோழ நாட்டுப் பிரஜைகள் பலரையும் போல இந்தப் பெண்ணும் அவரைத் தெய்வமாகக் கருதுகிறாள்! அருள்மொழி வர்மரிடம் அப்படிப்பட்ட என்ன வசீகர சக்தி இருக்கும்? — இவ்விதம் மனத்தில் எண்ணிக் கொண்டு, "அப்படியானால் இலங்கையில் இளவரசரைக் கண்டு பிடிப்பது கஷ்டமில்லையென்று சொல்கிறாய்?'' என்றான்.

''சோழ சைன்யம் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போனால், இளவரசர் இருக்கும் இடம் தானே தெரிகிறது.''

''அது எப்படி? இலங்கையில் பாதி அளவு. சோழ சைன்யம் பரவியிருக்கிறது என்று கேள்விப்பட்டேனே?''

"ஆமாம் ; மாதோட்டத்திலிருந்து புலஸ்திய நகரம் வரையில் சோழர் படை பரவியிருக்கிறது என்றுதான் நானும் கேள்விப்பட்டேன்....''

"பின்னே ? அவ்வளவு பெரிய பிரதேசத்தில் இளவரசர் எங்கே இருக்கிறாரோ ? காட்டு வழிகளில் தேடிச் சென்று அவரைக் கண்டு பிடிக்க அதிக நாள் ஆகலாம். இந்த ஓலையை உடனே அவரிடம் நான் சேர்ப்பித்தாக வேண்டும். நீதான் ஓலையைப் பார்த்து விட்டாயே ? எவ்வளவு அவசரம் என்று உனக்குத் தெரிந்திருக்குமே?''

சமுத்திர குமாரி இதற்கு மறுமொழி எதுவும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

''இளவரசர் இருக்குமிடம் நிச்சயமாகத் தெரிந்தால் வீண் அலைச்சல் அலையாமல் அவர் இருக்குமிடத்துக்கு நேரே போய் விடலாம்'' என்றான் வந்தியத்தேவன்.

''அதற்கு ஒரு வழி இருக்கிறது'' என்றாள் பூங்குழலி.



''இருக்கும் என்று நம்பித்தான் உன்னைக் கேட்டேன்.''

''காலையில் நாகத் தீவில் உன்னை இறக்கி விடுவதாகச் சொன்னேன் அல்லவா ?''

''ஆமாம்!''

'' நாகத் தீவுக்குப் பக்கத்தில் பூதத் தீவு என்று இருக்கிறது.''

''தீவின் பெயரே கேட்கப் பயங் கரமா யிருக்கிறதே !''

''பயப்படாதே ! ஆதியில் அந்தத் தீவின் பெயர் போதத் தீவு. புத்த பகவான் ஆகாச மார்க்கமாக இலங் கைக்கு வந்த போது முதன் முதலில் அந்தத் தீவிலேதான் அவர் இறங் கினாராம். அங்கிருந்த அரச மரத்தி னடியில் வீற்றிருந்து புத்த தர்மத் தைப் போதித்தாராம். அதனால் போதத் தீவு என்று பெயர் வந்தது...''

''பின்னால் அது 'பூதத் தீவு' என்று ஆகிவிட்டதாக்கும்.''

'' ஆமாம் ! 'பூதத் தீவு' என்ற பெயரைக் கேட்டே உன்னைப் போல் பலர் பயங்கரம் அடைந்தார்கள். பிறகு அந்தத் தீவுக்குச் சாதாரணமாக யாரும் போவதில்லை. பூதத்துக்குப் பயப்படாதவர்கள்தான்போவார்கள்.''

'' அதாவது உன்னைப் போன்ற தைரியசாலிகள். கொள்ளிவாய்ப் பிசாசுகளுக்குப் பயப்படாதவள் அல் லவா நீ? சரி; பூதத் தீவைப் பற்றி என்ன சொல்ல வந்தாய் ?''

'' பூதத் தீவின் கரையில் ஒரு நாழிகை நேரம் நீ தாமதித்தால் 'பொன்னியின் செல்வர்' இப்போது இலங்கையில் எங்கே இருக்கிறார் என்று விசாரித்துச் சொல்வேன்....''

''பூதத்தீவில் யாரை விசாரிப்பாய்?''

''பூதத் தீவில் ஒரு பூதம் இருக்கிறது. அதை விசாரிப்பேன்....''

''அந்தப் பூதத்தை எனக்கும் காட்டு வாயல்லவா ?''

''அதுதான் முடியாது. நீ என்னைத் தொடர்ந்து தீவுக்குள் வரக் கூடாது. கரையில் படகைப் பார்த்துக் கொண்டு காத்திருப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் போய் விசாரித்துக் கொண்டு வந்து சொல்வேன்.''

''சரி, அப்படியே ஆகட்டும்!'' என் றான் வல்லவரையன்.

காற்று சுகமாக அடித்தது. பாய் மரத்தின் உதவியினால் படகு விர் ரென்று கடலைக் கிழித்துக் கொண்டு சென்றது. கடலின் ஓங்கார நாதம் கேட்டுக் கொண்டே இருந்தது.

வந்தியத் தேவனுடைய கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. விழிப்பு நிலையிலிருந்து உறக்க நிலைக்கு இலேசாக நழுவிச் சென்றான்.

ஒன்பதாம் அத்தியாயம்

''இது இலங்கை''

மறுபடியும் வந்தியத்தேவன் கண் விழித்த போது, அவன் எதிரேயும் சுற்றிலும் தோன்றிய காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. கிழக்கே வான மூகட்டில் சூரியன் உதயமாகிக் கொண் டிருந்தான். அங்கே கடல் உருக்கி விட்ட தங்கக் கடலாகித் தகதக வென்று திகழ்ந்தது. உதயகுமாரி தங்கப் பட்டாடை புனைந்து கொண்டு ஜொலித்தாள். அவனுக்கு எதிரே



படகு போய்க் கொண்டிருந்த திசையில் ஒரு மரகதத் தீவு நீலக் கடலாடை போர்த்துக் கொண்டு விளங்கியது. வலப்புறத்தில் அதே மாதிரி இன்னொரு பச்சை வர்ண பூமிப் பிரதேசம் காணப் பட்டது. அது நாலு புறமும் கடல் சூழ்ந்த தீவா அல்லது நீண்டு பரந்து வியாபித்துள்ள பூமிப் பிரதேசமா என்று நன்றாகத் தெரியவில்லை. இரண்டு மரகதப் பிரதேசங்களுக்கும் ஊடே பார்த்தால் தூரத்தில் அத் தகைய இன்னும் பல தீவுகள் பச்சை நிறத்தின் பல்வேறு வகைக் கலவை களுக்கு உதாரணமாகத் தோன்றிக் கொண்டிருந்தன. படகிலிருந்தபடியே நாலுபுறமும் சுற்றிப் பார்த்தால், வான வில்லின் ஏழுவித வர்ணங்களும் அதன் ஏழாயிரம் வகைக் கலவை நிறங் களும் திகழ்ந்தன. மொத்தத்தில் அந்தக் காட்சி கண்ணெதிரே காணும் உண்மைக் காட்சியாகவே தோன்ற வில்லை. ஓவியக் கலையில் தேர்ந்த அமர கலைஞன் ஒருவன் "இதோ சொர்க்க லோகம் எப்படி இருக்கும் என்று காட்டுகிறேன்!" என்று சபதம் பூண்டு தீட்டிய வர்ண சித்திர அற்புதம் போலவே தோன்றியது.

இந்தக் காட்சியைக் கண்டு மெய்ம் மறந்து நினைவிழந்திருந்த வந்தியத் தேவனுடைய செவியில், "இது சொர்க் கம் அல்ல; இது இலங்கை!" என்ற வார்த்தைகள் விழுந்து, அவனை விழிப் படையச் செய்தன.

"ஆம்; இது சொர்க்கமோ என்று நான் சந்தேகித்தது உண்மைதான்!" என்றான் வந்தியத்தேவன்.

"இது சொர்க்க பூமி அல்ல; ஆனால் சொர்க்கம் போன்ற பூமி. இந்தச் சொர்க்கத்தை நரகமாக்குவதற்கு மனித உருக் கொண்ட அசுரர்கள் வெகு காலமாகப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள்" என்றாள் பூங்குழலி.

"யாரை அசுரர்கள் என்று சொல் கிறாய்?" என்றான்.

"உன்னைப்போல் யுத்தமே தொழி லாகக் கொண்டவர்களைத்தான்."

"பொன்னியின் செல்வர்கூடவா?"

"அவரைப் பற்றி என்னை எதற் காகக் கேட்கிறாய்?"

"இளவரசரைப் பற்றி விசாரித்துச் சொல்வதாகக் கூறினாயே?"

"அவர் இருக்கக்கூடிய இடத்தை விசாரித்துச் சொல்வதாகக் கூறினேன். அவர் மனிதரா, அசுரரா, தேவரா என்று கண்டுபிடித்துக் கூறுவதாகச் சொல்ல வில்லையே?"

படகு தீவுகளை நெருங்கிக் கொண் டிருந்தது. கடல் நடுவே கேட்கும் ஓங்காரத் தொனிக்குப் பதிலாகக் கடல் அலைகள் கரையிலே மோதும் போது உண்டாகும் சலசலப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

"என்ன சொல்கிறாய்? எதிரே தெரி கிறதே, அதுதான் பூதத் தீவு: வலப் புறத்தில் உள்ளது நாகத் தீவு. எங்கே போகட்டும்? நாகத் தீவி லேயே உன்னைக் கொண்டு போய் இறக்கி விட்டு விடட்டுமா? விசாரித் துக் கொண்டு போகிறாயா?"

"இல்லை; பூதத் தீவுக்கே போக லாம். கொஞ்ச நேரம் தாமதமானா லும், இளவரசர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு போவதுதான் நல்லது."

"அப்படியானால் சரி; நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதி ஞாபகம் இருக் கட்டும்!"

சிறிய தீவின் கரையில் படகு வந்து நின்றது. படகைப் பார்த்துக் கொள் ளும்படி வந்தியத்தேவனிடம் சொல்லி விட்டுப் பூங்குழலி அந்த மரகதத் தீவுக்குள்ளே சென்றாள். வந்தியத் தேவன் அவள் சென்ற திக்கைப் பார்த் தான். பச்சை மரங்களுக்கிடையில் அவள் விரைவில் மறைந்து விட்டாள்.

போதத் தீவு மக்களின் வாக்கில் மருவிப் பூதத் தீவாக மாறியது பற்றி வந்தியத்தேவன் முதலில் சிந்தித்தான். பிறகு அத்தீவுக்குள்ளே இப்போது குடியிருக்கும் பூதம் எப்படிப்பட்ட பூதமாயிருக்கும் என்று எண்ணமிட் டான். பின்னர், இந்த அதிசய மான பெண்ணின் உள்ளத்தில் மறைந்திருக்கும் மர்மம் என்னவாயிருக் கும் என்று வியந்தான்.

பூங்குழலி கூறியபடி ஒரு நாழிகைக் குள் திரும்பி வந்தாள். படகில் ஏறிக் கொண்டு வந்தியத்தேவனையும் ஏறிக் கொள்ளச் சொன்னாள். நாகத் தீவை நோக்கிப் படகு சென்றது.

"விசாரித்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடிந்ததா?" என்று வல்ல வரையன் கேட்டான்.

"முதன் மந்திரி அநிருத்தப் பிரம ராயர் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்காக மாதோட்டத்துக்கு வந் திருக்கிறாராம். நேற்றைக்கு இளவர சரும் மாதோட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். எத்தனை நாள் மாதோட் டத்தில் இருப்பார் என்று தெரியாது. நீ அங்கே போய்த் தெரிந்து கொள்ள லாம்" என்றாள் பூங்குழலி.

"மாதோட்டம் இங்கிருந்து எத்தனை தூரம் இருக்கும்?"

''ஐந்து ஆறு காத தூரம் இருக்கும். வழியெல்லாம் ஒரே காடு. கோடிக் கரைக் காடு மாதிரி இருக்கும் என்று நினைக்காதே. வானை எட்டும் மரங்கள் அடர்ந்த காடு. பட்டப் பகலில் சில இடங்களில் இருட்டாக இருக்கும். யானைக் கூட்டங்களும் வேறு துஷ்ட மிருகங்களும் உண்டு. நீ ஜாக்கிரதை யாகப் போய்ச் சேர வேண்டும்.''

''காட்டில் வழி காட்டுவதற்கு உன்னைப்போல் ஒரு கெட்டிக்காரப் பெண் மட்டுமிருந்தால்...?'' என்று வல்லவரையன் பெருமூச்சு விட்டான்.

''அப்போது நீ ஒருவன் எனத்திற்காக? ஓலையை என்னிடம் கொடுத்து விடு! நானே கொண்டு போய்க் கொடுக்கிறேன்... இல்லை, முடியாது! ஏதோ பைத்தியக்காரியைப் போலப் பேசுகிறேன். என்னால் முடியவே முடியாது. இளைய பிராட்டியிடம் ஒப்புக்கொண்டு வந்தாயல்லவா? அதை நீதான் செய்து முடிக்க வேண்டும்!'' என்றாள்.

''ஆகட்டும், பூங்குழலி! நானே செய்து முடிப்பேன். இன்னொருவர் கெஞ்சிக் கேட்டாலும் கொடுக்க மாட்டேன். நீ இவ்வளவு உதவி செய்தாயே. அதுவே போதும்!''

படகு நாகத்வீபத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பூங்குழலியின் கைகள் துடுப்பை வழக்கம்போல வலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவளுடைய உள்ளம் வேறு எங்கேயோ கனவு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது என்பது முகத்திலிருந்து தெரிந்தது.

''சமுத்திர குமாரி!'' என்று வந்தியத்தேவன் அழைக்கவும், அவள் திடுக்கிட்டு இவ்வுலகத்துக்கு வந்தாள்.

''ஏன் கூப்பிட்டாய்?'' என்று கேட்டாள்.

''ஏதோ என்னிடம் பிரதி உபகாரத்தை எதிர்பார்ப்பதாகச் சொன்னாயே? அதை இப்போது சொன்னால் தான் சொன்னது. இதோ கரை நெருங்கி வருகிறது.''

பூங்குழலி உடனே மறுதளிக்கவில்லை. சிந்திப்பதாகத் தோன்றியது. ஆகையால் வந்தியத்தேவன் தைரியம் கொண்டு மேலும் கூறினான்.

''நீ எனக்குச் செய்த உதவி மிகப் பெரியது. எனக்கு மட்டும் நீ உதவவில்லை; சோழ சாம்ராஜ்யத்துக்கே உதவி புரிந்திருக்கிறாய். சோழ சக்கரவர்த்தியின் குலத்துக்கு மாபெரும் உதவி புரிந்திருக்கிறாய். இதற்குப் பிரதியாக நான் ஏதாவது செய்யாவிட்டால் என் மனம் நிம்மதி யடையாது'' என்றான்.

''இதையெல்லாம் நீ உண்மையாகச் சொல்கிறாயா? அல்லது உலகத்தில் உள்ள ஆண் மக்களைப் போல் வஞ்சகம் பேசுகிறாயா?''

''சமுத்திர ராஜன் அறியச் சத்தியமாகச் சொல்கிறேன்.''

''அதாவது தண்ணீரில் எழுதி வைக்கிறேன் என்கிறாயா?''

''ஆகாசவாணியும் பூமாதேவியும் அஷ்ட திக்குப் பாலகர்களும் சூரிய சந்திரர்களும் அறிய ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.''

''உன்னுடைய சத்தியத்தையும், ஆணையையும் நம்பி நான் சொல்லவில்லை. பொய் சொல்லும் வஞ்சகர்கள் சத்தியத்துக்கும் ஆணைக்கும் மட்டும் பயந்துவிடுவார்களா? உன்னை முதன் முதலில் பார்த்தவுடனேயே நீ நல்லவன் என்று எனக்குத் தோன்றியது. ஆகையினால் சொல்லுகிறேன்...''

''முதலில் தோன்றிய எண்ணந்தான் எப்போதும் மேலானது; அதை நீ மாற்றிக் கொள்ள வேண்டாம்.''

''பொன்னியின் செல்வரைப் பார்த்து அவரிடம் ஓலையைக் கொடுத்த பிறகு, சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிப் பேச வேண்டியதை யெல்லாம் பேசிய பிறகு, அவர் அவகாசமாக இருக்கும்போது, 'சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?' என்று கேள். 'ஞாபகம் இருக்கிறது' என்று அவர் சொன்னால், 'அவள்தான் எனக்குப் படகு வலித்துக் கொண்டு வந்து இலங்கையில் இறக்கி விட்டாள்' என்று கூறு!''

பூங்குழலி! அவ்வளவு உயரத்திலேயா நீ பறக்கப் பார்க்கிறாய்? சிட்டுக் குருவி ஒன்று ககன ராஜாவாகிய கருடன் பறக்கும் இடத்துக்கு நானும் போவேன் என்று பறக்கத் தொடங்கலாமா? இது உனக்கு நல்லதல்லவே?— இவ்வாறு வந்தியத்தேவன் மனத்தில் எண்ணிக் கொண்டான். வெளிப்படையாக, ''இதைச் சொல்லத்தானா இவ்வளவு தயங்கினாய்? என்னமோ பெரிதாகக் கேட்கப் போகிறாய் என்று நினைத்தேன். இளவரசரிடம் கட்டாயம் நான் சொல்லுகிறேன்! அவர் கேட்காமற் போனாலும் நானே சொல்லுகிறேன்!....''

''ஐயையோ! அவர் கேட்காவிட்டால் நீயாக ஒன்றும் சொல்ல வேண்டாம்!''

''அதெல்லாம் முடியாது; சொல்லித்தான் தீருவேன்.''

"என்ன சொல்லுவாய்?"

"நடந்தது நடந்தபடிதான் சொல்லுவேன். 'இளவரசே! பொன்னியின் செல்வரே! சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா? ஞாபகம் இல்லாவிட்டால், இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அவள் தான் என்னைப் பழுவேட்டரையரின் கொலைகார ஆட்களிடம் சிக்காமல் காப்பாற்றினாள். அவள்தான் தன்னந் தனியாகப் படகு தள்ளிக் கொண்டு வந்து என்னை இலங்கையில் சேர்த்தாள். கடலில் விழுந்து தத்தளித்த என்னை அவள்தான் காப்பாற்றிப் படகில் ஏற்றிவிட்டாள். சமுத்திர குமாரியின் உதவி இராவிட்டால் நான் உயிருடன் உங்களை வந்து பார்த்திருக்க முடியாது. இந்த ஓலையும் உங்களுக்குக் கிடைத்திராது!' என்று சொல்லுவேன். சரிதானே?"

"இதுவரை சொன்னது சரிதான்.. மேலும் ஏதாவது சேர்த்துக் கொண்டு விடாதே! இதையெல்லாம் நான் அவரிடம் சொல்லச் சொன்னதாகச் சொல்லி விடாதே!"

"சேச்சே! என்னை முழுப் பைத்தியம் என்று நினைத்தாயா?"

"இளவரசர் அதற்கு ஏதேனும் மறுமொழி சொன்னால், அதை உள்ளது உள்ளபடி என்னிடம் சொல்ல வேண்டும். கூட்டியோ, குறைத்தோ சொல்லக் கூடாது."

"உன்னை மறுபடியும் நான் எங்கே பார்ப்பது?"

"என்னைப் பார்ப்பதில் என்ன கஷ்டம்? கோடிக்கரையிலோ, இந்தப் பூதத் தீவிலோ, அல்லது இரண்டுக்கும் மத்தியில் படகிலோ இருப்பேன்."

"ஊருக்குத் திரும்பும்போது இந்த வழியாக வந்தால் பூதத் தீவில் நீ இருக்கிறாயா என்று பார்க்கட்டுமா?"


"தீவுக்குள்ளே எக்காரணத்தைக் கொண்டும் நீ வரக் கூடாது; வந்தால் விபரீதமாகும். இந்தப் படகு கடலோரத்தில் இருக்கிறதா என்று பார்! இருந்தால் ஏதாவது ஓர் அடையாளம் வைத்துக் கொண்டு சத்தம் செய்! நான் நேற்றுக் குயில் மாதிரி கூவினேனே, அந்த மாதிரி நீ கூவ முடியுமா?..."

"குயில் மாதிரி கூவ முடியாது. ஆனால் மயில் மாதிரி சத்தம் செய்வேன், இதைக் கேள்!"

வந்தியத் தேவன் வாயைக் கையினால் மூடிக் கொண்டு மயில் கத்துவது போன்ற அகோரமான குரலில் கத்திக் காட்டினான்.


அதைக் கேட்டுப் பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

படகு நாகத் தீவின் கரையை அணுகியது. இருவரும் படகிலிருந்து இறங்கினார்கள். வந்தியத்தேவன் கரையில் ஏறி விடைபெற்றுக் கொண்டான். பூங்குழலி படகைத் திருப்பினாள். வந்தியத்தேவன் சபலத்துடன் திரும்பிப் பார்த்தான். "உன்னுடன் வருகிறேன்" என்று சொல்லி அவளும் வரமாட்டாளா என்ற ஆசை அவன் மனத்தில் இன்னமும் கொஞ்சம் இருந்தது. ஆனால் பூங்குழலி அவனைக் கவனிக்கவே யில்லை. அதற்குள் அவள் கனவு லோகத்தில் சஞ்சரிக்கப் போய் விட்டாள் என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது. **(தொடரும்)**



படத்தைப் பார்த்துவிட்டு இது புது வகைக் குட்டி மோட்டார் கார் என்று நினைத்துவிட வேண்டாம். அப்படி இல்லையானால் இது என்ன? இது ஒரு துடைப்ப வண்டி! ஈரமான தரையையோ அல்லது காய்ந்த தரையையோ பெருக்கும். ஒரு மணி நேரத்தில் ஒரு லக்ஷம் அடி நீள அகலமுடைய தரையைப் பெருக்கும்! பெரிய பெரிய தொழிலகங்கள், டெக்குகள், நடைபாதைகள் முதலியவற்றைப் பெருக்கப் பயன்படுகிறது. இதில் பொருத்தப்பட்டுள்ள பெரிய துடைப்ப 'பிரஷ்'கள் மூன்று. இவை தேயத் தேய வேறு 'பிரஷ்'களைப் பொருத்திக் கொள்ளலாம்!

— பி. ஐ. எஸ்.



இயந்திர யுகத்தில் இந்திய மருத்துவம்!




ஆயுர்வேத, சித்த, யுனானி முறைப்படி சிகிச்சை அளிக்கும் ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாடெங்கிலும் உள்ளனர். இவர்களெல்லாம் தங்களுக்குத் தேவையான மருந்துகளைத் தாங்களே தயாரித்து நோயாளிகளுக்கு வழங்குவதில் எவ்வளவோ சங்கடங்கள் உள்ளன. குறைந்த அளவில் மருந்துகளைத் தயாரிப்பதானால் செலவு கூடுதலாகும். சில மருந்துகளைத் தயாரிக்க இன்றியமையாத சில மூலிகைகள் எல்லாப் பருவங்களிலும் கிடைப்பது அரிது. பண்டைய சாஸ்திரீய முறைப்படி இவற்றைத் தயாரிப்பதிலும் நடைமுறையில் எவ்வளவோ சிரமங்கள் உள்ளன. எனவே, ஆயுர்வேத, சித்த, யுனானி முறைப்படி சிகிச்சை அளிக்கும் இந்திய மருத்துவர்களுக்குத் தேவையான மருந்துகள் அனைத்தையும் சீரிய முறையில், குறைந்த செலவில் ஆனால் தரம் குறையாமல் தயாரித்து விற்பனை செய்ய 1944-ல் கூட்டுறவு நிறுவனம் ஒன்று சென்னையில் உருவாகியது. அன்று முதல் பயனுள்ள சேவை புரிந்து வந்திருக்கும் இந்நிறுவனம் அண்மையில் வெள்ளி விழாக் கொண்டாடியது.

இருநூற்று இருபத்துநாலு உறுப்பினர்களைக் கொண்டு உருவாகிய இக் கூட்டுறவு நிறுவனத்தில் இன்று நாலாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இடம் பெற்றுள்ளனர். மேலை நாட்டு மருத்துவ முறை பயின்ற டாக்டர்கள் சிலரும் இதில் இன்று உறுப்பினராக உள்ளனர்.

இந்நிறுவனத்தின் தலைவர் டாக்டர் நாராயணசுவாமி கூறினார்: '' 'இம்பூரல் தெரியாமல் இருமிச் செத்தான்' என்று ஒரு பழமொழி உண்டு. இம்பூரல் என்ற பச்சிலை இருமலுக்கு நல்லது. தூதுவளை, இம்பூரல் முதலிய மூலிகைகளைக் கொண்டு க்ஷயரோகத்துக்கு நல்லதோர் ஆயுர்வேத மருந்து தயாரித்து வழங்கி வருகிறோம். இவ்வாறே வேறுபல மருந்துகளும் தயாராகின்றன. ஒவ்வொரு மூலிகையின் தனித் தன்மை என்ன, எது எந்த நோயைக் குணப்படுத்தும் என்பன பற்றி ஆராய இங்கு விரிவான சோதனைகளும் நிகழ்ந்து வருகின்றன. நூற்றுக் கணக்கான மூலிகைகள், வேர்கள் எல்லாம் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தனித் தனியே அடையாளம் கண்டு கொள்ளவும், போலிகளைப் புறக்கணிக்கவும் பயன்படும் வகையில் பச்சிலைகளையும், வேர்களையும் கண்ணாடிப் புட்டிகளில் பத்திரப்படுத்தியும், அட்டைகளில் ஒட்டியும் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம். அனைவருக்கும் பயன்படுமாறு ஒரு காட்சி சாலையும் உருவாக்கியிருக்கிறோம். வெள்ளி விழாவினையொட்டி இக்காட்சிசாலை திறந்து வைக்கப் பெற்றுள்ளது.''

இயங்கத் தொடங்கிய 1944ம் ஆண்டில் மருந்து விற்பனை சுமார் இருபதாயிரம் ரூபாய்; கடந்த 1967–68ல் மொத்த விற்பனை இருபது லட்சம் ரூபாய்க்கு மேல். வளர்ச்சியின் வேகத்துக் கேற்ப மருந்துத் தயாரிப்பிலும் புதிய முறைகள் கையாளப்படுகின்றன. லேகியங்கள் கலுவங்களில்தாம் அரைக்கப் பெறுகின்றன, சாஸ்திரீய முறைப்படி. ஆனால் ஏராளமான கலுவங்கள் ஒரே சமயத்தில் பல்வேறு லேகியங்களை மின்விசையால் அரைத்துத் தள்ளுகின்றன. ஆஸவங்கள், அரிஷ்டங்கள் முதலியவை பிரும்மாண்டமான மரப் பீப்பாய்களில் புளிக்க வைக்கப்படுகின்றன. மருந்துப் புட்டிகளைச் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உலர்த்துவதற்கும், திரவ மருந்துகளைப் புட்டிகளில் ஊற்றி, மூடி 'சீல்' வைப்பதற்கும் எலுமிச்சை முதலிய பழங்களைச் சாறு பிழியவும் மின்விசையில் இயங்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாத்திரைகள் செய்யவும், செய்த மாத்திரைகளை எண்ணிப் புட்டிகளில் நிறைக்கவும் நவீன யந்திர சாதனங்கள் இங்கு உள்ளன. இந்திய மருத்துவம் தான். ஆனால் இயந்திர யுகத்துக்கு ஏற்ப இன்றியமையாத மாறுதல்கள் இவை. — 'பாணன்'



படங்கள் :

☐ இந்திய மருத்துவர்களின் கூட்டுறவு நிறுவனக் கட்டடம்.

☐ கலுவங்கள் லேகியங்களை மின் விசையால் அரைத்துத் தள்ளுகின்றன.

ஞான ஒளி (நாடகம்)

நாடகம் என்றால் ஒரு திடுக்கிடும் சம்பவமோ, ஒரு கொலையோ, தற்கொலையோ இருந்துதான் ஆக வேண்டும் என்ற நியதி நம்மையும் அறியாமல் நம் நாடகமேடையில் புகுந்துகொண்டு ஆட்டிப் படைத்து வரும் இந்தநாளில் அன்பு, கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், நேர்மை ஆகிய அருங்குணங்களையே ஆதாரமாகக் கொண்டு உணர்ச்சிமயமானதொரு நாடகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதுவே பாராட்டப்பட வேண்டிய புதுமையில்லையா?

''வியட்நாம் ஹவுஸ்'' நாடகத்தை எழுதிப் புகழ்பெற்ற கே. சுந்தரம்தான் ''ஞான ஒளி'' என்ற இந்த நாடகத்தை இயற்றித் தந்திருக்கிறார் என்றாலே அதன் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறியதாகக் கொள்ளலாம்.

ஒரு நாடகத்தின் முதற் காட்சி விறுவிறுப்பாகவும், அதிர்ச்சி தருவதாகவும், முன்கூட்டியே வரப்போகும் சஸ்பென்சின் சாராம்சத்தை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என்ற நாடக மேடைப் பொதுக் கொள்கையைப் பொருட்படுத்தாமல் முதல் காட்சியை மிகவும் அமைதியான முறையில் ஆரம்பித்திருப்பது துணிந்து புனைந்த துணிச்சலான காரியந்தான்!

நல்ல பாத்திரப் படைப்பும், நல்ல டைரக்ஷனும், நல்ல கருத்துள்ள வசனங்களும் கவனமாகப் பார்த்து அமைக்கப்பட்டிருப்பதால் முதல் காட்சியே களை கட்டிவிட்டது. அத்துடன் நாடகத்தைக் கடைசி வரையில் இருந்து பார்ப்பதற்குத் தூண்டும் விதத்தில், (எந்தவிதமான ஆர்ப்பாட்டமோ, ஆரவாரமோ எதுவும்



ல்லாமல்) அமைந்திருந்தது. காட்சி ஜோடனை அதிஅற்புதமாயிருந்தது. ஒரு மாதாகோவிலின் அமைதியான உட்புறத் தோற்றம் கண்ணுக்கும், கருத்துக்கும் பக்தியுணர்வைத் தூண்டும் விதத்தில் சிறப்பாகத் தோற்றம் அளித்தது. மக்களின் அறியாமைப் பிணியைப் போக்கி, அவர்களின் வாழ்க்கைப் பிரச்னைகளின் சிக்கல்களையெல்லாம் விடுவித்து, அவர்களுக்கு நல்வழியைக் காட்டும் ஞானபிதாவை மேடையில் தோன்றச் செய்திருப்பதே நன்றாயிருக்கிறது. அன்பே உருவான பூஜ்ய அடைக்கலம் பாதிரியாராக வந்து அமைதியாகத் தோன்றி, அமைதியாக நடித்து, அமைதியான முறையிலேயே நாடக மேடையில் புரட்சிகரமான மாறுதலை உருவாக்கி விடும் நடிகர் கோகுல் நாத் ரசிகர்களின் பாராட்டுக்குரியவராய்த் திகழ்ந்தார். புனித பாதிரியாரின் தோற்றம், நடை, உடை, பாவனை யாவும் புனிதமாகத் திகழ்ந்தது குறிப்பிட வேண்டிய விஷயம்.

மேஜர் சுந்தரராஜன் மூர்த்தியும் புஷ்யதோரு' பாத்திரத்தில் நடிக்கிறார். ஒரு முரடன் பாத்திரம். யாருக்கோ பிறந்து, அநாதையாக வளர்ந்து, ஆதரவில்லாமல் அலைந்து கடைசியில் புனித பாதிரியாரின் அருள் நோக்கினால் ஓரளவு கட்டுப்பட்டு நின்ற முரடன் அந்தோணி கவலையற்ற வாழ்க்கை வாழ்ந்தாலும், நாடகத்தின் கவலையான பாத்திரம் அவன்தான்.



கோபம், ஆத்திரம், ஹாஸ்யம், தன்மான உணர்ச்சி, அன்பு, அமைதி, கடமை உணர்ச்சி முதலிய குணங்களை நாடகம் பார்ப்பவர்கள் மனத்தில் நன்கு பதியச் செய்கிறது ''ஞான ஒளி''. நாடகத்தில் இரட்டைப் பாத்திரங்கள் ஏற்றிருப்பதோடு சுந்தரராஜன் நாடகத்தை டைரக்ட் செய்யும் பொறுப்பையும் ஏற்றுத் திறமையாகச் செய்திருக்கிறார். நாடக உலகின் பிரசித்தி பெற்ற டைரக்டரான 'சாம்பு' என். எஸ். நடராஜன் நாடகத் தயாரிப்பில் பங்கு பற்றியிருக்கிறார். ஆகவே நாடகத்தின் சிறப்புக்குக் கேட்பானேன்!

உணர்ச்சிமயமான நாடகம் என்றதும் நகைச்சுவைக்கு இதில் இடம் இல்லையோ என்று சிலர் நினைக்கலாம். ஆரம்பத்தில் நாடகத்தைப் பார்த்தால், அந்த ஐயப்பாடு கொஞ்சம் உறுதியாகும். ஆனால் நடிகர்கள் ஐ. எஸ். ஆரும், ராஜகோபாலும் மேடையில் தோன்றியதும் அந்த ஐயப்பாடு மக்களின் கரகோஷ ஆனந்த ஆரவாரத்தில் அடியோடு மறைந்து விடும். இவர்கள் இருவரும் போதாக்குறைக்கு நகைச்சுவையை வழங்க டாக்டர் ஒருவர் வருகிறார். ஆம், அவர் யாருக்கும் ஏக பார்த்து மருந்து தரவில்லை. ஆனால் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறார். அதுவே எத்தனையோ நோய்களைத் தீர்த்து வைக்குமே! தம் கடமையில் பிறழாமல் இருந்து நாடகத்துக்கு உயிரூட்டியவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் லாரென்ஸ். அந்தப் பாத்திரம் மிகவும் கடினமானது. அதை ஏற்றுத் திறமையாக நடித்தவர் எஸ்.ஆர். வீரராகவன். அதிகமாக அலட்டிக் கொள்ளாமலே ரசிகர்களை ஈர்க்கும் வண்ணம் தம் பாத்திரத்தோடு ஒன்றி நடிக்க அவரால் எப்படித் தான் முடிகிறதோ!

பிரசித்தி பெற்ற விக்டர் ஹ்யூகோவின் ''லே மிஸரபிளா'' ''ஞான ஒளி''யை உருவாக்கத் தூண்டுகோலாயிருந்திருக்கலாம்.

''துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பில் அழியுமடி, கிளியே
அன்புக்கு அழிவில்லை காண்!''

என்ற மகாகவி பாரதியாரின் வாக்குக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது ''ஞான ஒளி'' நாடகம்.

—காந்தன்

மகாபாரதம்
ராஜாஜி

அப்போது கண்ணன், ''பீமனே! போதும். உன் கடனைத் தீர்த்தாய். துரியோதனன் அரசனாகப் பிறந்தவன். நம்முடைய குலத்தவன். அவனுடைய தலையைக் காலால் உதைத்தலாகாது. சீக்கிரத்தில் பாபிஷ்டனுடைய உயிர் உடலை விட்டுப் பிரியும். பாண்டு குமாரர்களே! துரியோதனனும் அவன் சகாக்களும் இறந்தார்கள். இனித் தாமதம் ஏன்? தேர் ஏறுங்கள்'' என்றான்.

அச்சமயம் கீழே காலுடைந்து கிடந்த துரியோதனனின் முகத்தில் கோபமும் வெறுப்பும் கலந்து நெருப்புப்போல் எரிந்தது. கிருஷ்ணனைப் பார்த்து, ''தரும முறையில் போர் புரிந்த அநேக வீரர்களைப் பல மோசங்களைச் செய்து கொல்லுவித்தாய். உனக்கு வெட்கம் சிறிதும் இல்லையா? கர்ணனோடாவது, பீஷ்மரோடாவது துரோணரோடாவது நேர்மையான முறையில் நீ போர் புரிந்திருந்தால் ஒரு நாளும் வெற்றியடைந்திருக்க மாட்டாய்'' என்றான்.

உயிர் உடலை விட்டு நீங்கும் சமயத்திலும் இவ்வாறு சொன்ன துரியோதனனைப் பார்த்துக் கிருஷ்ணன், ''துரியோதனா! வீண் பேச்சுப் பேசுகிறாய். ஆசையினாலும் ராஜ்ய பலம் பெற்ற கர்வத்தாலும் நீ செய்த பாபங்களுக்குக் கணக்கில்லை. அதன் பலனை அனுபவிக்கிறாய்'' என்று சொன்னான்.

துரியோதனன், ''க்ஷத்திரியர்கள் எவ்வாறு இறக்க விரும்பினார்களோ அந்த மரணத்தை நான் அடைந்தேன். என்னை விடப் பாக்கியவான் யார்? என் நண்பர்களுடனும் என்னைத் தொடர்ந்தவர்களுடனும் நான் சுவர்க்கம் போகிறேன். இகழப்பட்டவனாக நீ உயிருடன் இரு. கீழே விழுந்து கிடக்கும் என் தலைமேல் பீமன் தன் காலை வைத்து உதைத்ததால் எனக்குத் துயரமில்லை. காக்கைகளும் என் தலைமேல் தம் கால்களை இன்னும் சில நிமிஷங்களுக்குள் வைக்கப் போகின்றன அல்லவா?'' என்றான்.

இவ்விதம் துரியோதனன் வீரனுக்குத் தகுந்த பேச்சுக்கள் பேசுகையில் ஆகாயத்திலிருந்து புஷ்ப வருஷம் வருஷித்தது என்கிறார் முனிவர்.

லோபத்தினாலே துரியோதனன் முதலில் அதர்மத்தில் இறங்கினான். அதன் பலனாக விளைந்த கோபத்தினால் இரு பக்கத்திலும் பல அதருமங்கள் தோன்றின.

94. பாண்டவர்களின் வெட்கம்

யுத்தம் முடியும் தருவாயில் பலராமன் தீர்த்த யாத்திரை முடித்துவிட்டுக் குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். அப்போது பீமனும் துரியோதனனும் மல்யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். பீமன் துரியோதனனுடைய துடைகளை அடித்துப் பிளந்ததைப் பலராமன் பார்த்ததும் யுத்தமுறை புறக்கணிக்கப்பட்டு அக்கிரமம் ஓங்கிவிட்டது என்று பலராமனுக்குக் கோபம் பொங்கிற்று.

''சீ! சீ! நாபிக்குக் கீழ் கதாயுதப் போரில் யாராவது அடிப்பார்களா? சாஸ்திர விரோதமாக இந்தப் பீமன் நடந்து கொண்டான்.''

இவ்வாறு பீமனுடைய நடவடிக்கையைப் பார்த்துப் பொறுக்காமல் பலராமன் தன் சகோதரன் கிருஷ்ணனை நோக்கி, ''நீ இதையெல்லாம் பொறுப்பாய்; என்னால் பொறுக்க முடியாது'' என்று சொல்லிக் கலப்பையை மேலே தூக்கிக் கொண்டு பீமனை நோக்கிச் சென்றான். பலராமனுக்கு முக்கியமான ஆயுதம் கலப்பை.

பலராமன் கோபாவேசம் கொண்டு பீமன் பேரில் பாயச் சென்றதைக் கண்டு கிருஷ்ணன் பயந்து வழி மறித்தான்.

''பாண்டவர்கள் நம்முடைய மித்திரர்கள். நெருங்




கிய பந்துக்கள். துரியோதனனால் மிகவும் துன்புறுத்தப்பட்டவர்கள். திரௌபதியைச் சபையில் அவமதித்தபோது பீமன் சபதம் செய்தான்: 'இந்தக் கதையினால் துரியோதனனுடைய இரு துடைகளையும் நான் யுத்தத்தில் பிளந்து கொல்வேன்' என்று பிரதிக்ஞை செய்திருக்கிறான். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். செய்த பிரதிக்ஞையைக் காப்பாற்றுவது க்ஷத்திரியர் தருமம். தோஷமற்றவர்களும் நம்மைச் சேர்ந்தவர்களுமான பாண்டவர்கள் பேரில் அவசரமாகக் கோபிக்க வேண்டாம். கௌரவர்கள் செய்த தீவினைகளையெல்லாம் வைத்துத் தருமத்தை நிர்ணயிக்க வேண்டும். நிகழ்ச்சியின் மத்தியில் முந்தி நடந்தவைகளை மறந்துவிட்டு ஒரு காரியத்தை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு தரும விமரிசனம் செய்வது பிழையில் முடியும். இப்போது கலிகாலம் வந்துவிட்டது. வஞ்சனை முறைகளைப் பல தடவை அனுசரித்த துரியோதனனைப் பீமன் இவ்வாறு நாபிக்குக் கீழ் தாக்கியதில் குற்றம் இல்லை. இந்தத் துரியோதனனால் தூண்டப்பட்டே, கர்ணன், அபிமன்யுவினுடைய வில்லைப் பின்புறத்தில் நின்று அம்பு எய்து அறுத்தான். தேரும், வில்லும் இழந்து நின்ற நிலையில் அநேகரால் தாக்கப்பட்டு அருச்சுனனுடைய குமாரன் கொல்லப்பட்டான். பிறந்தது முதல் வஞ்சனையில் புத்தி செலுத்தின இந்தத் துரியோதனன், குலத்தைக் கெடுத்த பாவியாவான். இவன் பீமசேனனால் கொல்லப்பட்டது அதருமம் ஆகாது. சபையில் செய்த பிரதிக்ஞையைப் பதின்மூன்று வருஷ காலமாகப் பீமன் நினைவில் வைத்துக் காத்தான். துடைகளைப் பிளந்து கொல்வேன் என்று பீமன் செய்த பிரதிக்ஞை துரியோதனனுக்கு நன்றாகத் தெரியும். மிகவும் துன்புறுத்தப்பட்ட பாண்டவர்களோடு யுத்தம் செய்யும் துரியோதனனுக்குப் பீமனால் இது செய்யப்படும் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். இதை அக்கிரமம் என்று எண்ணக் கூடாது '' என்று சமாதானம் சொன்னான்.

இவ்வாறு கிருஷ்ணன் வாதித்ததெல்லாம் பலராமனுடைய அபிப்பிராயத்தை மாற்றவில்லை. ஆயினும் அவனுடைய கோபம் தணிந்தது.

'' துரியோதனன் வீரர்களுக்குரிய சுவர்க்கம் அடைவான். பீமனுடைய புகழ் நாசமடைந்து விட்டது. பாண்டு புத்திரன் துரியோதனனை முறை தவறிய வழியில் அடித்தான் என்பது உலகத்தில் பெரும் பழியாக நிற்கும். நான் இவ்விடம் நிற்கமாட்டேன்'' என்று சொல்லி விட்டுப் பலராமன் உடனே துவாரகைக்குச் சென்று விட்டான்

“யுதிஷ்டிரரே! யாது காரணம் பற்றிப் பேசாமலிருக்கிறீர் ?'' என்றான் கிருஷ்ணன்.



''மாதவ! கீழே விழுந்த துரியோதனனுடைய தலையைப் பீமன் காலால் துவைத்தது எனக்குப் பிரியமான செய்கையல்ல. குலம் அழிந்து போவதைப் பார்க்கிறேன். கௌரவர்களால் நாம் வஞ்சிக்கப்பட்டோம். விருகோதரனுடைய உள்ளத்தில் நிறைந்து நிற்கும் துக்கத்தையும் கோபத்தையும் நான் அறிவேன். மூடனும், பேராசைக்காரனுமான துரியோதனனை இவ்வாறு கொன்றது நியாயமோ, அநியாயமோ எப்படியாயினும் மிகவும் பெரிய துக்கங்களை அநுபவித்த பீமசேனன் செய்ததை நான் ஆட்சேபிக்க முடியவில்லை'' என்றான்.

தருமம் தவறினால் சமாதானங்களினாலும் அமைதி உண்டாகாது. மகா புத்திமானான அருச்சுனனும் பேசாமல் இருந்தான். பீமனைப் புகழவுமில்லை, குற்றமும் கூறவில்லை. ஆனால் பக்கத்தில் நின்ற மற்றவர்கள் துரியோதனனுடைய குற்றங்களையெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணன் அவர்களை நோக்கி, ''க்ஷத்திரிய வீரர்களே! அடித்து வீழ்த்தப்பட்டுச் சாகும் தறுவாயில் கிடக்கும் சத்துருவை மேலும் மேலும் இகழ்ந்து பேசுவது தகாது. மூடன் கெர்ல்லப்பட்டான். பாவிகளுடைய சகவாசத்தை அடைந்ததால் இவன் போனான். நாம் ரதமேறிப் போவோம்'' என்றான்.

கால்கள் உடைந்து தரையில் குற்றுயிராகக் கிடந்த துரியோதனன் கிருஷ்ணன் சொன்னதைக் கேட்டுக் கோபாவேசமானான். இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக் கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்து கிருஷ்ணனைப் பார்த்து, ''நீசனே! உன் தகப்பன் வாசுதேவன் கம்ஸனுடைய தாசன் அல்லவா? நீ அரசர்களுடைய சகவாசம் பெறத் தகாதவன். வெட்கமில்லாமல் பேசுகிறாய். என் துடைகளைப் பார்த்து அடிக்கச் சொன்னது நீயேயல்லவா? நானும் பீமனும் சமயுத்தம் செய்து கொண்டிருந்தபோது அருச்சுனனுடன் பேசுவது போல் துடைகளைக் காட்டிப் பீமனுக்குக் குறிப்புத் தெரியும்படி நீ செய்தது எனக்குத் தெரியாது என்று எண்ணுகிறாயா? உனக்கு வெட்கமுமில்லை; தயையுமில்லை. பிதாமகர் பீஷ்மர் உன்னுடைய யுக்தியாலே அல்லவா மாண்டார்? சிகண்டியை முன்னால் நிறுத்தி யுத்தம் செய்வித்தது நீயே. தரும புத்திரனைப் பொய் சொல்ல வைத்து அதரும முறையில் துரோணரையும் மாய்த்தாய். யுதிஷ்டிரன் சொன்ன அசத்தியத்தை நம்பித் துரோணர் தம் வில்லைக் கீழே போடச் செய்தது நீயே அல்லவா? ஆயுதமின்றி யோக நிலையில் உட்கார்ந்திருந்த ஆசாரியரை அந்தப் பாவியான திருஷ்டத்யும்னன் கொன்றதைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டாயல்லவா? அருச்சுனனைக் கொல்வதற்காகக் காப்பாற்றி வைத்திருந்த சக்தி ஆயுதத்தைக் கர்ணன் கடோத்கஜன் மீது பிரயோகித்துச் செலவழித்து விடச் செய்ததும் உன் வஞ்சனையே அல்லவா? பாபியே! கை வெட்டப்பட்டுப் பிராயோபவேச நிலையிலிருந்த பூரிசிரவசைச் சாத்யகி குரூரமாகக் கொன்றதும் உன் தூண்டுதலால் அல்லவா? உன்னால் அல்லவோ கர்ணன் பூமியில் அழுந்திவிட்ட தன் தேரின் சக்கரத்தைத் தூக்கிக் கொண்டிருந்தபோது இகழத்தக்க முறையில் அருச்சுனனால் கொல்லப்பட்டான்? அயோக்கியனே! எங்களுடைய நாசத்துக்கெல்லாம் நீயே காரணம். சிந்து ராஜனான ஜயத்ரதன் உன்னுடைய மாய வித்தையால் ஏமாற்றப்பட்டு அஸ்தமனம் ஆகிவிட்டது என்று எண்ணி அஜாக்கிரதையாக இருந்த சமயத்தில் கொல்லப்பட்டதை உலகம் இகழவில்லையா?'' என்று இவ்வாறு சரமாரியாக நிந்தித்துவிட்டு வலி தாங்க முடியாமல் மறுபடியும் பூமியில் வீழ்ந்தான்.

''காந்தாரி புத்திரனே! கோபத்தால் உயிரை வீணாக எரித்துக் கொள்ளுகிறாய்! உன்னுடைய பாபங்களே உன் நாசத்துக்குக் காரணம்; நான் அல்ல. உன்னுடைய தோஷத்தினால் தான் பீஷ்மரும், துரோணரும் உயிரை இழந்து மாண்டார்கள். அவ்வாறே கர்ணனும் மற்றவர்களும் உன்னாலேயே மாண்டார்கள். நீ பாண்டு புத்திரர்களுக்குச் செய்த அநியாயங்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமா? திரௌபதியை அவமானப்படுத்தியதற்கு எந்தத் தண்டனைதான் அதிகமாகும்? நீ செய்த தீமைகளின் காரணமாக உண்டான பகையும் கோபமும் எவ்வாறு மற்றவர்களின் குற்றமாகும்? நாங்கள் செய்த வஞ்சனைகள் எல்லாம் நீ செய்து வந்த மகாபாபமான காரியங்களினால் அனுஷ்டிக்க வேண்டியதாயின. கோபத்தினால் நீ செய்த பாபங்களின் பலனை யுத்த பூமியில் அனுபவித்தாய். ஆனால் வீரனைப் போல் மாண்டாய். க்ஷத்திரியர்களுடைய சொர்க்கத்துக்கு ஏகுவாய்'' என்றான் கிருஷ்ணன்.

''கிருஷ்ணா! நண்பர்களோடும் உறவினர்களோடும் நான் சுவர்க்கத்துக்குப் போகிறேன். நீங்கள் துக்கத்தில் மூழ்கி

உயிருடன் இருப்பீர்கள்'' என்றான் துரியோதனன்.

மறுபடியும் ஆகாயத்திலிருந்து துரியோதனன் மேல் பூமாரி பொழிந்தது. கந்தர்வர்களின் வாத்தியமும் முழங்கிற்று. திசைகள் எல்லாம் ஜோதி மயமாக விளங்கிப் பிரகாசித்தன. இதைக் கண்டு வாசுதேவனும் பாண்டவர்களும் ஓரளவு வெட்கம் கொண்டார்கள்.

''துரியோதனன் சொன்னது உண்மை. வஞ்சனையின்றி நீங்கள் அவனை ஜெயித்திருக்க முடியாது'' என்றான் கிருஷ்ணன்.

பாரதம் எழுதிய வியாசரே துரியோதனன் வாய்வழி கண்ணனை நிந்திக்கிறார். கவிகளுக்குப் பட்ச பாதம் கிடையாது. தருமம் அதருமம் இரண்டும் ஆண்டவன் இட்ட வழி செல்ல வேண்டியது.

95. அசுவத்தாமன்

துரியோதனனுடைய முடிவைப் பற்றிய விவரங்கள் அசுவத்தாமனுக்குத் தெரிந்ததும் அவனுக்குக் கடல் பொங்குவது போல் கோபம் பொங்கிற்று. தந்தையான துரோணரைக் கொல்லுவதற்காகச் செய்யப்பட்ட வஞ்சனையையும் இப்போது துரியோதனனை யுத்த முறைக்கு முற்றிலும் விரோதமாகக் கொன்றதையும் எண்ணி அசுவத்தாமன் துரியோதனன் விழ்ந்து கிடந்த இடத்துக்குச் சென்றான். ''இந்தப் பாண்டவர்களை இன்றிரவே நான் கொல்லப் போகிறேன்'' என்று சபதம் செய்தான்.

குற்றுயிராய்க் கிடந்த துரியோதனன் மகிழ்ச்சிப் பரவசமடைந்து பக்கத்தில் நின்றவர்களுக்குச் சொல்லிக் கௌரவ சேனைக்கு அசுவத்தாமனைத் தலைவனாக அபிஷேகம் செய்யச் சொல்லி ''உம்மை நம்பினேன்'' என்றான்.

ஃ ஃ ஃ

இருள் சூழ்ந்த ஒரு காட்டில் பெரிய ஆலமரத்தடியில் கிருபரும், கிருதவர்மனும், அசுவத்தாமனும் தங்கினார்கள். சூரியன் அஸ்தமித்து விட்டான். களைப்பினால் கிருபரும் கிருதவர்மனும் தரையில் கிடந்தபடியே தூங்கிப் போனார்கள். அசுவத்தாமனுக்குத் தூக்கம் வரவில்லை. கோபமும் துவேஷமும் மேலிட்டுச் சர்ப்பம் போல் சீறிக் கொண்டிருந்தான். இராக் காலத்துப் பிராணிகள் சத்தமிடுவதைக் கேட்டுக் கொண்டு ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த ஆலமரத்துக் கிளைகளில் காக்கைகள் கூட்டமாக இரவில் தங்கித் தூங்கிக் கொண்டிருந்தன. அப்போது ஒரு பெருத்த கோட்டான் வந்து தூங்கிக் கொண்டிருந்த காக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கொத்திக் கிழித்துக் கொன்று கொண்டிருந்ததை அசுவத்தாமன் பார்த்தான். இரவில் கண் தெரியாமல் அலறி அலறி உயிர் விட்ட காகங்களைப் பார்த்து அசுவத்தாமனுடைய மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. ''இந்த அதமர்களான பாண்டவர்களையும் என் தகப்பனாரைக் கொன்ற பாஞ்சாலனையும் அவர்களைச் சேர்ந்த அனைவர்களையும் இந்தக் கோட்டான் காக்கைகளைக் கொன்றதைப் போலப் பாசறைகளில் தூங்கிக் கிடக்கும் போது உள்ளே புகுந்து எளிதில் கொன்று விடலாம். பாண்டவர்கள் செய்த அதர்ம யுத்தத்துக்குப் பிரதி செய்து விட்டுப் பழி தீர்த்துக் கொள்வேன். இந்தப் பறவையால் நான் உபதேசம் பெற்றேன். சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு புது முறைகளை உபயோகிப்பதில் அநீதி ஒன்றுமில்லை. சத்துருக்கள் களைத்திருக்கும் நேரத்திலோ சேனுபலம் பிளவுபட்டு நிற்கும் சமயத்திலோ தாக்கலாம் என்று சாஸ்திரமே இருக்கிறது. பலம் இழந்து விட்ட நாம் அவர்களைத் தூங்கும் போது தாக்குவதில் என்ன தோஷம்? அவ்வாறு செய்தால்தான் அக்கிரமமான முறையில் வெற்றி பெற்ற இந்தப் பாண்டவர்களை நாம் இப்போது தோற்கடிக்க முடியும்'' என்று நிச்சயம் செய்து கொண்டான்.

இந்த எண்ணத்தை உறுதி செய்து கொண்டதும் கிருபரை எழுப்பித் தன் தீர்மானத்தை அவருக்குச் சொன்னான். அசுவத்தாமனுடைய யோசனையைக் கேட்ட கிருபர், ''இது முற்றிலும் தகாது. உலகத்தில் இதுவரை நடைபெறாத அக்கிரமமாகும். யாருக்காக நாம் யுத்தத்தில் கலந்தோமோ அந்த அரசன் கொல்லப்பட்டான். நம்முடைய கடமையை நாம் முற்றிலும் முறைப்படி செய்து தீர்த்தோம். பேராசைக்காரனும் மூர்க்கனுமான துரியோதனனுக்காக நாம் போர் செய்தோம். ஆனால் தோற்றோம். இனிமேல் இந்தக் காரியம் பயனற்றுப் போய் விட்டது என்று நாம் விட்டு விட வேண்டும். போய் திருதராஷ்டிரனையும் புகழ்பெற்ற காந்தாரியையும் யோசனை கேட்கலாம். அவர்கள் சொல்லுகிறபடி செய்யலாம். மகா புத்திமானான விதுரரையும் கேட்கலாம். அவர்கள் சரியான யோசனைகள் சொல்லுவார்கள். அப்படிச் செய்யலாம்'' என்றார். **(தொடரும்)**



உழுவதற்கு ஒழியவில்லை!

கொறிப்பதற்குக் கொஞ்சம்

காத்தவராயன் இந்த நாட்டு உழுவர் பெருங்குடி மக்களில் ஒருவன். அவன் ஒரு நாள் அதிகாலையில் எழுந்து, கலப்பையைத் தோளில் சாய்த்துக் கொண்டு புறப்பட்டான்.

தன்னுடைய சொந்த நிலத்தில் அவன் கால் எடுத்து வைப்பதற்கு முன்பே அவனுக்கு முன்னால் யாரோ இருவர் வந்து காத்திருப்பதைக் கண்டான். கலப்பையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, ''யாருங்க, நீங்க....?'' என்று கேட்டான்.

''முதலில் அந்தக் கலப்பையைத் தலையைச் சுற்றி எறி. சொல்கிறேன்!....'' என்றார்கள்.

அவர்கள் டிராக்டர்கள் தயாரிக்கும் கம்பெனியிலிருந்து வந்திருக்கிறார்களாம். ''பாட்டன் காலத்து உழவு முறைகளைக் கட்டிக் கொண்டு அழுவதில் பிரயோசனமில்லை..... பேசாமல் ஒரு டிராக்டர் வாங்கிப் போடு'' என்றார்கள் இருவரும். அத்துடன் தாங்கள் கொண்டு வந்திருந்த சிறிய டிராக்டர் ஒன்றின் அச்சடித்த வண்ணப் படங்களையும் காண்பித்தார்கள். தன் 'வீட்டில்' கலந்தாலோசித்து விட்டுச் சொல்வதாக அவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்பி வைத்தான்.



தலையிலே முண்டாசைக் கட்டிக் கொண்டு அவன் வயலில் இறங்கிக் கலப்பையைப் பிடித்ததுதான் தாமதம்; கிடுகிடுவென்று ஒருவர் அவனை நோக்கி ஓடி வந்தார். '' நிறுத்து! நிறுத்து !....''

''என்னங்க இது. எதுக்காக இப்படி என்னை மறிக்கிறீங்க ?....''

'' நான் அடுத்த ஊர் விதைப் பண்ணையிலிருந்து வருகிறேன். விதைப்பதற்கு நீ முன்பே எடுத்து வைத்திருக்கிற விதைகளைப் பயன் படுத்தக் கூடாது; ஆமாம்; சொல்லி விட்டேன் !''



''ரொம்ப நாளா அப்படித்தானே செய்துகிட்டு....''

'' உஸ் ! அதுதான் தப்பு ! ஏடிடி — 26 என்று கேள்விப்பட்டிருக்கிறாயா ? ஐ ஆர் — 8 பற்றி

யாவது தெரியுமா? அல்லது, டிகேளம் — 6 பற்றி யாராவது உன் காதில் போட்டதுண்டா? இதெல்லாம் நாங்கள் ஆராய்ச்சி பண்ணி, உங்களுக்கு ஒத்தாசை பண்ணுவதற்காகவே உண்டாக்கியிருக்கிற விதை ரகங்கள்!'' என்றவர், ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக வரப்பு மேலேயே 'குந்தி'யிருந்து 'ஹைபிரிட் விதை' புராணம் பாடி விட்டுப் போனார். காத்தவராயன் மண்டை கனத்தது.

அவர் அப்பால் போனதும் இன்னொருத்தர் வந்து சேர்ந்தார். அதே ஊரில் உள்ள விவசாயத் துறை விஸ்தரிப்பு அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி அவர். ''என்ன, இந்த நிலத்திலே நெல்தான் பயிரிடப் போகிறீர்களா, மறுபடியும்?....''

''ஆமாங்க !''

''முட்டாள்தனம்! கோ — 1305 கோ. — 1148, கோ — 1158 என்று மூன்று வகை கரும்பு இருக்கிறது. பிரமாதமாக மகசூல் கொடுக்கும். நீ நெல் பயிர் பண்ணிவிட்டு, சர்க்காருக்கு அளக்க வேண்டுமே என்று வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டாம். கரும்பு போட்டுவிட்டு ஆலைக்காரர்களுக்குத் தகவல் கொடுத்தால் ரூபாயை எண்ணி வைத்து விட்டு, அவர்களே அறுவடை பண்ணிக் கொண்டு போய் விடுவார்கள்!''

''கொஞ்சம் யோசிக்கணுமுங்க!''

''யோசிப்பதற்கு என்ன இருக்கிறது என்கிறேன்? சர்க்கரை என்ன விலை விற்கிறது தெரியுமா? பேசாமல் கரும்பு பயிர் பண்ணு! உனக்குச் சந்தேகம் இருந்தால் இலுப்பையூர் மண்ணுங்கட்டி, பனவெல்லம்பட்டி செவத்தான், மணல்குப்பம் சுடலை முத்து ஆகிய விவசாயிகள் கரும்புப் பயிர் பண்ணி எப்படி லாபம் அடைந்திருக்கிறார்கள் என்று படிக்கிறேன், கேள்!'' என்ற அதிகாரி, கையோடு கொண்டு வந்திருந்த பழுப்பு நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து மூச்சு விடாமல் முக்கால் மணி படித்துக் காட்டி விட்டுக் கிளம்பினார்.

மீண்டும் கலப்பை பிடிக்கத் தொடங்கினான் காத்தவராயன். பத்தடி உழுதிருப்பான். ''இன்னுங்க!'' என்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

அடுத்த அரை மணி நேரம் அவருடன் கழிந்தது. சூப்பர் பாஸ்பேட், யூரியா, என்பிகே மிக்ஸ்சர், பி2ஓ5, கே2ஓ — ஆகிய உர வகைகளின் அருமை பெருமைகளை எடுத்துச் சொன்னதுடன் கலப்பு உர மகிமை பற்றியும் புகழ் பாடிவிட்டு எழுந்தார் அந்த ஆசாமி. காத்தவராயன் தலை 'கிர்ர்'ரென்று சுற்ற ஆரம்பித்து விட்டது.

உரக்காரர் மூட்டை கட்டுவதற்குள் இன்னொருவர் வந்து சேர்ந்தார்.

'' யாருங்க நீங்க? லேபர் தொழிற் சங்கத் தலைவரா?''

''இல்லை! அவர் பின்னால் வருகிறார். நான் பூச்சி கொல்லி தயாரிப்பாளர்களின் ஏஜெண்ட்! 'பாலிடால்' என்று கேள்விப்பட்டிருப்பீர்களே? இல்லாவிட்டால், 'என்ட்ரின்' என்கிற பெயராவது காதில் விழுந்திருக்குமே! ஒரு கிலோ என்ட்ரினை நூற்றெழுபத்தைந்து லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து விட்டீர்களானால் ஒரு புழு, பூச்சி இந்த வயல் பக்கம்கூட அண்டாது. இந்தாங்க, சாம்பிள்!''

''எனக்கெதுக்குங்க அது இப்போ? இன்னும் உழவுகூட சரியாக ஆரம்பிக்கல்லே!''

''சரி, நான் அப்புறமா வந்து கண்டுக்கறேன்!''

காத்தவராயன் வரப்பின் ஓர் ஓரமாக இருந்த மரத்தடியில் தலையைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து உட்கார்ந்தான். உச்சி வெய்யில்.

சற்றைக்கெல்லாம் சட்டியில் சாப்பாட்டுடன் அஞ்சலை வந்தாள். ''ஏன் மச்சான்! ரொம்பப் பாடுபட்டிருப்பே போலிருக்கே இன்றைக்கு? இப்படிக் களைச்சுப் போய் உட்கார்ந்திருக்கிறாயே?'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

''ஆமாம் புள்ளே, ரொம்பத்தான் பாடுபட்டுட்டேன், மனுசங்களோட! 'கிராமத்துக்குப் போ'ன்னு பட்டணத்திலே சொல்லிக்கிட்டிருக்காங்களாம். அதே போல நாம 'பட்டணத்துக்கே திரும்பிப் போங்க'ன்னுட்டு இயக்கம் ஒண்ணு ஆரம்பிச்சா தேவலை! அப்போதான் நம்ம வேலையை நிம்மதியா செய்ய முடியும்!'' என்றான் காத்தவராயன் வெறுப்புடன்! — எஸ். வி. ஆர்.



பத்மஸ்ரீ டி. முத்தையன்



முப்பது வருஷங்களுக்கு ஒரு முறை சில நிகழ்ச்சிகள் ஒரு 'சைக்கிளாக'த் திரும்ப நடக்கும் போலிருக்கிறது. படித்த எஞ்சினீயர்களுக்கு வேலை வாய்ப்பு இராத நிலை அப்படிப்பட்ட ஒன்றுதானோ என்னவோ! 1935ல் என்னுடன் பி. ஈ. பட்டம் பெற்றவர் அறுபது பேர்கள்தாம். பரந்த சென்னை ராஜதானியில் வேலை கிடைக்கவில்லை! ஐந்தாண்டுகள் 'சும்மா' இருந்தேன். இப்போது நினைத்துப் பார்த்தால், உத்தியோக மற்ற அந்த ஐந்தாண்டுகளில் நான் அநுபவத்தில் பெற்ற அறிவும் தன்னம்பிக்கையும் தான் எனது பிற்கால வாழ்க்கை வளர்ச்சிக்கு உதவியுள்ளன என்பது தெரிகிறது.

நிர்மாண வேலையில் நிபுணர்கள்

வேலை கிடைக்காததால் சொந்த ஊருக்குப் போனேன். தெரிந்தவர்களுக்குக் கட்டடம் கட்டுவதில் உதவினேன். பல கட்டட வேலைகளில் புது மாதிரி எண்ணமிட்டுத் திட்டம் போட்டு, டிசைன் வரைந்து, அதைச் செயல்படுத்துவது வரை நிறைவேற்றினேன். சில வீடுகளில் 'ஆர். ஸி.' முறையைப் புதிதாகப் புகுத்தினேன். நீண்ட நாள் பழக்கத்துக்கு மாறான யோசனைகளை நிறைவேற்றுவதில் ஒரு தயக்கம்; அதன் பலனில் ஒரு சந்தேகம்.

உலக யுத்தம் தொடங்கியபோது அதிக எஞ்சினீர்கள் தேவைப்பட்டார்கள். கல்லூரிப் பயிற்சிக் காலத்தைக்கூட ஒரு வருஷம் குறைத்தார்கள். எனக்கும் அரசாங்க வேலை கிடைத்தது.

படிப்புக்கும் வேலைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகச் சொல்ல முடியாது. தொழிலில் இறங்கிய பிறகுதான் சில நுட்பங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது.

முதலில் பெரிய நிர்மாண வேலைகளில் வெள்ளைக்காரர்கள் இருந்தனர். பிறகு, நீண்ட காலமாக, பெரிய பெரிய நிர்மாண வேலைகளை — அணை, பாலம் எல்லாவற்றையும் நமது எஞ்சினீர்களேதான் திட்டமிட்டுச் செயல்படுத்தி வந்தனர். இவர்களுக்கு வெளிநாட்டுக் கல்வியோ, விசேஷப் பயிற்சியோ இருக்கவில்லை. நமது தொழில் நுட்பக் கல்வியின் தரம் உயர்ந்ததுதான் என்பதற்கு இது ஒரு சான்று.

சென்னை எஞ்சினீர்கள் நாடெங்கும் பல இலாக்காக்களிலும் எல்லாக் கம்பெனிகளிலும் பரவியிருந்தனர். மொத்தமாக இந்தியாவில் சராசரி இரண்டு லட்சம் ஜனத்தொகைக்கு மூன்று எஞ்சினீர்கள்தான். ஆனால் தமிழ் நாட்டிலோ இந்த விகிதம் ஏழு பேர். தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிப் பெருக்கத்தால் இத்தனை பேருக்கும் வேலை வாய்ப்புக் கிடைத்து வந்தது.

மூன்றாவது திட்ட காலம் வரை எஞ்ஜினீர்களுக்கு நீடித்த வேலை வாய்ப்புக் கிடைத்து வந்தது. நாட்டின் தொழில் நிலையில் நல்ல காலமும் இருக்கும்; க்ஷீணகாலமும் இருக்கும். இனி பயனுள்ள உழைப்புக்கு வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இத்தகையதொரு நிலைக்கு உதவும் வகையில்தான் பரவலாகவும் அநுபவத்துக்கு ஒட்டியும் தொழில் நுட்பக் கல்வி வகுக்கப்பட்டு வருகிறது. தொழில் கல்வி இலாகா என்னும் புதிய துறையை அடிமட்டத்திலிருந்து தொடங்கும் பொறுப்பைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்றேன். இப்போது எஞ்சினீரிங் கல்லூரிகள் பாலிடெக்னிக் எல்லாமாகச் சுமார் ஐந்து மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளன. அறுபத்து நான்கு தொழிற் கல்வி நிலையங்களிலிருந்து ஆண்டு

தோறும் சுமார் எண்ணூயிரம் பேர் தேர்ச்சி பெறுகின்றனர். ஆசியாவிலேயே பெரிய 'டெக்னலாஜிகல் கேம்பஸ்' சென்னையில் அமைந்துள்ளது. எத்தனை வகைத் தொழில் துறைகள்! அத்தனையும் பயில இங்கே வாய்ப்பு இருக்கிறது. நாட்டின் வளமான முன்னேற்றத்துக்கு ஒரு நம்பிக்கைச் சுடராக ஒளிர்ந்து வருகிறது.

என். விஸ்வநாத் பி. ஈ., ஏ. எம். ஐ. ஈ.

அப்பாவும் தாத்தாவும் பிரபல லாயர்களாக இருந்தும் நான் என்ஜினீர் ஆகவே ஆசைப்பட்டேன். சமீப காலம் வரை இருந்த அளவு வேலை வாய்ப்புக்கூட தற்போது இல்லை. பதினோராயிரம் என்ஜினீர்கள் வேலையில்லாமல் இருப்பதாக இன்று பார்லிமெண்டில் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி ஏதாவது வேலை கிடைத்தாலும் முன்னுக்கு வர எத்தனையோ வருஷங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. யாருக்கு என்ன வேலை கிடைக்கும் என்பது நிச்சயமில்லை. இதற்கு ஒரு காரணம் கல்லூரிப் படிப்பு, வேலையை ஒட்டியதாக இருப்பதில்லை. படித்துக் கொண்டிருக்கும் காலத்திலேயே, வைத்தியப் படிப்புக்கு ஆஸ்பத்திரிப் பயிற்சி போல, எங்களுக்கு அநுபவப் பயிற்சி தர வாய்ப்பு இருப்பதில்லை. ஏட்டுப் படிப்புக்குப் பின்பு சொந்த முயற்சியில்தான் தொழில் அறிவு பெற முடிகிறது. இந்த நிலை மாறி வேலையை ஒட்டியதாக (Job Oriented) தொழிற் படிப்பு நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இப்படி நிகழ்ந்தால்தான் இளைஞரிடையே தொழில் துறை பற்றி ஆக்கபூர்வமான அக்கறை தோன்றும். புதிது புதிதான கண்டுபிடிப்புக்கும், இருப்பனவற்றைச் சிறப்பாக்கவும் வாய்ப்புக்கள் நேரும்.

சுதந்திரம் அடைந்து இருபது ஆண்டுகளுக்குப் பின்னும் பல தொழில்களிலும் வெளியார் கூட்டு முயற்சிகளேதான் இருக்க வேண்டுமா? நமது என்ஜினீர்களும், டெக்னீஷியன்களும் சோடையா என்ன? சில ஆண்டுகளுக்குமுன் ஜப்பானில் நிலவிய தொழில் — பொருளாதார நிலை போலத்தான் நம்முடையதும். அங்கே வெளியார் கூட்டு முயற்சியா இருக்கிறது? எந்தப் புதுத் தயாரிப்பையும் தருவித்து, மாதிரியாக வைத்து, புதிது புதிதாகச் செக்கனமாயும் சிறப்பாயும் செய்து விடுகின்றனரே! நமது நாட்டிலே தொழிலுக்குத் தர வேண்டிய மரியாதையைத் தந்தால் இங்கும் அப்படி இருந்திருக்கலாம். அரசியல் சூழ்நிலையாலும் நிர்வாகச் சூழ்நிலையாலும் இங்கே தொழில் நுட்பத் துறைக்கு மதிப்பு இல்லை. நாட்டின் மொத்தத் தொழில் வளர்ச்சியில் காட்ட வேண்டிய அக்கறை, பிராந்திய அரசியல் ஆர்வங்களால் பாதிக்கப்படுகிறது.

தொழில் அறிவைப் பிரயோகித்து விவசாய உற்பத்தியைப் பெருக்கலாம்தான். நாட்டின் பெரிய உணவுப் பிரச்னை தீர உதவலாம். ஆனால் அரசியல் — நிர்வாகச் சூழ்நிலை, விவசாய வளர்ச்சியில் ஏராளமாக முதல் போட்டுத் தீவிரம் காட்டத் தூண்டவில்லையே.

தற்போது அடிமட்டத்திலுள்ள தொழில் நுட்பக்காரர்களுக்கு முன்னேற வாய்ப்பு இல்லை; உற்சாகமும் இல்லை. அதிகப்படியான பட்டங்களுக்குப் படித்தாலும் அதிக வேலை வாய்ப்பு பிரமாதமாக இல்லை. வெளிநாடுகளில் தேவையும் தமது அறிவைக் காட்ட வாய்ப்பும் இருக்கும்போது அங்கே அவர்கள் போய் விடுவதில் வியப்பு என்ன? ஆனால் அவர்கள் இங்கே தங்கித் தமது முழுத் திறமையையும் காட்டினால்தான் நாட்டில் வளமான வாழ்வு கிடைக்கும். இவை ஒன்றையொன்று பாதிக்கும் பிரச்னைகள் தான்.


ஆனால் வேறொரு வகையில் சில பிரச்னைகள் தீரலாம். தொழிற் கல்விப் பட்டம் வாங்கியவரைவிட, அநுபவ அறிவுள்ள திறமைசாலிகள் தொழில்துறைகளுக்கு எவ்வளவோ சாதிக்க முடியும். தகுந்த ஊக்கம் மட்டும் தேவை. தொழிலுடன் ஒன்றி, பிரச்னைகளையும் தேவைகளையும் உணர்ந்த சாதாரணமான பலர் வெளிநாடுகளில் சிறந்த கண்டுபிடிப்புக்களைச் சாதித்துள்ளனர். உதாரணமாக, இப்போது சக்கைப்போடு போடும் விவசாயக் கருவிகளை அமைத்த பெர்கூஸன் இப்படிப்பட்ட ஒருவரே.

தொழில் வளர்ச்சிக்கும் அதை ஒட்டிய வேலை வாய்ப்புக்கும் ஓரளவு எல்லை உண்டு. இயற்கைச் சக்திகளின் மூலம்தான் சுபிட்சம் காண முயலுகிறோம். தற்போது சில துறைகளில் ஓர் எல்லையை எட்டிவிட்டோம். அடிப்படைத் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்ய ஆறுகளில் எல்லாம் முயன்றாகிவிட்டது. நெய்வேலி போன்று தெர்மல் முறையும் இயன்ற அளவு செய்தாயிற்று. இனி அணு மின்சக்தி வந்தால்தான் மறுபடியும் புதுத் தொழில்கள் வளர வாய்ப்புக் கிடைக்கும்.

சொல்லப் போனால், தொழில் வளத்தைப் பொறுத்ததுதான் பொருளாதார வளர்ச்சி, அதன் ஸ்திரத்தன்மை.

பேட்டி: அம்பி ஆசீர்வாதம்





007 பாலு
22
கதை: குமரன்
படம்: விஜயா
துப்பாக்கி பாலுவின் கைக்கு மாறியது. ஜோக்கருடைய கழுத்தைச் சுற்றியிருந்த துணி பாலுவின் கரத்திலிருந்த துப்பாக்கியை மறைக்கப் பயன்பட்டது. பாலு படகைக் கரைக்கு ஓட்டச் செய்தான்.
இதோ பார்! துப்பாக்கியை இயக்கப் பாலு தயங்குவான் என்று நினைக்காதே! நீ இறந்தால் போலீஸார் பாலுவை வாழ்த்தத்தான் செய்வார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்!
நீ சொன்னபடியெல்லாம் நான் ஆடறேனே! இன்னும் ஏன் வெறும்பைத் தொட்டுக் கிறே?
கரை சேர்ந்ததும்....
இந்தக் கொலைகாரக் கும்பலின் தலைமைச் செயலகத்துக்கு நம்மை அழைத்துப் போகுமாறு இவனுக்கு உத்தரவிடு சுரேஷ்!
சுரேஷ் அவ்வாறே செய்ய....
....ஒரு டாக்ஸியைப் பிடித்தார்கள்.
பாலு நம்மைத் தீர்த்துக் கட்டுவதில் அவங்க தீவிரமாயிருக்க அந்த ஆபத்தான கோட்டைக்குள்ளேயே நாம் நுழைவதா?
TAXI
இந்த '007' இருக்க உனக்கென்னடா பயம்?!
அசடே! அப்பாவிடம் டெலிபோனில் பேசினப்போ அவர் பார்த்தன் என்னைத் தேடிக்கிட்டு பம்பாய் வந்திருக்கிறதா சொன்னார். அவர் ஏன் இரவோடு இரவாக என்னைப் பார்க்க வரலை? என்னைப் பின் தொடர்ந்துகிட்டிருக்கிறாருன்னு அர்த்தம்! அந்தத் தைரியம் தான் எனக்கு!
சற்று நேரத்தில் டாக்ஸி, மலபார் ஹில் பகுதியில் முன்பு பாலு நோட்டம் பார்த்த அதே பங்களா வாசலில் நின்றது. ஜோக்கரையே டாக்ஸிக்குப் பணம் தர வைத்தார்கள். அது போனதும்....
இவன் என்ன நம்மை ஏய்க்கப் பார்க்கிறானோ? நான் இங்கு ஏற்கனவே வந்திருக்கிறேனே?


ஜோக்கரை சுரேஷ் இது பற்றி வினவ....
வீட்டைப் பார்த்திருக்க-லாம். ஆனால் அதனுள் மறைந்திருக்கும் மர்ம உலகைப் பார்த்திருக்க முடியாது! அந்த ரகசிய உலகின் தலைவர் ராஜா...
இதைத் தொடர்ந்து ராணி, ஜாக்கி, ஜோக்கர் இவர்களை இடம் கண்டு கொண்டான் பாலு.
ஏன் யாரு! அதையும் சொல்லிடு!
ஆ! அனைவரையும் ஆட்டுவிக்கிற அந்த சூத்திரதாரி யார் என்று ஒருவருக்குமே தெரியாது! ஒரு வேளை ராஜாவுக்குத் தெரிந்திருக்-கலாம்; கேட்டுப் பாரேன்!
விவரம் அறிந்ததும், 'கேட்டுத்தான் போகிறேன்' என்ற பாலு, வாசலில் மணி அடிக்கும் பித்தானை அழுத்தினான். அந்த சமயத்தில் அப்பித்தான் மறைவாக வைக்கப்பட்டிருந்த ஒரு டெலிவிஷன் காமிராவை இயக்கி விட....
....மர்மக் கோட்டையில் ராஜா அவர்களை டெலிவிஷன் திரையில் பார்த்தான்.
முட்டாள்! வெட்டி வீழ்த்தச் சொன்னால் வெற்றிலை பாக்கு வைத்து அழைத்து வந்திருக்கிறானே!
கோபப்படா-தீங்க! புலிக் குகைக்குள் நுழைந்த இவர்கள் தப்பவா போகின்றனர்!
தப்பிவிட்டால் ஆபத்து! அந்த ஜோக்கரையும் கண்டிக்காம விட மாட்டேன்! மேலும் சாகிறதுக்கு முன்னாடி என்னைப் பற்றி முழு-சாத்தான் தெரிஞ்சுக்கட்டுமே? என்ன கெ-ட்டுப் போச்சு! ஏய் ஜாக்கி! கதவைத் திறந்து விடு!
மற்றொரு பித்தானை ஜாக்கி அழுத்த, வாசல் கதவு திறந்தது. இது புதிய அனுபவமில்லாததால் ஜோக்கர், நேரே புத்தக அலமாரிபோல் தோன்றிய ரகசியக் கதவின் அருகே வந்தான். ஒரு வினாடியில் அதுவும் திறக்கப் பட்டது.
உம்... ஜோக்கர் முன்னால் போகட்டும்; அடுத்தது நீ சுரேஷ்!



இந்தியாவைச் சுற்றி இரு மாணவர்கள்!

பம்பாயில் சுற்றுலா பயணிகள் தகவல் இலாகாவினுக்குள் தென் ஆப்பிரிக்கர் லக்கனி நுழைந்தார். தகவல் அதிகாரியிடம், ''எனக்குத் தென்னிந்தியாவில் பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றிய தகவல் தெரிய வேணும்'' என்றார் லக்கனி.

''நீங்கள் தென்னிந்தியாவுக்குப் போங்கள். அங்கே வேண்டிய தகவல்கள் கிடைக்கும்'' என்று பதிலளித்தார் தகவல் அதிகாரி!

லக்கனி இந்தப் பதிலைக் கேட்டு அலமந்து போனார். தகவல் நிலையத்தினர் இப்படிக் கிணற்றுத் தவளைகளாக இருப்பதைக் கண்டு அவர் வருத்தமுற்றிருக்கிறார்.

நமது 'டூரிஸ்ட்' இலாக்காவினர் இன்னும் நிரம்படச் செயல்பட வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லையாயினும் அந்தத் தகவல் அதிகாரி கூறியதிலும் ஆழ்ந்த அனுபவ உண்மை பொதிந்திருப்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். எந்த ஒரு பிரதேசத்தைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள வேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி அந்த இடத்துக்கு நேரில் போவதுதான்!

லயோலாக் கல்லூரி மாணவர்கள் இருவர் தாங்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கக் கூடாது, நாடு முழுவதும் பார்த்து நேரிடை அனுபவம் பெற வேண்டும் என்று சைக்கிளிலேயே மார்ச் 1ந் தேதியிலிருந்து ஜூலை 10ந் தேதி வரை சுற்றக் கிளம்பியிருக்கிறார்கள்.

ஜோசப் மடியாத், கொல்லம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே தம் இரு மாணவ நண்பர்களுடன் நூற்றியொரு நாட்கள் தென்னாட்டையும் பம்பாயையும் இலங்கையையும் சைக்கிளில் சுற்றி வந்திருக்கிறார்.

''உங்கள் சைக்கிள் சுற்றுப் பயணத்தில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் எவை?''

''நான் மகாராஷ்டிரத்தில் அம்போலியிலிருந்து செவந்தவாடிக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன். மலைப்பாதை இறக்கத்தில் சைக்கிள் விரைந்து கொண்டிருந்தது. ஒரு திருப்பத்தில் அப்படியே சைக்கிள் சறுக்கிச் சரிய நான் உருண்டு ஒரு பாறையில் தொங்கினேன். கீழே மூந்நூறு அடி பள்ளம். விழுந்தால் அரோகராதான். பாறையில் தொங்கிய படியே நகர்ந்து தப்பித்தேன்!''

''ஜோஸப் மடியாத் ஜேம்ஸ்பாண்ட் மாதிரி சாகசச் செயல் புரிந்திருக்கிறார்!'' என்று வியக்கிறார் சகமாணவர் மகாபாத்ரா.

''மற்றொரு நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. மவுண்ட்ரோடில் ஒரு நூலகத்தின் வாசலில் நானும் எனது நண்பரும் சைக்கிள்களை வைத்து விட்டு உள்ளே நுழைந்தபோது ஏற்பட்ட அதிசயம்! பூட்டாத எனது சக தோழரின் சைக்கிள் பத்திரமாக இருந்தது! பூட்டி வைத்திருந்த எனது சைக்கிள் காணமல் போய் விட்டது! சென்னை ரோட்டரி கிளப்பினர் எனக்கு வேறொரு சைக்கிள் கொடுத்து என் பிரயாணத்தைத் தொடர வசதி செய்து தந்தார்கள்!'' என்றார் ஜோசப் மடியாத்.

''இது எனது முதல் பிரயாணம். எங்கள் பிரயாணத்தின்போது கொள்ளைக்காரர் உள்ள பகுதியில் செல்லும் வாய்ப்புக் கிடைத்தால் பெரிதும் மகிழ்வேன்! அந்த அனுபவம் எப்படி இருக்கும் என்று அறிய ஆவல்!'' என்றார் மகாபாத்ரா.

''உங்கள் பொருள்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டு விடுவார்களே?''

''இல்லை, எங்கள் நோக்கம், லட்சியம் இவற்றை அறிந்தால் அவர்கள் மகிழ்ந்து பாராட்டுவார்கள் என்றே தோன்றுகிறது'' என்றார் மகாபாத்ரா. துணிச்சல்காரர்தான்!

''என் முந்திய சைக்கிள் பிரயாணத்தில் ஒரே நாளில் 154 மைல்களைக் கடந்திருக்கிறேன். ஒரே நாளில் சைக்கிளில் பதினெட்டு 'பஞ்சர்'கள் ஏற்பட்டு அவஸ்தையும் பட்டிருக்கிறேன்'' என்றார் ஜோசப் மடியாத்.

''உங்கள் பிரயாணத்தின் நோக்கம் என்ன?''

''மாணவர்களிடையே ஒருமைப்பாடு காண ஓரளவேனும் எங்கள் பயணம் பயன் பட்டால் அதுவே எங்களுக்குப் பெருமைதான்'' என்கிறார்கள் இவ்விரு லயோலாக் கல்லூரி மாணவர்களும். ஏட்டுப் படிப்போடு நேரிடை அனுபவமும் பெறத் துணிச்சலோடு சைக்கிளில் புறப்பட்டிருக்கும் இவ்விரு மாணவர்களுக்கும் 'வெற்றியோடு திரும்புக' என்று வாழ்த்துக் கூறுகிறோம்.

—குண்டுமணி

ஜோசப் மடியாத்தும்
மகாபாத்ராவும்





புதுடயரா அல்லது டிவிஎஸ் ரீடிரெட் செய்ததா?

சொந்தக்காரருக்கு மட்டுமே தெரியும்!

அதிநுட்பமுள்ள கார் சொந்தக்காரர்கள் என்ற முறையில் உங்கள் டயர்கள் ரீடிரெட் செய்யப்படுவதன்மூலம் அதிக நாளைக்கு பயன்படுவதையே நீங்கள் விரும்புவீர்கள். எனினும் வெளிப்படையாக ரீடிரெட் செய்யப்பட்டதாக தோன்றும் ஒரு டயரை உபயோகிக்க நீங்கள் விரும்பமாட்டீர்கள். டி வி எஸ் ரீடிரெட் செய்தவை புதியனபோலவே தோற்றமளிக்கின்றன. புதியன போலவே உழைக்கின்றன. அவை ரீடிரெட் செய்யப்பட்டவை என்று உங்களுக்குமட்டுமே தெரியும். மேலும் எவ்வளவோ செலவு மிச்சம்! புதிய டயர் ஒன்றின் விலைக்கு நீங்கள் மூன்று டயர்களை ரீடிரெட் செய்துகொள்ளமுடியும்!

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

ங்களூர்-கோயமுத்தூர்-சென்னை-புதுக்கோட்டை - செகந்திராபாத்-திருநெல்வேலி-விஜயவாடா



தயாரிப்பு:
வாண்டுமாமா

33



இது என்ன?

ஆப்பிரிக்கர்களின் கிஸ்ஸார் (Kissar) என்பது ஓர் இசைக் கருவி. மனிதனின் மண்டையோடு, காஸில்லி என்ற ஒரு வகை மானின் கொம்புகள் இவற்றால் ஆக்கப்பட்டது இந்த வாத்தியம்.

□ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □



நிலா வருது, நிலா வருது
மலைக்கு மேலே! — அது
நெருங்கி வருது, நெருங்கி வருது
தலைக்கு மேலே!

உலா வருது, உலா வருது
ராணி போலே! — அது
ஓடி வருது, ஓடி வருது
தோணி போலே!

மெருகி வருது, மெருகி வருது
மேகம் மேலே! — அது
மின்னி வருது, மின்னி வருது
போக மேலே!

உருகி வருது, உருகி வருது
வெண்ணெய் போலே! — அது
உருண்டு வருது, உருண்டு வருது
கிண்ணி போலே!


□ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □

விந்தையல்லவோ....!

தபால் தலைகளைச் சேகரிப்பீர்கள் உங்களில் சிலர். வேறு சிலர் நெருப்புப் பெட்டிப் படங்களைத் திரட்டுவார்கள். பல தேசத்து நாணயங்களைச் சேர்த்து வைப்பது மற்றொருவரின் விருப்பம். இப்படி அரிய பொருள்களைச் சேர்த்து வைப்பது மனிதர்களிடமுள்ள பழக்கம். நவரத்தினங்களையும் முத்துக்களையும் சேகரித்து வைக்க முடியுமா? முடியும். யாரால்? மொகலாயப் பேரரசர் ஜஹாங்கீரால்தான் அது முடிந்தது. அவரது பொக்கிஷத்தில் 2,79,450 காரட் வைரங்களும், 22,35,600 காரட் முத்துக்களும், 3,72,600 காரட் ரத்தினங்களும், 9,31,500 காரட் மரகதக் கற்களும், 1,86,300 காரட் 'ஜேட்' என்ற கல்லும் இருந்ததாகப் பின்னால் வந்த ஆங்கிலேயர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் காரட் கணக்கெல்லாம் ஜஹாங்கீர் காலத்தில் கிடையாது. அவர் நவரத்தினங்களை மணங்குக் கணக்கில் அளந்து வைப்பவர். (ஒரு மணங்குக்கு 1,86,300 காரட்டுகளாம்!)

ஜஹாங்கீர் ரொம்பவும் சகிப்புத் தன்மை மிக்கவர். இவரது இளமைப் பெயர் ஸலீம் என்று உங்களுக்குத் தெரியும். ஜஹாங்கீர் என்றால் உலகை வென்றவர் என்று பொருள். இவருக்கு, வாழ்க்கை என்ற புத்தகத்தின் அட்டவணை, பெருமைமிக்க ஆண்டவனின் குற்றமற்ற முகம் பார்க்கும் கண்ணாடி, கோள்களைத் தமதாக்கிக் கொண்டவர், உலகை அடக்கியாளுபவர், அதிருஷ்டப் பெருக்கத்தின் மன்னன் என்றெல்லாம் பல விருதுகள் உண்டு. உயர்ந்த மதுவை விரும்பிச் சுவைத்து மகிழும் இவர், மீன் பிடிக்கும் கலையில் வல்லவர். தாம் பிடித்த மீனை இவர் உடனே தூண்டிலிலிருந்து விடுவித்து நீரில் வீசி விடுவார். சும்மா வீசுவார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. அதன் கழுத்தில் ஒரு சின்ன முத்து மாலையை அணிவித்துத்தான் அதற்கு விடுதலை வழங்குவாராம். இது விந்தையல்லவோ?





சென்ற இதழ்
முத்தான முத்தின் விடை

குள்ள வாத்தின் யாத்திரை

அது ஒரு குள்ள வாத்து. உருவம்தான் வாத்தே தவிர அதன் திறமை யாருக்கும் வராது. ரொம்பத் தந்திரசாலி. மந்திர சக்தியும்கூட அதற்கு உண்டு. ரொம்பப் பணக்கார வாத்தும்கூட. அந்த ஊர் ராஜா ஓர் ஊதாரி. அவருக்கு ஒரு சமயம் ரொம்பப் பணமுடை ஏற்பட்டது. அப்போது குள்ள வாத்திடம் தான் ராஜா கடன் கேட்டார். வாத்தும் தன்னிடமிருந்த செல்வத்தை யெல்லாம் ராஜாவுக்குக் கடனாகக் கொடுத்தது. ஆனால் அகம்பாவம் பிடித்த ராஜா ஒப்பந்தப்படி வாங்கிய பணத்துக்கு வட்டிகூடக் கொடுக்கவில்லை. இரண்டு வருஷங்கள் பொறுத்துப் பார்த்த வாத்து அரண்மனையை நோக்கிக் கிளம்பிற்று, கடனை வசூல் செய்ய.

வழியில் வாத்தின் தோழன் குள்ள நரி எதிர்ப்பட்டது. 'நானும் உன்னுடன் வருகிறேனே. பட்டணத்தைப் பார்த்ததில்லை' என்றது நரி. வாத்தும் சரி என்று அதைத் தன் மந்திர சக்தியால் துக்குணியூண்டாக்கித் தன் தாடையில் அடக்கிக் கொண்டது. அடுத்து வாத்தின் இன்னொரு தோழன் ஏணி எதிர்ப்பட்டது. அதுவும் வாத்துடன் வரப் பிரியப்படவே ஏணியையும் தன் வாய்க்குள் அடக்கிக் கொண்டது குள்ள வாத்து. வழியில் ஒரு சிற்றாறு குறுக்கிட்டது. வாத்தின் உயிர்த் தோழனாயிற்றே, அந்த ஆறு. அதன் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமல் போகலாமா? சிற்றாரைச் சின்னதாக்கித் தன் வயிற்றுக்குள் ஒளித்துக் கொண்டது. கடைசியாக வாத்து குளவிக் கூட்டத்தைக் கண்டது. அவையும் கெஞ்சவே அவற்றுக்கும் கொஞ்சம் இடம் கிடைத்தது குள்ள வாத்தின் தாடையில்.

அரண்மனையை அடைந்த குள்ள வாத்து அரசரைக் காண அனுமதி கேட்டது, வாயில் காப்போனிடம். அவர்கள் வாத்தின் வரவை அரசருக்கு அறிவிக்கவே அவர் அலட்சியமாக அதைப் பறவைகள் அடைத்து வைக்கும் கொட்டடியில் கொண்டு போய்த் தள்ளுமாறு அவர்களுக்கு உத்தரவிட்டார். பாவம், குள்ள வாத்து! பறவைக் கொட்டடியில் இருந்த கோழி, புறா முதலிய மற்ற பறவைகள் குள்ள வாத்தைக் கொத்திக் கொல்ல வந்தன. உடனே வாத்து தன் வாயிலிருந்த நரி நண்பனை வெளியே அவிழ்த்து விட்டது. நரி அந்தப் பறவைகளைக் கொன்று விட்டது. நடந்ததை அறிந்த அரசருக்கு ஒரே ஆத்திரம். வாத்தை ஒரு கிணற்றுக்குள் வீசி எறிய உத்தரவிட்டார். குள்ள வாத்து கோபப் படவே இல்லை. அதன் தோழன் ஏணி, அனுவிலிருந்து ஆகாசத்துக்கு நீண்டது. வாத்து ஏணி வழியே கிணற்றிலிருந்து வெளியே வந்தது. குள்ள வாத்தின் திறமை மன்னரை வெறி கொள்ளச் செய்தது. வாத்தைக் கன்னும்புக் காளவாயில் தள்ளும்படி ஆணை பிறப்பித்தார். வாத்து சிரித்துக் கொண்டது. அதன் வயிற்றுக்குள் பதுங்கியிருக்கும் சிற்றாறு கன்னும்புக் காளவாயைக் குளுகுளு வென்று ஆக்கிவிடாதா?

நன்றாக நீந்திக் குளித்துவிட்டு மன்னருக்கு முன்னே போய் 'க்வாக்' 'க்வாக்' என்றது குள்ள வாத்து. இனிமேலாவது வாங்கிய பணத்தைக் கொடுத்து விடுவார் என்று நினைத்தது வாத்து. ஆனால் பொல்லாத அரசரோ தம் உடைவாளை உருவி அதைக் கொல்ல வந்தார். வாத்துக்கு வேறு வழியே இல்லை. குளவிக் கூட்டத்தை உதவிக்கு அழைத்தது. அவ்வளவுதான்! ஈசலெனக் குளவிகள் வெளிப்பட்டு மன்னரின் உடலெங்கும் கொட்டிவிட்டன. வலியின் வேதனை தாங்காத ராஜா அலறிக் கொண்டு ஜன்னல் வழியே வெளியே குதித்துத் தம் உயிரை மாய்த்துக் கொண்டார்.

உடனே மந்திரிகள் ஓடி வந்து குள்ள வாத்தின் தலையில் மணிமுடியை வைத்து இனி அதுவே தங்களை ஆள வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். குள்ள வாத்து என்ன செய்யும், பாவம்! ''அரச பதவி இருக்கட்டும். இப்போது என் வயிற்றுப் பசிக்கு ஏதாவது கொண்டு வாருங்கள்'' என்று ஆணை பிறப்பித்தது அரசனான வாத்து.



வளைந்த வில்

அன்று ஞாயிற்றுக்கிழமை. வெளி நாட்டுக் கலாசார தூதுகோஷ்டியொன்று நடத்தவிருந்த ஒரு விசேஷ நடன நிகழ்ச்சிக்கு வந்தனாவுடன் போவது என நேற்றே திட்டமிட்டபடி மாலை ஐந்து மணிவாக்கில் புறப்படத் தயாரான முத்துசிவன், வெளியே ஏதோ காரியமாகப் போயிருந்த தன் அம்மாவை எதிர் பார்த்தவாறு வராந்தாவில் தவிப்புடன் நின்று கொண்டிருந்தான். இந்தச் சமயம் சுகுணா காரில் வந்து இறங்கவே அவனுக்கு வியப்பும் திகைப்புமாகி விட்டது.

''என்ன ஆச்சரியம் ! மழை வருமா இன்றைக்கு ?'' என்று கேலியும் குதூகலமுமாகக் கூறி அவளை வரவேற்றான் அவன்.

நாணித் தலைகுனிந்த சுகுணா அவனைக் கடைக் கண்ணால் பார்த்துப் புன்முறுவல் பூத்தவாறு கூச்சத்துடன் உடம்பை நெளிந்துச் சற்று ஒதுங்கி உள்ளே சென்றவள் கூடத்து



அறையைக் கடந்ததும் தயங்கி நின்று, ''அத்தையம்மா எங்கே இருக்கிறாங்க ?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

அவளுக்குப் பின்னால் வந்து நின்ற முத்துசிவன், ''நானும் அவங்களைத் தான் எதிர்பார்த்துக்கிட்டு இருக்கிறேன். வெளியே போய் இருக்கிறாங்க. இப்ப வருகிற நேரம்தான்'' என்றான் மகிழ்ச்சியுடன்.

வீட்டில் அன்னபூரணியம்மாள் இல்லாத நேரத்தில் வந்துவிட்டோமே என்று உள்ளூற அச்சமும் குழப்பமும் அடைந்த சுகுணா, போய்விடலாமா என்று எண்ணி வாசலில் நிறுத்தியிருந்த தன் காரைத் திரும்பிப் பார்த்தாள். அப்படிப் போய் விட்டால் முத்துசிவன் மனம் வருந்துவதோடு தன் மீது கோபப்பட்டும் கொள்வான் என்று தோன்றவே தவிப்புடன் தயங்கி நின்று அங்குமிங்குமாக நோக்கினாள்.

''நிற்கிறாயே! இப்படி உட்கார், சுகுணா!'' என்று கூடத்து அறையிலிருந்த ஒரு சோபாவைக் காட்டினான் முத்து சிவன்.

''அத்தையம்மா இப்போ வந்து விடுவாங்க, இல்லையா ?'' என்று குறு நகையுடன் வினவியவாறு ஓர் இரட்டை சோபாவில் அமர்ந்தாள் சுகுணா.

அவளின் இப்போதைய மன நிலையைப் புரிந்து கொண்டவன் போல் அவளையே ஒரு கணம் கூர்ந்து நோக்கிய முத்து சிவன், ''உன் அத்தையம்மாளைப் பார்ப்பதற்காகவா இங்கு வந்தாய்?'' என்று மெல்லச் சிரித்துக் கேட்டான்.

'இது அசட்டுத்தனமான கேள்வி' என்று சொல்லாமல் சொல்வது போன்று தலைகுனிந்தபடி நகைத்தாள் சுகுணா.

முத்துசிவன் காலணிகளைக் கழற்றிச் சுவர் ஓரமாக ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சமையலறைக்குப் போய், தனக்கெனத் தன் அம்மா ஃப்ளாஸ்கில் நிறைத்து வைத்திருந்த காப்பியைப் பிளாஸ்கோடு எடுத்து வந்து, ஒரு கோப்பையில் விட்டு நீட்டினான்.

அவன் செய்த இந்த உபசாரத்தைப் பார்த்துச் சுகுணாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. சோபாவில் சாய்ந்தவாறு களுக்கென்று சிரித்தாள் சுகுணா.

'' இந்த வீட்டிலே நீ வந்து என்னிடம் சொல்லப் போறதை நான்

இப்ப உனக்கு நினைப்பூட்டட்டுமா?'' என்று கேலியாகக் கண் சிமிட்டிக் கேட்டுக் கொண்டே அவள் அமர்ந்திருந்த அதே சோபாவில் சற்று இடைவெளிவிட்டு உட்கார்ந்த முத்துசிவன், ''காப்பி ஆறி ஐஸாகிறது! சாப்பிடுங்க!'' என்றான்.

அவனுடைய இந்தக் குறும்புத்தனமான பேச்சின் உட்பொருளை உடனே புரிந்து கொண்ட சுகுணாவின் உள்ளமும் மகிழ்ச்சித் திணறலிட்டுச் சிலிர்த்தது. அத்துடன் தான் இங்கு வந்த நோக்கத்துக்கு அப்பேச்சிலிருந்தே பாதியளவு விடையும் கிடைத்து விட்டது என்று எண்ணிப் பரவசம் அடைந்தாள். ஆயினும் அவன் திடுதிப்பென்று தன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டது அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காமற் போகவே சோபாவின் கைப்படியோரம் நெருங்கிப் போய் ஒடுங்கிக் கொண்டாள்.

இயற்கையிலேயே அவள் மிகவும் தைரியசாலி. நடை, பேச்சு, பார்வை, பாவனைகள் எல்லாமே கம்பீரமாகவும் பெருமிதம் கலந்த ஓர் அமைதியுடனும் இருக்கும். ஆண்களைக் கண்டால் அநாவசியமான அலுக்கல், குலுக்கலோ, நாணக் குழைவோ காட்ட மாட்டாள். அதிலும் முத்துசிவனைப் பார்த்துப் பேசும்போது அவளின் அந்தச் செம்மாந்த போக்கு உயருமே தவிரக் குறையாது. இதற்கு நேர்மாறாக அவன் அவளிடம் ஒரேயடியாகக் குழைந்து நெளிவான்; பேசக் கூசுவான்; பார்க்கச் சுணங்குவான். ஆனால் இன்றோ, அவள் மிகப் பயந்த சுபாவம் உள்ளவள் போல் காணப்பட்டாள். அவளுடைய பேச்சு, பார்வை, பாவனைகள் எல்லாம் அளவுக்கு மீறிப் பணிவாகவும், குழைவாகவும், வெட்கம் சூழ்ந்தும் தோன்றின.

இம்மாதிரி அவள் இப்போது மாறிப் போயிருப்பதற்குக் காரணம் என்ன? முத்துசிவனைப் பார்ப்பதற்கென்று முதல் தடவையாக அவனுடைய வீடு தேடி வந்திருக்கிறாள்; அப்படி வந்த சமயம் வீட்டில் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை; அவனிடம் பேச வந்த விஷயமோ தங்கள் திருமணம் எப்போது என்று திட்ட வட்டமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது — இம்மூன்று காரணங்களும் சேர்ந்தே அவளை அவ்வாறு 'நிறபேதப்'படுத்தி விட்டன!

தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்துக் கொண்ட முத்துசிவன் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

இதைக் கவனித்த சுகுணா, ''நீங்கள் எங்கோ வெளியே போகப் புறப்படறப்ப நான் தடங்கலாக வந்துவிட்டேன் இல்லையா?'' என்று மெல்லச் சிரித்துக் கேட்டாள்.

சிகரெட் புகைத்தவாறு அவளையே குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், ''நீ வந்ததை நான் தடங்கலாக நினைக்கலே, சுகுணா! மகிழ்ச்சி தரும் மங்கல முடங்கல் வந்ததாகவே கருதுகிறேன்!'' என்றான் மந்தகாச முறுவலுடன்.

வந்தனுவோடும் ரட்சகனோடும் நெருங்கிப் பழகினதாலோ என்னவோ, அவன் பேச்சில் நாடக வாடை வீசியது. சுகுணா இதை வெகுவாக ரசித்தாள். அத்துடன் அவனுடைய இதமான பார்வையும், பௌருஷம் நிறைந்த பாவனைகளும் அவளை வெகுவாக வசீகரித்தன. அதனால் இதுகாறும் அவளிடமிருந்த அச்சமும் கூச்சமும் மெல்ல மெல்லக் கட்டு விட்டுத் தளர, ஒயிலும் ஒய்யாரமுமாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இன்றைக்கு நாம் ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்குப் போவோமா? பல்கேரிய கலாசாரக் குழு ஒன்று வந்து நடத்தும் நடனங்கள். மிக நன்றாயிருக்குமாம்.''

ஆச்சரியத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்த சுகுணா, ''ஓ... அதற்குப் போகத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தீர்களா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; இதோ பார்!'' என்றவாறு தன் ஜேபியிலிருந்து இரண்டு டிக்கட்டுகளை எடுத்துக் காட்டினான் முத்துசிவன்.

''இரண்டு டிக்கட்டுகளா? இன்னொன்று யாருக்கு?''

''நீயே தெரிந்து கொள்ளலாம்!'' என்று கூறி நமட்டுச் சிரிப்பு சிரித்தான் அவன்.

தான் இப்போது அவனைப் பார்க்க வந்திராவிட்டாலும் தன்னை அவன் சந்தித்து அந்த நடன நிகழ்ச்சிக்கு அழைத்துப் போக ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறான் என்று எண்ணிய சுகுணா உள்ளம் குளிர்ந்து குதூகலித்தாள். ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''உங்களுக்கு இப்ப ரொம்பத்தான் தைரியம் ஆகிப் போச்சு!'' என்றாள் பொய்யான சிணுங்கலுடன்.

முத்துசிவன் இதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் விஷமப் புன்னகை பூத்துக் கொண்டான்.

''அந்த நடன நிகழ்ச்சிக்குப் போக இன்னும் நேரம் இருக்கிறதல்லவா ?'' என்று கேட்டாள் கருணா. அங்கு போவதற்குமுன் தான் வந்த நோக்கம் பற்றி அவனிடம் பேசி ஒரு முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு வினவினாள் அவள்.

''நேரம் நிறைய இருக்கிறது. அவசரம் ஒன்றுமில்லை'' என்று சொன்ன முத்துசிவன் சற்றே அருகில் நெருங்கி, ''காப்பி ஆறிப் போறதே!'' என்றான். கருணா காப்பியை எடுக்காமல் மெல்லத் திரும்பி அவனை நோக்கி ஓர் அழகுப் புன்னகை சொரிந்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

''எங்க வீட்டுக் காப்பி நன்னாயிருக்காதுன்னு நினைக்கிறயா ? சாப்பிட்டுப் பார் !''

''நான் நினைப்பது அதில்லை ; வேறொன்றைப் பற்றி நினைக்கிறேன்.''

''என்னவாம் அது ?''

''கொஞ்சம் முன்னாடி சொன்னீங்களே, இந்த வீட்டில் நான் வந்து உங்ககிட்ட, 'காப்பி ஆறிப்போகிறது. சாப்பிடுங்க'ன்னு சொல்லப் போறேன்னு! அப்படிச் சொல்றதுக்கு



புதியது!

தலைவலியைப் போக்க உபரி வலிமையுள்ள வலிநிவாரணி



பவரின் டாப்யூல்* வலியை முறியடிக்கிறது.

தலைவலி, தசை வலி, பல் வலி, ஜலதோஷம், ஃப்ளு முதலியவற்றால் ஏற்படும் அவதிகளைச் சக்தியுடன் அபாயமற்ற முறையில் எதிர்க்கிறது.

*விழுங்க எளிதான ஓர் காப்ஸ்யூல் வடிவ வில்லை.
ரிஜிஸ்டர்டு யூஸர்ஸ்: ஜெப்ரி மானெர்ஸ் & கம்பெனி லிட்.

EXTRA-STRENGTH
POWERIN
ANALGESIC Tabules

PW-5-152 TM

இன்னும் எவ்வளவு நாள் இருக்குது—அந்தப் பாக்கியத்தை எனக்கு எப்ப தரப் போறீங்க — என்கிறதைப் பற்றித் தான் நினைச்சேன்....''

''ஓ.... அதுவா?'' என்று உற்சாகமாகச் சிரித்தான் முத்துசிவன். ''அதற்கு என்ன இப்போ அவசரம்?'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே அவள் அருகில் மேலும் நெருங்கி வந்தான் முத்துசிவன்.

சுகுணா தன் இடது கையைச் சோபாவின் கைப் பிடிமேல் மடித்துப் போட்டு வலது கையையும் அதன் மீது துவளச் சாத்தி ஓர் எழிலார்ந்த கோணத்தில் இடையை வளைத்து ஒருக்களித்துச் சாய்ந்தவாறு தலையை மட்டும் திருப்பி அவனைப் பட்டும் படாமலும் நோக்கி ஒய்யாரப் புன்முறுவல் பூத்தாள்.

முத்துசிவன் அவளையே கண் கொட்டாமல் பார்த்தான். அவளுடைய தலைப்புறமிருந்து கீழ் நோக்கி நிதானமாக இறங்கி வந்த அவன் பார்வை சட்டென்று ஓரிடத்தில் தடைப்பட்டாற்போல் நின்றது.

சுகுணா வதன அழகி மட்டுமல்ல; நல்ல வாளிப்பான உடல் அழகும் கொண்டவள். ஆனால் கொஞ்சம் இரட்டை நாடித் தேகம். பிறந்தது முதல் • இந்நாள் வரை கஷ்டம் தெரியாமல் செல்வமாக வளர்ந்து வரும் அவள் அத்தகைய தளதளப்பான தேக வாகுடன் இருந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. வயதும் இப்போது முப்பத்திரண்டுக்கு மேல் ஆகி விட்டது. பேரிளம் பருவம். அதன் இயற்கையான தடயங்கள் அவளது முகத்தில் என்னத்தனையும் காணு விட்டாலும் உடம்பில் ஓரளவு தென்படவே செய்தன. அவற்றிலும் சற்று எடுப்பாகத் தெரிந்தன, அவளின் பொன்னிற இடையைச் சுற்றி வளையம் கட்டினாற்போல் ஒன்றன் மேல் ஒன்றாக மடிந்து சரிந்திருந்த இரண்டு தசை மடிப்புக்கள். அந்த அழகிய மென்மையான மடிப்புக்களின் மீது முத்துசிவனின் பார்வை வந்து நிலைத்தது.

அதை அறிந்த சுகுணா தேள் கொட்டினாற்போல் ஒரு துள்ளுத் துள்ளி நிமிர்ந்து உட்கார்ந்தாள். அதேசமயம் வராந்தா சன்னல் வழியே தினப் பத்திரிகையொன்று உள்ளே வந்து விழுந்தது. முத்துசிவன் சிரித்துக்கொண்டே எழுந்து போய் அந்தப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு வந்து சோபாவில் சாய்ந்தான். அவனுடைய கைகள் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டின:



''என் ஸார்! இது 'மோபஸல்' பஸ் ஆச்சே! இதிலே ஸ்டாண்டிங் கிடையாதுன்னு தெரியுமில்லே...!''

''நான் எங்கேப்பா நிற்கிறேன், தொங்கிண்டுதானே இருக்கேன்!''

பார்வையோ சுகுணாவின் மேல் இருந்தது. அவள் ஒரேயடியாகக் கூனிக் குறுகித் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள். அதனால் அவளின் மன உணர்ச்சிகளை அறிந்து கொள்ள அவனால் இயலவில்லை.

அறையின் பக்கத்தின் வலது மேல் மூலையில் வெளியாகியிருந்த ஒரு விளம்பரம் முத்துசிவனின் கவனத்தைக் கவர்ந்தது. அவ்விளம்பரத்தையும் சுகுணாவையும் மாறி மாறிப் பார்த்த அவன் உட்கார்ந்தபடியே மெல்லச் சாய்ந்து, ''இதோ பார், சுகுணா! இதை நீ வாங்கி உபயோகப்படுத்தினால் என்ன? இது உன் அழகை இன்னும் அதிகப்படுத்த உதவும் இல்லையா?'' என்று குறும்புப் புன்னகையுடன் கூறியவாறு தன் கையிலிருந்த பத்திரிகையை நாலாக மடித்து அவளின் மடிமீது போட்டான்.

தலை நிமிராமலே அந்தப் பத்திரிகையை இடது கையால் இழுத்த சுகுணா, அவன் குறிப்பிட்டுக் காட்டிய அந்த விளம்பரத்தைப் பார்த்தாள்.

வயிறும் இடையும் பருத்த மங்கையர் அவற்றைச் சுருக்கி ஒடுக்கிக் கொள்வதற்காக அணியும் 'அப்டாமினல் பெல்ட்'டுகள் தயாரிக்கும் ஒரு கம்பெனியின் விளம்பரம் அது. அதிலே அழகிய பெண்ணொருத்தி பக்கவாட்டுப் போஸ் கொடுத்து முகத்தை முக்கால் பகுதி பின்புறமாகத் திருப்பிக் கொண்டிருக்கிறாள்; பிரேஸியர் மட்டுமே அணிந்திருக்கும் அவள்

அந்த 'இடைமெலிவுக்கான பட்டி' யையும் தரித்திருக்கிருள்!.... அது கையால் வரைந்த சித்திரம் அல்ல; அசல் போட்டோ படம்!

இப்படி இருந்த அவ்விளம்பரப் பகுதி முடிவடையும் கட்டத்தின் கீழே — ஒரு நீண்ட கோட்டின் அடியில் 'ஆர். பி.' என்னும் சிறிய ஆங்கில எழுத்துக்கள் தென்பட்டன. அதாவது, ரெயின்போ பப்ளிசிடீஸ் மூலம் அந்த விளம்பரம் இப்பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது போலும்!

மெல்லத் தலைநிமிர்ந்த சுகுணு அவனை அநுதாபம் கலந்த இளநகையுடன் அமைதியாக ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையில், அவனுடைய தரக் குறைவான குறும்புத் தனத்துக்காக அவள் கோபமோ வெட்கமோ அடைந்த அறிகுறி ஏதும் தென்படவில்லை; வேறு எதைப் பற்றியோ மிகவும் வருந்துவதாகத் தோன்றியது. சற்றைக்குப் பின் தன் கையிலிருந்த பத்திரிகையை மடித்துக் கீழே போட்டுவிட்டு, ''நீங்கள் காட்டிய அந்த விளம்பரம் எனக்கு உபயோகமில்லை; ஆனால் உங்களுக்கு அது நிச்சயம் உபயோகப்படலாம்! உங்களின் இளைய தம்பிக்கும் உபயோகப்படும்! அதனால் அதை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்!'' என்ருள் அவள்.

தான் செய்த குறும்புத்தனங்களுக்காக வெட்கப்பட்டுச் சிணுங்குவாள், அல்லது கோபமடைந்து சீறுவாள் என எதிர்பார்த்து, அதற்குத் தோதான சில பதில்களைக் கூறி அவளை மேலும் நாணிக் கண் புதைக்கச் செய்யவும், உற்சாகமூட்டிச் சிரிக்க வைக்கவும், சமாதானப்படுத்தவும் தயாராயிருந்த முத்துசிவனுக்கு அவள் இப்படிச் சொன்னது வியப்பும் திகைப்புமாகி விட்டன. அத்துடன் அவளது பேச்சை அவனால் புரிந்துகொள்ளவும் இயலவில்லை. 'என்ன இவள் திடீரென்று ஏதேதோ உளறுகிருள்? நான் விளையாட்டுக்காகக் காட்டிய அவ்விளம்பரத்தில் உள்ள இடுப்புப் பெல்ட்டைப் பற்றி ஏதும் கூருமல் அந்த விளம்பரத்தையே அல்லவா குறிப்பிட்டுச் சொல்கிருள்? அது எனக்குத்தான் உபயோகப்படும் என்றதோடு, என் தம்பி வலம்புரியையும் இதில் இழுத்துச் சம்பந்தப்படுத்திக் குத்தலாகப் பேசுகிருளே! இதற்கு அர்த்தமென்ன?' என்றெல்லாம் எண்ணி உள்ளூறக் குழம்பிய அவன் சட்டென்று எதையோ நினைவுபடுத்திக் கொண்டவன் போல் உதட்டைக் கடித்தவாறு அவசரமாகத் தாவிக் கீழே கிடந்த அப் பத்திரிகையை எடுக்க முயன்ருன்.

இதைக் கண்ட சுகுணு கலகலவெனச் சிரித்துக் கொண்டே அவனுடைய கையை இதமாகப் பற்றி அப்பால் ஒதுக்கிவிட்டு அவனருகில் நெருங்கிப் போய், ''என்ன இதெல்லாம் விஷமத்தனம்! பேசவேண்டிய விஷயங்களை விட்டு விட்டுச் சிறுபிள்ளை மாதிரி பொம்மை காட்டி விளையாட ஆரம்பிச்சுட்டீங்களே!'' என்ருள் செல்லக் கோபத்துடன். ''இதோ பாருங்கள்! நீங்க கொடுத்த காப்பி இன்னமும் சூடு ஆருமல் ஆவி பறக்கிறது. நான் சூடாகக் காப்பி சாப்பிடறதில்லை. அது உடம்புக்குக் கெடுதலாம். உங்க கையாலேயே ஆற்றிக் கொடுங்க.''

சற்று முன் அவ்விளம்பர சம்பந்தமாய்த் தான் சொன்னதை மறைத்து மழுப்பவே அவள் இப்படிக் கொஞ்சிக் குலாவுகின்ருள் என்பதைப் புரிந்து கொண்டான் முத்துசிவன். ஆனால் அவனுக்கு இப்போது அவளின் இந்தக் கொஞ்சல் மொழிதான் தேவைப் பட்டதே தவிர அந்த விஷயம் அவ்வளவு முக்கியமானதாகப் படவில்லை. அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்கிற பாவனையில் அலட்சியமாகத் தலையாட்டிக் கொண்டு, ''ஏதேது! இப்படியே என்னை வேலை வாங்க ஆரம்பிச்சுட்டே! இன்னும் இந்த வீட்டுக்கு வந்துட்டாயானல், பத்திரிகைகளில் வருகிற ஜோக்குகள் மாதிரி என் கையிலே கரண்டியைக் கொடுத்திட்டு, இலைக்கு எதிரில் உட்கார்ந்திடுவே போலிருக்கே!'' என்று உற்சாகமாகக் கூறிச் சிரித்துக்கொண்டே ஓர் உரிமை கலந்த மதமதர்ப்புடன் அவள் மீது உராய்ந்தபடி சாய்ந்து காப்பியை எடுத்து ஆற்றிக் கொடுத்தான்.

சுகுணு மிகவும் ரசித்துச் சுவைத்துப் பருகினுள். அப்படிப் பருகும்போது அவளது அழகிய அதரங்கள் ஈரப் பளபளப்புடன் நெளிவதைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் முத்துசிவன்.

தம்ளரை டீப்பாயின் மேல் வைத்து விட்டு அவனை ஓரக்கண்ணுல் நோக்கிக் குறுநகை புரிந்த சுகுணு, ''அது சரி; நான் முன்னே கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் விட்டு விட்டீர்களே ஏன்?'' என்ருள் இனிய குரலில்.

இதுகாறும் அவளை விழுங்குவது போல் பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், ''நீ என்ன கேட்டாய்?'' என்ருன் ஒரு போலியான பரிவுடன்.

சுகுணுவின் முகம் சட்டென்று வெளிறிச் சிறுத்தது. ''இந்தக் கேள்வியை

இதற்கு முன் பலமுறை கேட்டு விட்டேன். சற்று முன்னும் கேட்டேன். திரும்பவும் இப்போது கேட்க வைக்கிறீர்கள். எனக்கு என்னவோபோல் இருக்கிறது. ஆனாலும் கேட்கிறேன்'' என்று லஜ்ஜையுடன் தலை குனிந்த படி மெல்லிய குரலில் சொன்ன சுகுணா, ''ஆமாம்; இத்தனை காலம் தான் ஓர் இலட்சிய விரதம் பூண்டு அதில் வெற்றி காணும் வரையில் என்னை ஒதுக்கி வைத்தீர்கள். நானும் உங்கள் இலட்சியத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து ஒதுங்கியிருந்து வந்தேன். கடவுள் கிருபையால் அந்த இலட்சியம் நல்லபடியாக நிறைவேறி விட்டது. அது நிறைவேறி ஒரு வருஷத்துக்கு மேலும் ஆகப் போகிறது. இன்னமும் என்னை ஏன் இப்படித் தனிமைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்? எனக்குரிய வாழ்வைத் தராமல் எதற்காக நானைத் தள்ளிப் போடுகிறீர்கள்? அப்படி நாள் கடத்துவதற்குத் தகுந்த காரணம் எதுவும் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லையே!...'' என்றாள். இதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. குரல் தழுதழுத்துத் தொண்டை அடைத்துக் கொண்டது.

முத்துசிவன் ஏதோ அருமையானதொரு நாடகக் காட்சியைப் பார்ப்பது போல், மந்தகாசப் புன்முறுவலுடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தானே யன்றிப் பதில் ஏதும் சொல்லவில்லை.

தலைகுனிந்திருந்த சுகுணா சிறுபொழுதுக்குப் பின் மேலும் சொன்னாள்:

''கல்யாணத்துக்கு ஆசைப் பட்டுக் கொண்டு உங்களை நான் இப்படிக் கேட்டுக் கெடுபிடி பண்ணுவதாக எண்ணுகிறீர்கள். அது எனக்கு அவசியம்தான் என்றாலும் அவசரம் இல்லை. ஆனால் என் அம்மாவும் அப்பாவும் இவ்விஷயத்தில் இனியும் பொறுமையோடு இருக்க முடியாத நிலைக்கு வந்து விட்டிருக்கிறார்கள். அவர்களின் நச்சரிப்பை என்னால் தாளவும் முடியவில்லை. அதனால்தான் இன்று. இது பற்றி உங்களிடம் இரண்டில் ஒன்று கேட்டுத் தெரிந்து கொள்வது என்ற முடிவுடன் இங்கு வந்தேன்.''

அவள் எவ்வளவுக் கெவ்வளவு உண்மை உணர்வோடும், உணர்ச்சி வயப்பட்டும் சொன்னாளோ அவ்வளவுக்கவ்வளவு விளையாட்டுத்தனமாகவும் பொறுப்பற்ற விதமாகவும் சிரித்தான் முத்துசிவன். ''என்ன இது, இதற்குப் போய் இவ்வளவு பெரிசா...?'' என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தி விட்டு மீண்டும் சிரித்த அவன், ''கல்யாணம் என்ன ஓடியா போய்விடும்? பண்ணிக் கொண்டால் போகிறது! நாளைக்கே கூடப் பண்ணிக் கொள்ளலாம்!'' என்றவாறு அவளை அணைத்துத் தூக்கி நிறுத்திவிட்டு, தானும் எழுந்தான். ''சரி, இப்படி வா! நான் உன்னிடம் ஓர் இரகசியம் பேசப்போகிறேன்!'' என்றவன், அவளது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே சென்றான். அவனுடைய பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டு சற்றுப் பின்னால் தயங்கி நின்றாள் சுகுணா. அவன் அவளைத் திரும்பிப் பார்க்காமல் தன் அறைக்குப் போய்விட்டான்.

ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள் சுகுணா. அவளுக்கு அவனது பேச்சும் விளங்கவில்லை; போக்கும் புரியவில்லை. சில நிமிடங்கள் வரையில் அவ்வறைக்கு வெளியிலேயே தயங்கி நின்று விட்டுப் பிறகு மெல்லப் போய் எட்டிப்பார்த்தாள்.

அங்கே, கட்டிலின்மீது முத்துசிவன் வெறும் பனியனும், லுங்கியும் அணிந்த கோலத்தில் ஒருக்களித்துச் சாய்ந்தவாறு அவளைப் பார்த்து அசட்டுப் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் ஒருவிதப் போதைக் கிறக்கத்துடன் செருகிக் கிடக்க, முகம் இரத்தச் சிவப்பேறிக் கன்றி விட்டிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தவளாய் ஓரடி பின்னால் நகர்ந்த சுகுணா, இப்போது அவனுடைய நோக்கம் என்ன என்பதை அந்த ஒரே விநாடியில் புரிந்துகொண்டவள் போல் சரேலெனத் திரும்பி நடந்தாள்.

''சுகுணா! சுகுணா! எங்கே போறே? இங்கே வா, சுகுணா!''

சடாரெனக் கட்டிலை விட்டுத் துள்ளி எழுந்த முத்துசிவன் அவளைத் துரத்திப் பிடிக்கப் போகிறவன் போல் வெளியே விரைந்து வந்தான்.

அதற்குள் வாசலில் நின்றிருந்த சுகுணாவின் கார் பறந்து விட்டது.

இரையைப் பறி கொடுத்த காட்டுப் பூனைபோல் வெறித்த பார்வையுடன் இடுப்பின் மேல் இரு கைகளையும் ஊன்றியவாறு வராந்தாவில் சற்று நேரம் நின்று கொண்டிருந்த முத்துசிவன், ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் அவசரமாக உள்ளே சென்று, களைந்த ஆடைகளை மீண்டும் எடுத்து அணிந்து கொண்டு வெளியே புறப்பட்டான். அவனுடைய தாயார் அன்னபூரணியம்மாள் அப்போதுதான் வீடு வந்து சேர்ந்தாள். அவள் முகம் ஏனோ கவலை தோய்ந்து வாடியிருந்தது. **(தொடரும்)**

நீங்கள்

புத்திசாலியான முற்போக்குள்ள தாயாரா, அல்லது, பழமையைப் பின்பற்றும் தாயாரா?

கீழ்க்கண்டதைப் படித்துத் தீர்மானியுங்கள்:

உங்கள் அன்புக் குழந்தைக்கு தாய்ப்பால் அல்லது பால் உணவுகள் தருவதை படிப்படியாக நிறுத்தி, திட உணவு அளிக்க வேண்டியது மிகவும் முக்கியம் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.



சரி.
இவ் விஷயத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

குழந்தைக்கு வீட்டில் சமைத்த தானிய உணவைத் தரப்போகிறீர்களா? ஆனால் அதைத் தயாரிக்க அதிக நேரமாகிறது. அநேகமாக அதைக் குழந்தைகள் விரும்பி உண்ணுவதில்லை; மேலும், அதில் போதிய அளவு போஷாக்குச் சத்தும் இருப்பதில்லை.

இல்லை, குழந்தைக்கு பாரெக்ஸ் புகட்டப் போகிறீர்களா?



குத்து விளக்கு

எல்லார்வி



அந்த நாவலை எழுதத் தொடங்கிய போதோ, எழுதிக் கொண்டிருக்கிறபோதோ, எழுதி முடித்த பிறகோ, அதற்கு இப்படி ஒரு மகிமை ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. போட்டிக்கு அனுப்பிய பிறகும் அதற்குப் பரிசு கிடைக்கும் என்கிற நம்பிக்கையே இல்லை. ஒரு சில சிறு கதைகள் மட்டுமே எழுதிய ஆரம்ப எழுத்தாளியின் கன்னி முயற்சியான முதல் நாவல் முதற் பரிசைப் பெற்று, அதை முன்னிட்டுப் பெரிய திட்டத்தில் பரிசளிப்பு விழாவும் நடைபெறுகிறதென்றால்...

'இதெல்லாம் உண்மைதானா?' என்ற பிரமைதான் எனக்கு அடிக்கடி ஏற்பட்டது. அதிலும் மாவட்டக் கலெக்டர் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பரிசை வழங்குகிறார் என்று அறிந்த போது என் உள்ளமும் உடலும் பரவசமடையத்தான் செய்தன. என்றாலும், விழா மண்டபத்தை அடைந்து அங்கே நிரம்பியிருந்த மக்கட் கூட்டத்தைக் கண்ட போது உருப்புரியாத ஒரு நடுக்கம் என்னிடம் ஏற்பட்டது. இயல்பிலேயே கூச்சம் நிறைந்த நான் திணறித் திக்குமுக்காடினேன். பெண்கள் பகுதியில் கூனிக் குறுகி உட்கார்ந்து கிடந்தேன்.

விழாக்காரர்கள் மேடையிலே வந்து அமரும்படி பல முறை வேண்டினர். அங்கே போடப் பெற்றிருந்த நாற்காலிகளில் நாலைந்து பேர்கள் அமர்ந்திருந்தனர். கலெக்டர் அமர வேண்டிய இடம் மட்டும் காலியாக இருந்தது. அவர் இன்னும் வரவில்லை.

'வேண்டாம்; இங்கேயே இருக்கிறேன்; எனக்கு இதில் எல்லாம் பழக்கம் இல்லை. பரிசு பெறும்போது மட்டும் மேடைக்கு வருகிறேன்' என்று விழாக்காரர்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் பரிதாபமாக என்னைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்து விட்டுப் போய் விட்டார்கள்.

'அப்பாடா! இம் மட்டும் பிழைத்தோம்!' என்று பெருமூச்சு விட்டேன்.

உடனேயே உள்ளுக்குள் இன்னொரு பயம் பற்றிக் கொண்டது. 'பரிசு பெறுவோர் பாராட்டுரைகளுக்கு நன்றி செலுத்தும் முறையில் சில வார்த்தைகள் பேசுவது ஒரு சம்பிரதாயம் போல் இருக்கிறதே! நான் என்ன பேசுவது! இப்போதே நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்கிறதே! மரம்போல் பரிசைப் பெற்றுக் கொண்டு வர வேண்டியதுதானு?...வேறு வழி?...ஊஹூம்; பேசுவதா!...நானு?..'

இப்படி நான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறபோதே சூழ்நிலையில் பரபரப்பு ஏற்பட்டது. கலெக்டர் வந்து விட்டார் என்பது தெரிந்தது. அவர் மேடையை அடைந்து அமர்ந்து சிறிது நேரம் வரையில் நான் தலை நிமிரவில்லை. எல்லாரும் எழுந்தார்கள். நானும் எழுந்தேன். சிறுமி ஒருத்தியின் பிரார்த்தனை இசை காதில் விழுந்தது.

மெல்ல நிமிர்ந்தேன்.

'ஆ!....'

நான் தவித்தேன், தத்தளித்தேன், உடம்பு வெடவெடவென்று நடுங்கிற்று. விழுந்துவிடுவேன்போல் இருந்தது. சமாளிக்கப் போராடிக் கொண்டிருக்கையில் நல்ல வேளையாகச் சுருக்கமான அந்தப் பிரார்த்தனை இசை முடிந்தது. எல்லாரும் அமர்ந்தார்கள்; நானும் அமர்ந்தேன்.

அதன் பின்னர் என்னால் தலை நிமிரவே முடியவில்லை. அங்கே உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. மெல்ல எழுந்து யாரும் அறியாமல் நழுவி விடலாமா என்று தோன்றியது. ஆனால் அதைச் செய்யவும் என்னால் முடியாது என்று உறுதியாகத் தெரிந்தது; செய்வதும் சரி அன்றே!

யாரோ ஒரு பெரியவர் எழுந்து என்னவோ பேசினார். அடுத்து – அந்தக் குரல் – என்னையும் மீறி நிமிர்ந்தேன்; அதே முகம்! அதே குரல்!...கலெக்டர்தான் பேசினார்:

''...இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ள நேர்ந்தது பற்றி ஒன்றுக்குள் ஒன்றாக இருவகை மகிழ்ச்சியை அடைகிறேன்.

''ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்குமுன் கடற்கரை மணற் பரப்பில் அமர்ந்து நண்பர்களோடு உரையாடுகையில் ஒரு சவால் விடுத்தேன். 'மிக விரைவில் கதை இலக்கியத் துறையில் நம் நாட்டுப் பெண்மணிகள் பெரும் அளவில் பரிசும் புகழும் அடைவார்கள் என்றேன். அது பலித்து விட்டது. என் பங்கில் இன்று வெற்றியை இங்கு காண்கிறேன்.

''சுமார் இருபது ஆண்டுகளுக்குள் தமிழில் கதை இலக்கியம் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருப்பதைக் காண்கிறோம். அதிலும் பெண்களில் சிலர் அந்தத் துறையிலே பிரமிக்கத் தக்க முன்னேற்றம் கண்டிருப்பது கண்கூடு. 'உலகின் ஆக்க வழிகள் பெண்களாலேதான்' என்பதைப் பல வகைகளிலும் நிரூபித்து வரும் பெண் குலம், கதை இலக்கியத் துறையிலும் வெற்றி நடை போடுவது மகிழ்ச்சிக்குரிய நிலை. அந்த முறையில் 'குந்தவ வராளி' என்ற அற்புத நாவலை எழுதிப் பரிசு பெற்ற பாரதி அவர்களை மனமுவந்து பாராட்டுகிறேன். கழகத்தாரின் பரிசை உங்கள் சார்பில் அளிக்கிறேன். இப்படி ஒரு



வாய்ப்பு எனக்குக் கிட்டியதையும், என் அடிநாளைய சவால் பலித்து விட்டதையும் எண்ணி என் பெரு மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொள்ளும் முறையில் சொந்தப் பொறுப்பில் இந்தக் குத்து விளக்கையும் அவர்களுக்குச் சிறப்புப் பரிசாக வழங்குகிறேன்......''

பலமான கைதட்டல் எழுந்தது. ''உம் உம்; எழுந்திருங்கள்; எழுந்து வாருங்கள்'' என்று ஒருவர் சிறிது நேரமாகவே என்னை உலுக்கிக் கொண்டிருந்தார். அரும் பாடுபட்டு எழுந்து நடந்து மேடைக்கு வந்தேன். கழகத் தாரின் செக் அடங்கிய உறையைக் கலெக்டர் என்னிடம் அளித்தார். குத்துவிளக்கை அவ ரிடமிருந்து பெறும்போது என் கை நடுங் கியது. குனிந்த தலை நிமிராமலே கரம் குவித் தேன். எனினும், ஒருகணம் எங்கள் பார்வை கலந்தது. அவர் கண்கள் அகல விரிவதை நான் கண்டேன். எங்கள் இருவரிடையே ஏற்பட்ட இந்தச் சலனத்தைத் தொலைவில் இருந்தவர்கள் அறிந்திருக்க முடியாது. அருகே உள்ள ஒருசிலர் கவனித்திருக்கலாம்; புகைப்படங்களும் அந்நிலையை விளக்கலாம்.

கால்களை ஊன்றி வைத்து, ஆடும் உடம்பை அடக்கி ஆண்டு, மேடையினின்றும் இறங்கிச் செல்ல நான் பட்டபாடு! நன்றியுரை யாவது மண்ணாங்கட்டியாவது....! அதற்கு மேல் அங்கே நீடித்தால் பார்ப்பவர் பலப் பல நினைக்க இடமாகும்; நிலைமை விரச மாகும் என்று தோன்றியதால் உடல்நல மில்லை என்று கூறி முக்கியமானவரிடம் விடைபெற்றுக் கிளம்பினேன். தற்செய லாகத் திரும்பிப் பார்த்தேன். பலரும் வழி யனுப்பக் கலெக்டரும் புறப்பட்டுப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டேன்.

நான் என் இருப்பிடத்தின் முன்வண்டியை விட்டு இறங்கிய போது மாலை மணி ஆறு. பரிசுப் பொருள்களுடன் வந்து இறங்கும் என்னை 'வா' என்று வாய் நிறையக் கூப் பிடவோ, என்னைப் பாராட்டி மகிழவோ யார் இருக்கிறார்கள்? தெருக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றேன். கைகால் முகம் கழுவித் திலகம் இட்டுக் கொண்டு பூசை மாடத்தின் முன் அந்தக் குத்துவிளக்கை ஏற்றி வைத்தேன். அதனைப் பூவாலும் பொட்டாலும் அலங்கரித்து வணங்கினேன். மேலே ஒன்றும் செய்யத் தோன்றாமல் விளக்கின் எதிரே அமர்ந்தேன். அதையே உற்றுப் பார்த்தேன்; பார்த்துக் கொண்டே யிருந்தேன்.

மௌன பாஷையில் அது என்னோடு பேசிற்று. நான் அதனோடு பேசினேனா? பிரித்துணர முடியாத ஓர் ஐக்கிய நிலை. என்னையும் அறியாமல் என் கண்களில் நீர் வடியத் தொடங்கியது. தனிமைக்கு ஓர் உறுதுணை போன்று என்னைத் தேடி வந்து அடைந்த அந்த அழகான குத்துவிளக்கு, கடந்து வந்த எனது வாழ்க்கைப் பாதை யைத் தனது சுடர் ஒளி மூலம் விளங்க வைத்தது.

அன்று....

அந்தக் குத்துவிளக்கு அப்படி விழுந்து முறிந்திரா விட்டால்.... என்னுடைய வாழ் வும் சோபிதம் பெற்றிருக்கும்; விளக்கு விழுந்தது; அதன் சிகரம் முறிந்தது; என் வாழ்வின் சுருதியும் கலைந்தது. கலைந்த சுருதி கூடவே இல்லை.

அன்று.... அப்படி..... நிகழாதிருந்தால்?

நிகழாதிருந்திருக்கலாம்; நிகழ்ந்து விட் டதே!.... நிகழ வைத்து விட்டார்களே! 'நாலு சத்தை கூடினால் ஒரு கத்தை' என் பார்கள். நன்மையோ, தீமையோ நிகழ நாலு பேர் காரணமாகி விடுகிறார்கள். என் வாழ்வில் நால்வர் இல்லை; இருவர் — இங்கே என்னைப் பெற்ற அப்பா; அங்கே அவரைப் பெற்ற அம்மா! மாதா பிதாக்களே மக் களின் சத்துருக்களானால்...?

அலசி அலசி ஆராய்ந்து, துருவித் துருவி வடிகட்டி, மிகச் சிறந்த இடம் என்றுதான் அப்பா நிச்சயித்தார். பிள்ளை வீட்டார் கேட்ட எல்லாவற்றுக்கும் இசைந்தார். பெருமையில் ஆசை; ஆடம்பரமாகத் திருமணத்தை நடத்தி முடித்தார். தலை விளை கொண்டு விடத் திட்டம் இட்டார். அதற்குரிய சீர் செய் நேர்த்திகளிலும் குறை இல்லை. ஆனால்....

என் மாமியார், 'கொக்குக்கு ஒன்றே குறி' என்பது போல் அந்த ஒன்றையே நினைத்துக் கொண்டிருந்தார் போலும்! வலக் காலை முன் வைத்து வாழ வந்த மருமகள் உள்ளே வந்து வணங்கி எழுந்ததும் அந்த ஒன்றைப் பற்றியேதான் முதல் கேள்வியாகக் கேட்டார்: ''எங்கே வைரக் கம்மல்?''

''நாலைந்து மாதங்களில்....'' நான் இக்கித் திணறினேன்.

''மூடடி வாயை! அப்பொழுது நாலைந்து நாளில்; இப்பொழுது நாலைந்து மாதங்களில்; இன்னும் கொஞ்சம் போனால் நாலைந்து வருஷங்களில்; அப்புறம் பட்டை நாமம்தான்! ஏமாற்று வித்தையா?.... அதெல்லாம் இங்கே செல்லுபடியாகாது!''

''எங்கள் பரம்பரை ஏமாற்றும் பரம்பரை அன்று. எதிர்பார்த்த இடத்திலே தொகை கைக்கு வரச் சற்றுத் தவக்கம்....''

கூடத்திலே நின்றிருந்த அப்பா நயமாக இவ்வாறு கூறத் தொடங்கினார். வந்தவரை 'வாருங்கள்; உட்காருங்கள்' என்று சொல்வாரின்மையால் அவர் நின்று கொண் டிருந்தார்; யாரிடமும் நயந்தறியாதவர் நயந்து பேசிக் கொண்டிருந்தார்.

''இதெல்லாம் வீண் பேச்சு! ஆடம்பரத் திலும் ஆர்ப்பாட்டத்திலும் குறைச்சல் இல்லை!'' — மாமியாரின் சீறல் கேட்டது.

எனக்கும் அப்போது தோன்றிற்று, 'பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்துத் திருமணம் நிகழ்த்தியதை மிச்சப்படுத்தி யிருந்தால் இரண்டு ஜதை வைரக் கம்மல் செய்திருக்கலாமே! இப்போது இந்தப் பேச்சு கேட்க வேண்டிய அவசியமில்லையே' என்று.

''வக்கு இல்லாதவர்கள் அதற்குத் தகுந்த இடமாக....'' என்று என் மாமியார் முடிப்பதற்குள், ''என்ன!....'' என்று சீறிப் பாய்ந்து கூடத்துக்கு வந்தார் அப்பா. கூடம் நிறைய என்னோடு வந்த சீர்ப் பொருள்கள் நிறைந்திருந்தன.

''வக்கு இல்லாதவர்கள் செய்கிற சீர் வரிசையா இவை? ...ஊம்...! அம்மா, அருமை தெரியாத மனிதர்களிடம் உன்னை

தலைவலியா ?



உடனடியாக நிவாரணம் பெற



அவேதன் சாப்பிடுங்கள்

அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன் தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர சாதாரண வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது.



SQUIBB
SARABHAI CHEMICALS

®இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பொரேட்ட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். காம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.

Shilpi SC 4/68 Tam

அடைக்கலப்படுத்தி விட்டேன். இங்கே நீ அமைதியாக வாழ முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை! —''

''ஆமாம்; பெண்ணைத் திருப்பி அழைத்துக் கொண்டு போகலாம்.''

''ஆ!.... என்ன வார்த்தை!... புறப்படு. அம்மா....''

''அப்பா, பொறுமையாக இருங்கள்; அல்லது ஊருக்குப் போங்கள். நான் இருக்க வேண்டிய இடம் இதுதான்'' என்றேன்.

ஆத்திரத்தோடு பற்களை நெரித்த அப்பா கலங்கிய கண்களுடன் வெளியே வேகமாகப் போய்விட்டார்.

''சீ!.... மகா சீ....!'' என்று அங்கே இருந்தவற்றை அலட்சியமாகவும் ஆத்திரமாகவும் கைகளால் தள்ளினார் மாமியார். பாத்திரங்கள் ஒன்றோடு ஒன்று மோதவே, கூடத்துக் குறட்டோரம் இருந்த குத்துவிளக்கு ஓர் ஆட்டம் ஆடி முற்றத்தில் விழுந்து அங்கே கிடந்த கல் உரலில் மோதி உடல் வேறு, தலை வேறாக ஆயிற்று.

எனக்குச் சொரேர் என்று இருந்தது. 'அபசகுனம் போல் குத்துவிளக்கு உடைந்து விட்டதே! நம் வாழ்வும்....' என்று ஓடிற்று எண்ணம். கண்கள் குளமாயின. மாமியார் விளக்கு உடைந்ததையும் பொருட்படுத்தவில்லை; நான் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றிருந்ததையும் இலட்சியம் செய்யவில்லை. தம் போக்கில் ஏதேதோ புலம்பிக் கொண்டே உள்ளே போய் விட்டார்.

மரம் போல் நான் அப்படியே நின்றிருக்கப்படுமா? ஒடிந்த குத்துவிளக்கையும் மற்றப் பொருள்களையும் ஓர் ஒதுங்க எடுத்து வைத்துவிட்டு உள்ளே போனேன். பூசை மாடத்தின் முன் நமஸ்கரித்தேன். ஏதாவது காரியம் செய்யலாமென்றால் என்ன செய்வதென்று புரியவில்லை. சில முறை மாமியாரிடம் பேசிப் பார்த்தேன்; பதிலே இல்லை.

மாலை மறைந்து இரவு வந்து அதுவும் கனக்கத் தொடங்கியது. இவ்வளவில் 'அவர்' எங்கே? விடை கிடைக்கவில்லை.

சாப்பிடு என்று மாமியாரும் சொல்லவில்லை; எனக்கும் அதைப் பற்றிய நினைவே ஏற்படவில்லை. உடலும் உள்ளமும் வேதனையால் துடிக்க ஒதுக்குப்புறமான ஓர் இடத்திலே 'சிவனே' என்று விழுந்து கிடந்தேன்.

இந்த நிலையை நான் கற்பனை செய்து பார்த்ததுகூட இல்லை. பழங்காலத்தில் இப்படியெல்லாம் உண்டு என்று என் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன். நினைக்க நினைக்க வியப்பு ஒருபுறம், துயரம் ஒருபுறம்.

யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். மாமியார் போய்த் திறந்தார். பேச்சு காதில் விழுந்தது. கவனித்தேன். என் கணவர் உத்தியோக முறையில் சுற்றுப் பயணம் சென்றிருப்பதை அந்தப் பேச்சிலிருந்து உணர்ந்தேன். 'அப்படியானால் அவர் வருகிற வரையில் நமக்கு விடிவில்லை' என்று தீர்மானித்தேன். வந்த பிறகும் விடிவு உண்டு என்பது என்ன உறுதி? அவரும் 'அம்மா பிள்ளை'யாக இருந்தால்?....

ஊரில் அம்மாவுக்கு உடல் நலமில்லை. தலைவிசை நாளைத் தட்டக் கூடாது என்றார்கள். மாமியாரின் குணமும் முன்பே ஏராளவு வெளிப்பட்டிருந்தது. அம்மாவும் தன்னைப் பற்றிக் கவலை வேண்டாம் என்றாள். படுத்த படுக்கையாகக் கிடக்கும் அவளைப் பார்க்கப் பார்க்க என் நெஞ்சம் கலங்கினாலும் வேறு வழியின்றிப் புறப்பட்டு வந்தேன். இப்போது மற்றதையெல்லாம் மறந்து அம்மாவின் உடல் நிலை எப்படி இருக்கிறதோ என்ற கவலை நெஞ்சை நிறைத்தது. அந்த நினைவோடேயே உறங்கிப் போனேன்.

மறு நாள் பொழுது விடிந்த போது கேட்ட செய்தி — 'அம்மா!' என்று என்னை அலற வைத்தது. அழுகையினூடே எத்தனை முறை படித்தாலும் தந்தி ஒன்றையேதான் கூறிற்று.


மாமியாரின் சொற்படி பெரியவர் ஒருவர் என்னை ரயில் ஏற்றி விட்டார். என் வரவும் போக்கும்தான் எப்படி அமைந்துவிட்டன! 'சீ!' என்று என்னை நானே வெறுத்துக் கொண்டேன்.

அம்மாவின் காரியம் முடிந்தது; அடுத்த காரியமும் உடனேயே தொடர்ந்தது.

கண்ணை மூடிக் கொண்டு கடன் மேலே கடன் வாங்கி, 'பிஸினஸ்' செய்த அப்பாவின் நிலை ஒரே நாளில் அம்பலம் ஆகி, வீடு, நிலம், வீட்டுப் பொருள்கள் யாவும் போயின. பழகின ஊரில் நாலு பேர் நடுவே தலை நிமிர்ந்து நடமாட முடியாத நிலையில் அப்பா இரவோடு இரவாகப் பயணம் வைத்தார். இடறுகட்டையாக இருந்த என்னைக் கொண்டு போய் எனக்குரிய இடத்திலே விட்டுவிடும்படி கெஞ்சினேன்.....


''கொஞ்சம் பொறு அம்மா!'' என்றார். வேறு வழியில்லை. ஆனால்....

கோலம் போடுவோருக்கு ஒரு சவால்!



மேலே காட்டியுள்ள படத்தில் ஐந்து புள்ளிகள் வீதம் ஐந்து வரிசையில் இருபத்தைந்து புள்ளிகள் உள்ளன. இதில் பன்னிரண்டு புள்ளிகளை நேர் கோடுகள் இணைக்க வேண்டும். அப்போது ஐந்து புள்ளிகள் உள்ளேயும், எட்டுப் புள்ளிகள் வெளியேயும் வர வேண்டும். மூன்றே தடவைகள் தான் முயன்று பார்க்கலாம்!

விடை : (78ம் பக்கம்)



நடனமோ, நாடகமோ, கச்சேரியோ நான் 15/3ல் அதாவது ஓ. ஸியில் போகும்போது சபா காரியதரிசி என்னை முன்னால் உட்கார வைக்கிறார். ஆனால் பணம் கொடுத்துப் போகும்போது பின்னால் தள்ளப் படுகிறேன். இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை!

— அனுபவம் பெற்ற ஒருவன்

வெளியூரில் ஜாகை வைத்து, அப்பா ஒரு வேலையும் தேடிக் கொண்ட பின்பும் என் விஷயத்தில் அவர் அசட்டையாக இருந்தது எனக்கு வேதனையைத் தந்தது. 'காலம் கடப்பது சரி அன்று' என்று என் உள் ளுணர்வு தூண்டிக் கொண்டே இருந்ததால் ஒரு நாள் சற்றுக் கண்டிப்பாக அப்பாவிடம் பேசினேன். ஐயோ! அப்போது அவர் போட்ட சத்தம்!

''....மனிதர்களா அவர்கள்! வந்த மனிதனை வா என்று அழைக்க நாதி இல்லை. வீடு தேடி வந்த மகாலட்சுமியை, 'போ' என்றான் அந்தக் கொடியூரி. அவன் பேசின பேச்சு! பகைவர்களானாலும் வாழ்வையும், சாவையும் ஒதுக்கமாட்டார்கள். உன் அம்மா போன செய்தி அறிந்தும் அவர்கள் வரவில்லை. அப்படிப்பட்டவர்களிடம் மறுபடியும் உன்னை அழைத்துக் கொண்டு போய் நிற்கச் சொல் கிறாயா?''

''அப்படியானால் நானே நானே கிளம்பிப் போகிறேன்'' என்றேன்.

''போ!... போ!... நானே என்ன?.... இன்றே, இப்பொழுதே கிளம்பிப் போ!'' என்று கூச்சலிட்டவர், நிலைகொள்ளாமல் பொத்தென்று படுக்கையிலே போய் விழுந் தார். கண்கள் ஒருபுறம் இழுத்துக்கொண்டு போயின. நரம்புகளில் முறுக்கேறிக் காலும் கையும் கோணிக் கொண்டன. 'ஐயோ! ரத்த அழுத்த நோய் உடையவராயிற்றே!' என்று கலவரம் அடைந்தேன். அருகே உள்ள வர் உதவியை நாடி, டாக்டரை வரவழைப் பதற்குள்....

பெண் பிறப்பே வேண்டாம்; அப்படிப் பிறந்தாலும் என்போல் துரதிர்ஷ்டசாலியாக யாரும் பிறக்கவே வேண்டாம்.

'ஊரோ தாயோ' என்று இங்கே எல்லா வற்றையும் முடித்துக் கொண்டு புறப்பட் டேன். அங்கே...

என் கணவர் சுற்றுப் பயணம் முடித்துக் கொண்டு வந்தாராம். செய்தி அறிந்து, தாயையும் அழைத்துக் கொண்டு எங்களைக் காணப் புறப்பட்டாராம். நாங்கள் ஊரை விட்டு வெளியேறிய செய்தியை அறிந்தா ராம். எங்களுக்கு நேர்ந்த கதியும் தெரிந்த தாம். அது மட்டுமா? இடைக்காலத்தில் அப்பா அவர்களைப் பற்றி ஏதோ நாறு மாறாகப் பேசினார்; எனக்கும் தெரியும். அந்த ஏச்சும் பேச்சும் ஒன்று, பத்து, நூறு, ஆயிர மாகத் திரிந்து, அவர் செவிக்கு எட்டினவாம். அந்த அளவில் அவர் வாளா விருந்தாராம். மேலும் சில நாட்களில் வேறு ஊருக்கு மாற் றல் ஆனாராம். எந்த ஊருக்கு? — அதுமட்டும் தெரியவில்லை.

'தெய்வமே!' என்று திரும்பினேன். வேறு வழி? நல்ல வேளையாக அறையைக் காலி செய்யாமல் போயிருந்தேன். இனி வாழ்வு தளிர்க்கும் என்ற நம்பிக்கை இல்லாவிட் டாலும் ஏனோ உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணம் மட்டும் ஏற்படவில்லை.

வயிறு வளர்க்க வேண்டுமே. அடிநாளில்— அப்பாவின் பெருந்தோரணை வாழ்க்கையில்— நிரம்பச் செலவழித்துப் பயின்ற இசை கை கொடுத்தது. சில 'டியூஷன்'கள் பிடித்தேன். சில காலத்துக்குப் பின் ஒரு பள்ளியில் இசை ஆசிரியை வேலையும் கிடைத்தது. நிரம்பக் கதைகள் படித்த பழக்கத்தினால் கதைகள் எழுத முயன்றேன். துன்பப்பட்டவர்கள் எழுதும் கதைகள் சோகமயமாக இருந்தாலும் அவற்றில் உயிரோட்டம் ஏற்பட்டு விடுகிறது. சிறு கதைகள் சில பிரசுரமான ஊக்கத்தில் 'குந்தலவராளி' என்ற நாவலை எழுதினேன். அது பரிசு பெற்றது இருக்கட்டும்; பரிசளித்த அவர்....

யாரோ செருமுவது போல் சிறு ஒலி. மெல்லத் திரும்பினேன். சாளரத்தின் அருகே அந்த முகம்!

சடக்கென்று எழுந்திருக்க முயன்றேன். கைகால்கள் இலேசில் ஒத்துழைக்கவில்லை. சமா ளித்து எழுந்து சென்று கதவைத் திறந்தேன். அவர் — சாளரத்தருகே நின்ற அவர்—உள்ளே வந்தார். அவர் கண்கள் பனித்திருப்பதை என் கண்கள் கண்டன. தாவி என் கரம் பற்ற முன்வந்தவர் ஏனோ தயங்கிப் பின்வாங் கினார். நான் அவர் காலடியில் பணிந்து எழுந்தேன். விரிப்பைப் போட்டு ஒதுங்கி நின்றேன். அந்தக் குத்துவிளக்கை உற்றுப் பார்த்த அவர் அதன் எதிரே சுவரில் மாட்டி யிருந்த படத்தைப் பார்த்தார். ''அட! சுவாமி படம் என்றல்லவா நினைத்தேன்!'' என்றார். ''உட்கார், பாரதி!'' என்று தம் அருகே சமுக்காளத்தில் கையால் தட்டினார். உடம்பெல்லாம் புல்லரிக்க அடக்கமாக அமர்ந்தேன்.

''திருட்டுத்தனமாக இங்கே வந்தேன். விழாவுக்கு வந்திருந்த யாராவது இங்கே வந்து பார்த்தால் என்ன நினைப்பார்கள்?'' என்று மோகனமாகச் சிரித்தார்.

''உன் கணவன் ரகுபதிதான் மாவட்டக் கலெக்டர் 'கே. ஆர். பதி' என்பதை நீ ஊகித்திருக்க முடியாது. அதே மாதிரி என் மனைவி பாரதிதான் 'பாரதி' என்பதையும் என்னால் ஊகிக்க முடியவில்லை. நல்ல வேளை யாக இப்படி ஒரு விழா நிகழ்ந்ததோ,

நாம் பிழைத்தோம். இல்லை என்றால்... ஆயுட்காலம் முழுதும் நீ என் படத்தையும் நான் உன் படத்தையும் பார்த்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதான்!''

அவர் குரல் கம்மிற்று: நிமிர்ந்து பார்த்தேன். கைக்குட்டையால் கண்ணைத் துடைத்துக்கொண்டார்.

''என் அம்மா ஒருமாதிரி. ஆனால் அவ்வாறு தாயாரைப் பற்றிக் கூறுவதுகூடப் பாவம் என்ற கொள்கை உடையவன் நான். உன் வருகை உறுதியான பின் என் பயணம் தீர்மானமாயிற்று. கவலைப்பட்டுக் கொண்டேதான் போனேன். திரும்பி வந்த பின் அம்மா சொன்னவற்றைக் கொண்டு சொல்லாதவற்றையும் ஊகித்தேன். ஒடிந்த குத்து விளக்கைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தேன். உள்ளம் உருகினேன். அதற்கேற்றாற்போல் சந்திப்பே இல்லை. இறுதி நாட்களில் அம்மாவும் ஞானம் பெற்று அங்கலாய்த்தாள். பயன்?

''மளமளவென்று பதவிகளில் உயர்ந்தேன். 'கலெக்டர்' என்று ஆனதும் விழாக்களுக்கு அழைக்கலானார்கள். திடீரென்று ஒரு நாள் என் மனத்தில் ஓர் எண்ணம் உண்டாயிற்று. 'இனி ஏதாவது விழாக்களில் கலந்துகொள்ள நேர்ந்தால் பெண்கள் பரிசு பெற்றால் சொந்தப் பொறுப்பில் வெள்ளிக் குத்துவிளக்கு வாங்கிச் சிறப்புப் பரிசாக வழங்குவது' என்று முடிவு செய்தேன். அவ்வாறு முடிவு செய்த பின் கலந்துகொண்ட முதல் விழா இதுதான். முதல் பரிசாக நான் குத்துவிளக்கை அளித்தது உனக்குத்தான்!''

என்னை அறியாமலே என் உடம்பு குலுங்கிற்று. அவரே மிருதுவாகப் பேசிய பிறகு தான் என்னிடமும் பேசும் சக்தி உண்டாயிற்று. ஜாக்கிரதையாகவே பேசினேன். நெடுநேரம் உரையாடினோம். பிறகு பாலைக் காய்ச்சிக் கொடுத்தேன்.

''நான் புறப்படுகிறேன். இருப்பிடம் சேர்ந்த பின் கடிதம் எழுதுகிறேன். வந்து சேர். இப்போது என்னுடனேயே அழைத்துச் செல்வது நாலு பேர் நாலு விதமும் பேசும் நிலையை உண்டுபண்ணும்.''

அவர் எழுந்தார். ''இந்த விநாடி முதல் நான் கலெக்டரின் மனைவி!'' என்றேன். அவர், ''அதைவிட, பரிசு பெற்ற நாவலாசிரியையின் கணவன் என்ற பெருமை என் உள்ளத்தை நிறைக்கிறது!'' என்றார்.

திரும்பி நின்று குத்துவிளக்கை உற்றுப் பார்த்தார்.

''இதே போல் இன்னொரு குத்துவிளக்கை வாங்கி வைத்து ஜோடியாக ஏற்றிச் சுடர் விடச் செய்ய வேண்டும்'' என்றேன், சிறு குழந்தை போல.

''ஜோடிக் குத்துவிளக்குகள்! அதோ ஒன்று, இதோ ஒன்று!'' என்று என் கன்னத்தில் தட்டினார் அவர்.

மணநாள் அன்று தீண்டிய அவர் கரம் பல ஆண்டுகளுக்குப் பின் என்மீது பட்ட போது என் உடலும் உள்ளமும் பரவசமாயின. அதைவிட அவர் அன்றிரவு என்னுடனேயே தங்கிவிடாது கண்ணியமாகச் சென்றது என்னைப் பெருமிதமடையச் செய்தது. அவர் சென்ற பின் விரைந்து சென்று எனக்கு வாழ்வளித்த குத்துவிளக்கை வணங்கினேன்.

அட்டைப்பட விளக்கம்

இன்றைய இரவும் அன்றைய இரவும்

வஸந்தம் வந்துவிட்டது. நிர்மலமான வானத்தில் முழுவட்ட நிலா உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. ஆனால், காதலனைப் பிரிந்திருக்கும் அவளுக்கோ ஒரே நெருப்புக் கோளமாகத் தோன்றுகிறது. அனல் கக்கி உள்ளத்தையும் உடலையும் எரிப்பதாகவே தோன்றுகிறது. இப்படிக் காதலனை விட்டுப் பிரிந்த நிலையில், காதலனோடு கழித்த இன்ப இரவுகளும் நினைவுக்கு வருகின்றன. அதில் ஓர் இரவு?

அன்று என்ன நடந்தது?


தன் காதலர் அன்புடனும் ஆசையுடனும் கொஞ்சு மொழிகளைச் சிந்திக்கொண்டு வருகிறார். இவள் அவரை ஏறெடுத்துப் பார்த்தாளா? முகம் மலர வரவேற்றாளா? இல்லை — இவள் ஊடி நின்றாள்.

இனி அவள் வாய்மொழியாக என்ன நடந்தது என்பதை அறிவோம்:

யான்ஊடத் தான்உணர்த்த யான்உணரா விட்டதற்பின்.
தான்ஊட யான்உணர்த்தத் தான்உணரான் — தேன்ஊறு
கொய்தார் வழுதி குளிர்சாந்(து) அணிஅகலம்
எய்தா(து) இராக் கழித்த ஆறு! — முத்தொள்ளாயிரம்

[வழுதி: பாண்டியன்; குளிர்சாந்து அணிஅகலம்: குளிர்ச்சி தரும் வாசனைச் சந்தனமும் பொன்னாபரணங்களும் பூண்டு அழகு செய்யும் பாண்டியனின் மார்பு.]

அன்றைய இரவைப் பற்றி இப்பொழுது நினைத்தாலும் எவ்வளவு இன்பமாக இருக்கிறது. காரணம் — அன்றுஅவர் உடன் இருந்தார்! - முத்தொள்ளாயிரத்தின் ஒரு காட்சியை முத்தான சித்திரமாக அட்டையில் தருகிறார் ஓவியர் ராமு.





உங்கள் குளியலறையின் சுகாதாரம் எப்படி?

சுத்தமில்லாத ...

காவேரி பிராண்ட் ப்ளீச்சிங் பௌடர்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R.S. சேலம் மாவட்டம்

மேனேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.

Criterion-MC-1142



மக்கள் மருத்துவ மனை



“நீங்கள் இருப்பது எங்கே?”

“பழைய மாம்பலத்தில்...”

கேள்வி கேட்டவரின் முகம் எவ்வளவுதான் மூடி மறைக்க முயன்றாலும் அகத்தின் அழகைப் படம் பிடித்துக் காண்பித்து விடும்.

அந்த நாட்களில் மேல மாம்பலத்துக்கு அவ்வளவு வியாதி.

அந்தப் பேட்டையில் வசிப்பவர்கள் அன்றும் — இன்றும் என்றுமே நடுத்தர வகுப்பினர்கள். சிறு வசதிகள் செய்து கொள்ள வேண்டும் என்றாலும் சிரமப்பட வேண்டும்.

நகரசபை சுகாதார வசதி செய்து கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் நோய் நொடியின்றி வாழ்ந்தால்தானே மக்கள் தங்களையும் காத்துக் கொண்டு தங்கள் குடும்பத்தையும் பாதுகாக்க முடியும்? அப்படியே நோய் நொடி வந்தால், அவர்கள் பிணி தீர்க்க அந்தப் பேட்டையில் டாக்டர்கள் பெயருக்கு ஒருவர் இருவரே இருந்தார்கள்.

இதற்கென்ன வழி?

இளைஞர்கள் சிலரின் உள்ளத்திலே ஒரு வழி தோன்றியது. எப்பாடு பட்டாவது ஒரு பொதுநல நிலையம் (பப்ளிக் ஹெல்த் சென்டர்) திறக்க வேண்டும் என்று! பல பெரியவர்களது பக்க பலத்தைக் கொண்டு, ஸ்ரீ எம். வி. சுப்பிரமணியம் அவர்களுடைய தொண்டுத் தலைமையிலே 1953ம் ஆண்டு இந்நிலையம் உருவாகியது.

சின்னஞ் சிறு குடிசையில் இரண்டு டாக்டர்களின் உதவி கொண்டு மிகக் குறைந்த விலையில் மருந்துகள் கொடுத்து வந்த இந்த நிலையத்துக்கு இன்று ஐந்து கிரவுண்டு நிலத்தில் மாடிக் கட்டிடம் ஒன்று இருக்கிறது!

அரசாங்கம் நிலம் கொடுத்து உதவியது என்றால் மக்கள் போட்டி போட்டுக்கொண்டு பண உதவி புரிந்தார்கள்.

பலன், இங்கு வசதியாகவும் மிகக் குறைந்த செலவிலும் மகப் பேறு மருத்துவம் செய்து கொள்ளலாம்; குழந்தைகள் முதற்கொண்டு கிழவர்கள்வரை சிகிச்சைகளும் ஆலோசனைகளும் பெறலாம்; கண், காது, மூக்கு வைத்தியங்களும் செய்து கொள்ளலாம். மிகக் குறைந்த செலவில் ‘எக்ஸ்ரே’ படம் கூடப் பிடித்துக் கொள்ளலாம். ரத்தப் பரிசோதனை போன்ற பரிசோதனைகளுக்கு இங்கு வசூலிக்கப்படும் கட்டணம் மிக மிகக் குறைவு. ஆப்பரேஷன்கள் முதற்கொண்டு குறைந்த செலவில் நிறைய வசதியுடன் சிறந்த நிபுணர்களால் செய்யப்படுகின்றன.

இந்தப் பொதுநல நிலையத்தில் சிகிச்சை பெறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விடவே, இங்கு வந்து தங்கிச் சிகிச்சை பெறாமல், வெளியிலிருந்து வந்து ஆலோசனை மட்டும் பெற்றுத் திரும்பும் நோயாளிகளுக்கென்று ‘அவுட் பேஷண்ட்’ கட்டிடம் ஒன்று 2—3—69 அன்று திறக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையத்துக்குச் சிறந்த மருத்துவ நிபுணர்களின் உதவி கிட்டுவதனால் பொது மக்களின் ஆதரவும் பெருகி வருகிறது.

“எத்தனை நிழல்கள் சேர்ந்தாலும் ஓர் உருவத்தைப் படைக்க முடியாது. விருப்பங்கள் பல கூடினாலும் ஒரு காரியத்தைச் சாதித்துவிட முடியாது. சாதனைக்கு முக்கியம் சிறந்த பணி. வெளிப்பகட்டையும் பறைசாற்றிக்கொள்ளும் பான்மையையும் விட்டுப் பணி செய்து கிடப்பதையே நம் பழக்கமாகக் கொள்ள வேண்டும்.”

ஸ்ரீ ராஜாஜி அவர்களின் அநுபவ வாக்கைப் பின்பற்றி நடக்கும் இந்தப் பொதுநல நிலையம் தன் பணியினால் புகழ் பெறுகிறது.

இப்படிப் பணிபுரியும் பொதுநல நிலையத்தோடு போட்டி போட்டுக் கொண்டு நகரசபையும் செயல்படுமானால், பழைய மாம்பலத்தில் குடியிருக்கப் பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று பிற பகுதி மக்கள் பொறாமைப்படும்படியாக இருக்கும். — அக்ஷயம்

கூலியின் விலை

1944ம் ஆண்டு மே மாதம் 5ந் தேதி.

காந்தியடிகள் பூனாவில் ஆகாகான் மாளிகையில் காவல் கைதியாக இருந்தார். அங்குதான் அவர் சுதந்திர வேள்வியில், தமது அன்புக்கு மிகவும் பாத்திரமான செயலாளர் மகாதேவ தேசாயை ஆஹுதியாகக் கொடுத்திருந்தார். அங்குதான் அறுபத்திரண்டு ஆண்டுகள் தம்மோடு இல்லறம் நடத்திய இனிய வாழ்க்கைத் துணை கஸ்தூரி பாயை விடுதலை வேதிக்கு அர்ப்பணம் செய்திருந்தார். இவ்விரு நிகழ்ச்சிகளும் அவருடைய உடலையும் ஆவியையும் ஆட்டிப் படைத்து விட்டன. பற்றாக்குறைக்கு நாட்டின் வருங்கால நிலை பற்றிய கவலைச் சுமை வேறு. எனவே, காந்திஜிக்கும் அடிக்கடி ஜுரம் வரலாயிற்று.

காந்திஜிக்கு வந்துவிட்ட ஜுரத்தைக் கண்டு ஆங்கிலேயர் ஆட்சி அச்சங்கொண்டது. காந்திஜியும் சிறையிலேயே கண்களை மூடிவிட்டால்...? நாடு முழுவதும் கலகத் தீ மூண்டுவிடும். அந்தத் தீயை அணைப்பது மிகக் கடினம். மேலும் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளாமல் காந்தியடிகளை விடுதலை செய்து விடுவதுதான் உசிதமென்று முடிவு செய்தது ஆட்சிபீடம்.

பலன், அன்று திடுதிப்பென்று சிறைச் சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பண்டாரி காந்திஜியின் அறைக்குள் நுழைந்தார். காந்திஜியை வணங்கி, ''மகாத்மாஜி! நாளை காலை எட்டு மணிக்குத் தங்களைத் தங்களுடைய தோழர்களோடு விடுதலை செய்யப்படும் !'' என்றார்.

''நீங்கள் விளையாட்டுக்குச் சொல்லவில்லையே?'' காந்திஜி வியப்புடன் கேட்டார்.

''நான் யாருடன் பேசுகிறேன் என்பது தெரியும். உண்மை தவிர வேறு வார்த்தைகள் வருமா ?'' என்று திருப்பிக் கேட்டார் கர்னல் பண்டாரி.

''அது சரி. அப்படியானால் ரயில் சார்ஜ் என்ன ஆகிறது ?'' காந்தியடிகள் சிரித்த வண்ணம் கேட்டார்.

''ரயில் கட்டணம் நீங்கள் பூனாவை விட்டுப் புறப்படும் பொழுது தரப்படும்!''

''அப்படியானால் சரி!''

''தயவுசெய்து இனி மீண்டும் இங்கே வராதீர்கள், பாபூஜி! பாருங்கள், உங்களைப் பற்றிய கவலையினால் என் தலை மயிர் எப்படி வெளுத்துப் போய் விட்டது!'' கர்னல் தலைத் தொப்பியை எடுத்தார்.

காந்தியடிகள் கலகலவென்று நகைத்தார்.

இன்ஸ்பெக்டர் ஜெனரல் போனபின் காந்திஜி தமது பேத்தி மனுகாந்தியைக் கூப்பிட்டு, ''மனு ! நமது பொருள்களையெல்லாம் சேகரித்து மூட்டை கட்டி வைத்துவிடு. நாளைக் காலையில் நமக்கு விடுதலையாம் !'' என்றார்.

மனு ஒவ்வொரு பொருளையும் எடுத்து வைத்தாள். அவள் பார்வை காந்திஜியின் செருப்புக்களில் சென்றது. 'அட ! பாபுவின் செருப்புகள் இப்படி அறுந்து கிடக்கின்றனவே ! நாளை எதைப் போட்டுக் கொள்வார் அவர் ?'

இவ்வெண்ணம் எழுந்ததும் காந்தியடிகளைக் கேட்காமலே, வெளியே எடுத்துச் சென்று செருப்புத் தொழிலாளி ஒருவரிடம் செப்பனிடக் கொடுத்து வந்தாள். கூலி எட்டணாவென்று பேசியும் வந்தாள்.

திரும்பி வந்தவள், காந்தியடிகள் செருப்பைத் தேடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். மனுவைப் பார்த்ததும், ''என் செருப்புக்கள் எங்கே போய்விட்டன, மனு?'' என்று கேட்டார் காந்திஜி.

''செப்பனிடச் சக்கிலியரிடம் கொடுத்து வந்திருக்கிறேன் !''

''ஏதாவது கூலி — கீலி பேசினாயா? இல்லை, காந்திக் கணக்குத்தானா ?''—காந்தியடிகளே கேட்டார் இப்படி.


'' இல்லை, பாபுஜி ! கூலி எட்டணா பேசியிருக்கிறேன் !''

காந்தியடிகளின் முகம் கம்பீரமாகியது.

''ஆமாம், இந்த எட்டணா யார் கொடுப்பார்கள் ? என்னிடமும் காலணா இல்லை, உன்னிடமும் இல்லை. இந்த வயசுக் காலத்திலே போய்ச் சிறையதிகாரியிடம் நான் கைநீட்டிப் பிச்சை வாங்குவதா ?'' என்றார்.

மனுகாந்தியின் முகத்தில் கவலைக் கோடுகள் இழையிட்டன. 'அட, காசைப் பற்றி யோசிக்காமல் இருந்து விட்டோமே ! போய்த் திரும்ப வாங்கி வந்துவிடலாமா, செருப்புக்களை ! அப்படி வாங்கினால் அந்தச் சக்கிலி என்ன நினைப்பான் ?'

மனுவின் யோசனை சங்கிலியாகத் தொடர்ந்தது. அதை நடுவில் அறுத்து, ''செருப்புக்களைப் போய்த் திரும்பவும் வாங்கி வந்துவிடு, மனு ! நான் அறுந்த செருப்புக்களைக் கொண்டே எப்படியாவது காலத்தை ஓட்டி விடுகிறேன்!'' என்றார் காந்திஜி.



மனுவுக்கு அழுகையே வந்து விட்டது. மெதுவாக அடி மேல் அடி எடுத்து வைத்து, — ஒவ்வோர் அடியும் பெருஞ் சுமையாகக் கனக்கச் செருப்புத் தொழிலாளியை அணுகினாள்.

''இன்னும் வேலை முடியவில்லையே, அம்மா !'' என்றான் தொழிலாளி அவளை எதிரே கண்டதும்.

அதைக் கேட்ட மனுவுக்கு வயிற்றில்



பால் வார்த்தாற்போல் இருந்தது. 'நல்லதாயிற்று! இவன் தைத்து வைத்திருந்தால் எட்டணாவுக்கு நான் எங்கே போவேன்?' மனமார ஆண்டவனை வாழ்த்தினாள். "பரவாயில்லை. திருப்பித் தந்துவிடு! அதைச் செப்பனிடத் தேவையில்லை!" என்றாள்.

"நல்லாச் சொன்னீங்களே! திருப்பித் தருவதாவது! காலையிலே பொழுது விடிஞ்சதும் இதுதான் எனக்கு முதல் போணி!" என்றான் தொழிலாளி.

'இதென்ன சோதனை! புதிதாக முளைக்கிறதே!' என்று எண்ணிய மனு, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, "காந்திஜியின் செருப்பு இது. திரும்பக் கேட்கிறார்!" என்றாள்.

"அப்படியா? ஏழை செய்த பாக்கியம் இல்லையா? இன்னிக்கு யார் முகத்திலே விழிச்சேன் நான்! அப்படியானால் இலவசமாகத் தைத்துக் கொடுத்து விடுகிறேன். செப்பனிடாமல் ஒருநாளும் இதைத் திருப்பித் தரமாட்டேன்!" மகிழ்ச்சி மிதப்பில் செருப்புத் தொழிலாளி சத்தியாக்கிரகமே செய்யத் தொடங்கி விட்டான்!

இந்த இக்கட்டிலிருந்து தப்ப மனுகாந்தி அவனை நல்ல வார்த்தை சொல்லி காந்தியிடமே அழைத்துச் சென்றாள்.

அப்பொழுது காந்தியடிகள் துல்லியமான, பால் போன்ற நிறம் படைத்த மெத்தையில் உட்கார்ந்து தம்மைக் காண வந்த ஆங்கிலேயர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார். உலகத்தின் வருங்காலத்தைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார்.

மனு இடையில் குறுக்கிட்டு எல்லா விவரத்தையும் சொன்னாள்.

காந்திஜி செருப்புத் தொழிலாளியைப் பார்த்து, "தம்பி! செருப்புக்களைச் செப்பனிட எனக்கும் கற்றுத் தருகிறாயா? — இங்கே வா, இப்படிப் பக்கத்திலே உட்காரு! நீ எனக்கு வாத்தியார். நான் உனக்கு மாணவன்!" என்று அன்போடு அழைத்தார்.

'மகாத்மா காந்திக்குச் சமதையாக ஒரு சக்கிலியன் தூய்மையான மெத்தையில் போய் உட்காருவதா?'

இப்படி எண்ணியவன் வெறுந்தரையில் உட்காரப் போனான். காந்திஜி பிடிவாதமாக அவன் கையைப் பற்றித் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

சக்கிலியன் தன் பையைத் திறந்து ஆயுதங்களை எடுத்தான். புதிதாக வந்த கற்றுக்குட்டிக்குச் சொல்லிக் கொடுக்கிறாற்போலக் காந்திஜிக்கு அவன் செருப்புத் தைக்கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தான். அவன் சொற்படி காந்திஜி தமது செருப்புக்களைத் தாமே தைக்கலானார்.

தன்னிடம் ஆரம்பப் பாடம் கேட்கும் இந்தச் சீடர் ஒரு காலத்தில் நல்ல நல்ல செருப்புக்களைத் தைத்துப் பழகியவர் என்று பாவம், அச்சக்கிலியனுக்கு எப்படித் தெரியும்?

தம்மைக் காண வந்திருந்த ஆங்கிலேயரிடம் காந்தியடிகள் விவரம் கூறினார். கேட்டு அவர்கள் அதிசயித்துப் போனார்கள்!

'எதிரே உட்கார்ந்து செருப்புக்களைச் செப்பனிடும் இவரா பாரத நாட்டின் பெருந் தலைவர்? உலகம் புகழும் உத்தமர்? அழுக்கான உடை உடுத்திப் படிப்பு வாசனை சிறிதும் இல்லாத ஒரு சக்கிலியைத் தம் குருவாக ஏற்று எத்தனை சிரத்தையுடன் செருப்புத் தைக்கக் கற்கிறார்! ஆன்மிகத் துறையில் சாதகம் புரிபவன்கூடத் தன் ஆசானிடம் இத்தனை பக்தி சிரத்தையுடன் மறை ரகசியங்களைக் கற்றுவர மாட்டான் போலிருக்கிறதே!' இப்படி உள்ளத்துள் வியந்து கொண்டிருந்த அவர்களை மேலும் வியப்பில் ஆழ்த்தினார் காந்தியடிகள். இன்னுமொரு ரகசியத்தை எடுத்துக் கூறி!

"நான் தென் ஆப்பிரிக்காவில் என் ஜர்மானிய நண்பர் 'கேலன் பெக்'கிடம் செருப்புத் தைக்கும் கலையைக் கற்றுக் கொண்டிருக்கிறேனாக்கும்!"

"அப்படியா?"

"ஆமாம். நான் மிக நன்றாகச் செருப்புத் தைப்பேன். என் கையினால் தைத்த ஒரு ஜோடி செருப்பை நான் ஜெனரல் ஸ்மட்ஸுக்குக்கூட அன்பளிப்பாக வழங்கியிருக்கிறேன்!"

"அரசியலில் உங்களைத் தீவிரமாக எதிர்த்துப் பகை உணர்ச்சி காட்டியவருக்கா?" — வந்திருந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

"நான் அவரை என் நண்பராகவேதான் கருதினேன்! அரசியலில் அவர் என்னைத் தீவிரமாகத்தான் எதிர்த்தார்; எதிரியாகவே கூட எண்ணினார். ஆனால் நான் அளித்த ஜோடிச் செருப்பை மிக உயர்ந்த பரிசுப் பொருளாகத்தான் அவரும் போற்றினார்."

"இதை அஹிம்சையின் வெற்றி என்று தானே கூற வேண்டும்?"

"சந்தேகமில்லாமல்!"

இப்படி வந்திருந்தவர்களோடு காந்தியடிகள் பேசிக் கொண்டிருந்தார்; அதோடு காரியத்திலும் கண்ணாயிருந்தார். அதாவது செருப்புச் செப்பனிடும் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

பேட்டி நேரம் முடிந்தது. வந்திருந்தவர்கள் விடைபெற்றார்கள்.

செருப்புகளும் தைத்து முடிந்தன. காந்தியடிகள் இத்தனை நேரமும் செருப்புத் தொழிலில் ஆசானாக விளங்கிய சக்கிலியனுக்கு மிகவும் நன்றி தெரிவித்தார்.

சக்கிலியனும் யாருக்கும் கிடைக்காத பாக்கியம் தனக்குக் கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்தான்.

காந்தியின் முகத்தில் மகிழ்ச்சி பளிச்சிட்டது: இப்படியாக எட்டணா மிச்சப்படுத்தியதில் நாட்டின் பொதுப் பணத்தில் எட்டு லட்சம் ரூபாயை மிச்சப்படுத்தி விட்டது போன்று மகிழ்ந்தார். மனுவோ மந்திர வசப்பட்டவள்போல் இந்த நிகழ்ச்சிக்கு ஊமைச் சாட்சியாக நின்றாள்.

— ரா. வீ.




எவராலும்
நெருங்கமுடியாத
முதலிடம்
1st
★ கச்சிதமான நயம்
★ ஒப்பற்ற சுவை
★ முரமுரப்பான புதுமை
★ ஈடிணையற்ற போஷாக்கு
பார்லே
க்ளுகோ
பிஸ்கட்டுகள்
PARLE
Gluco
பார்லே க்ளுகோ இந்தியாவிலேயே உன்னத
விற்பனையுள்ள பிஸ்கட்டாக விளங்குவதில் வியப்பில்லை!



குடும்பக் கட்டுப்பாடு மூலம் குழந்தைகளைக் குறைத்துக்கொண்டே போனால், பிற் காலத்தில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை ராணுவத்தில் சேர அனுமதிப்பதற்கோ மலை ஏறுவது போன்ற அபாயகரமான விளையாட்டுக்களில் ஈடுபட அனுமதிப்பதற்கோ தைரியம் ஏற்படாதபடி தயங்குவார்கள் என்கிறார் ஒரு சுவிஸ் வீக்லி வாசகர்.

— 'பாபு'

சிக்கனம்!

நாளது மாதம் ..... தேதி காலை 5 மணிக்கு எங்கள் பாட்டனாரின் சதாபிஷேகமும் அதே தினம் காலை ஆறு மணிக்கு எங்கள் தகப்பனாரின் சஷ்டியப்தபூர்த்தியும், அன்றே காலை 9 மணிக்கு என் கடைசிப் பெண்ணுக்கு விவாகமும், 11 மணிக்கு என் மூத்த மகனின் குமாரனுக்குப் பிறந்த நாளும் கொண்டாடுவதாய்ப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ....

- சீனிவாசன்





நாவலாசிரியர் எட்கர்வேலஸ் ஒரு நிமிஷம்கூட வீணாவதைச் சகிக்க மாட்டார். அவருடைய காரியதரிசி அவர் கூறுவதை எழுதிக் கொண்டிருந்தார். ''என்னை நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா?'' என்று இடையில் கேட்டார் அவர். அதைக் கேட்டதும் அப்பெண் செய்து கொண்டிருந்த காரியத்தை அப்படியே நிறுத்திவிட்டுக் கிளம்பினாள். இருவரும் ரிஜிஸ்திரார் முன்னிலையில் திருமணத்தை முடித்துக் கொண்டனர். திரும்பி வந்ததும் அப் பெண் தொடர்ந்து அவர் கூறியதை எழுத ஆரம்பித்தாள்.

தகவல்: 'ரமணன்'

''நூறு ரூபாய் அவசரமாகத் தேவைப்படுகிறது. உன்னிடம் இருந்தால் கொடுத்து உதவி பண்ணேன். அப்புறம் உனக்கு ஆயுசு பூராவும் கடன் பட்டிருப்பேன்......!''

'' அதனால்தானே பயமாக இருக்கிறது......!'' -உத்திரா



எப்படிச் சொல்வது?

ஒரு தமிழ்த் திரைப்பட நடிகர் தம் நண்பரிடம் மார் தட்டிக்கொண்டார். ''தமிழ்த் திரை உலகில் இரண்டாவது தலைசிறந்த நடிகன் நான் தான்!''

''முதலாவது நடிகர் யார்?''

''எப்படிச் சொல்வது? எல்லாருமே என் நண்பர்களாயிற்றே.....!''



வல்லூறுகளும் பிற பறவைகளும் பெரும்பாலும் பழக்கத்துக்கு அடிமையாகத்தான் உள்ளன. குஞ்சுகளுக்கு இரை தேடி வருவது ஆண் பறவையின் கடமை. கூட்டின்மீதமர்ந்து ஆண் பறவை கொண்டு வரும் இரையை வாங்கித் தக்கபடி குஞ்சுகளுக்கு ஊட்டுவது தாய்ப் பறவையின் கடமை. சில சமயங்களில் விபத்துக்களாலோ வேறு காரணங்களாலோ தாய்ப் பறவை இறந்துவிட்டால் ஆண் பறவை வழக்கம் போல் குஞ்சுகள் இருக்கும் கூட்டின் மீது இரையைக் கொண்டு வந்து குவித்தபடி இருக்கும். இயல்புணர்ச்சியால் குஞ்சுகளுக்கு இரை வேண்டும் என்பதை உணர்ந்து இரை கொண்டு வரும் ஆண் பறவை, அதைக் குஞ்சுகளுக்கு ஊட்ட வேண்டும் என்பதை ஏனோ உணர்வதில்லை.



- ஆர். எம்.


பிரின்ஸ்
பிளேடு
இறகின்
மென்மைபோல்
முகக்ஷவரம்
செய்யும்
பிளேடு!
THE SYMBOL OF QUALITY
Prince
BLUE RAZOR BLADES
BLUE PRINCE BLADE
MADE IN INDIA
ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட
பிரின்ஸ்
ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்



நீதி அழுதது!

மனிதன் தனியாக இருந்தால் சிந்திப்பான்! இருவராக இருந்தால் விவாதிப்பார்கள். ஆனால் மக்கள் கூட்டமோ விவாதிப்பதும் இல்லை, சிந்திப்பதும் இல்லை. காரண காரியங்களைப் பற்றி யோசிக்காமலே ஆவேசத்துடன் செயல்படும்.

இந்த மனோதத்துவத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்கள் சம்பாதியின் உறவினர்கள். புரிந்து கொண்டிருந்ததுடன் அந்த மனோதத்துவத்தைப் பயன்படுத்திச் சம்பாதியின் சொத்தை யெல்லாம் அபகரிக்கவும் திட்டம் போட்டார்கள்! சம்பாதி ஓர் இளமங்கை. அழகிதான்; ஆனால் அதிர்ஷ்டக்காரி அல்ல. ஒரு கொடிய விஷ ஜுரம் அவள் ஆசைக் கணவனைப் பலி வாங்கிவிட்டது.

இருண்டு கிடந்த எதிர்காலத்தை எண்ணி அவள் புலம்பி அழுதாள். அன்பு நிறைந்த கணவனைப் பிரிந்து எப்படி வாழ்வேன் என்று கதறித் தீர்த்தாள். கணவனிடம் அவள் கொண்டிருந்த காதல் அந்த உறவினருக்கு நன்றாகத் தெரியும். படிப்பறிவில்லாத அந்த வெகுளிப் பெண்ணிடம், ''கணவனை நீ பிரிய வேண்டியதில்லை. அவனோடு நீயும் சொர்க்க பதவி அடைந்து ஆனந்தமாக இருக்கலாம்'' என்றார்கள்.

அந்த அப்பாவிப் பெண்ணின் கண்கள் அகன்று விரிந்தன. 'அதுவும் சாத்தியமா? கணவனின் அன்புக் கரங்கள் என் இடையைச் சுற்றி அணைக்க நான் சொர்க்க லோகத்தில் மிதக்க முடியுமா? ஆகா! அந்தப் பாக்கியத்தை அடைய நான் என்ன செய்ய வேண்டும்?'

''கங்கைக் கரையில் சிதை அடுக்கி உன் கணவனை அதில் கிடத்துவோம். நீயும் புனிதமான கங்கையில் நீராடி எழுந்து அவர் பக்கத்தில் அமர்ந்துகொள்ள வேண்டும். கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்து ஸதி மாதாவையே உள்ளத்தில் நிறைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அவள் உனக்கு அருள் புரிவாள். தேவலோகத்திலிருந்து தீ ஜுவாலை ஒன்றை அனுப்பி வைப்பாள். அது உன்னைச் சூழும்போது தண்மையென்றிருக்கும்! அடுத்த விநாடி நீயும் உன் கணவனும் கரம் கோத்த படி நிற்கச் சொர்க்க வாயில் உங்கள் எதிரே காட்சி தரும். தேவர்கள் உங்களை வரவேற்கக் காத்திருப்பார்கள்!''

ஃ ஃ ஃ

இது ஏதோ ரொம்பப் பழங்காலத்தில் நடந்த கதை என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். சுமார் நாற்பதே ஆண்டுகளுக்கு முன்னால் கங்கைநதிக் கரையில் ஒரு கிராமத்தில் நிகழ்ந்த சம்பவம்தான். ஸதி ஒழிப்புத் திட்டமும் சட்டமும் வந்த பிறகு சம்பாதியின் உறவினர்கள் இப்படி நடந்துகொண்டதுமட்டும் ஆச்சரியமில்லை; அவர்கள் கூறியதை யெல்லாம் அந்தச் சாதுப் பெண் முழுமையாக நம்பி இறுதி யாத்திரையின்போது கணவனைப் பின்தொடர்ந்து சென்றாளே, அது அதைவிட ஆச்சரியம்!

அந்த உறவினர்கள் சும்மா போனார்களா? ''ஸதி மாதாவுக்கு ஜே! ஸதி தேவிக்கு ஜே!'' என்று கோஷமிட்டார்கள்! ஏன்? நாலைந்து பேர் இச்செயலில் இறங்கினால் சட்டம் தடுக்கும்; நாலாயிரம் பேர் இதில் ஈடுபட்டாலோ சட்டம் திகைக்கும்!

அவர்கள் எதிர்பார்த்தது நிகழ்ந்தது. இறுதி யாத்திரை ஊர்வலத்தில் பத்து நூறு

ஆயிரம் என்று மக்கள் தொகை நிமிஷத்துக்கு நிமிஷம் பெருகிக் கொண்டே போயிற்று. எல்லாரும் ''ஸதி மாதா! ஸதி மாதா!'' என்று ஆவேசக் குரலில் கூச்சலிட்டார்கள். ஸதி மாதாவின் ஓர் ஆவேசமாகவே சம்பாதியைக் கருதி அவளை வணங்கி வழிபட்டார்கள்.

ஊர்வலம் பல இடங்களில் பக்த கோடிகள் ஸதி மாதாவிடம் ஆசி பெறுவதற்காக நின்று நிதானித்து ஊர்ந்து சென்றது. என்றாலும் ஒரு நிச்சயத்துடன் படிப்படியாகக் கங்கைக் கரையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

உன்னார் போலீஸ் ஸ்டேஷனில் இருந்த சப் இன்ஸ்பெக்டர் இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பக்கத்துக் கிராமங்களில் இருந்தும் துணை தருவித்துச் சுமார் நாற்பது போலீஸ்காரர்களுடன் இந்த ஊர்வலத்தை நெருங்கினார். இதற்குள் சுற்றுவட்டாரக் கிராமங்களிலெல்லாம் விஷயம் பரவிவிடக் கூட்டம் நாலாயிரமாகப் பெருகிவிட்டது. ஆயினும் இன்ஸ்பெக்டர் தமது கடமையைச் செய்யத் தவறவில்லை. அந்தப் பெண்ணையும் அவள் உறவினர்களையும் அவர்கள் செய்வது சட்ட விரோதம் என்று எச்சரித்தார். அந்த அப்பாவிப் பெண் அசைந்து கொடுக்கவில்லை. உறவினர்கள் ஊராரைப் பார்த்தனர். கூட்டமோ காவலர்களை நெருங்கவே கூடாது என்றது. அவ்வளவு ஆவேசம் அவர்களுக்கு!

சிதை அடுக்கப்பட்டது. மங்கல நீராடலுக்குப் பிறகு கணவன் அருகில் அமர்ந்தாள் சம்பாதி. இமைகளை மூடித் தியானத்தில் ஆழ்ந்தாள். ஜனங்களின் ''ஸதி மாதாவுக்கு ஜே!'' என்ற கோஷம் விண்ணை முட்டியது. மக்களின் இந்த மதிமயக்க நிலையைப் பயன்படுத்திக் கொண்ட உறவினரில் ஒருவர் யாருமறியாமல் சிதைக்குத் தீவைத்து விட்டார். அது ஜ்வாலையாகப் பரவி வானோங்கி உயர்ந்தது. சிதை தானாகவே தீப்பற்றிக்கொண்டதாக எண்ணிய மக்களின் கண்டங்களிலிருந்து 'ஆஹா'காரம் எழுந்தது! சம்பாதிக்குச் சூடு உறைத்தது — பொறுத்துக் கொண்டாள். தீ சுட்டது — பல்லைக் கடித்துக் கொண்டாள். உடல் வெந்தது — அவளால் தாங்க முடியவில்லை!

ஒரே பாய்ச்சல்! சிதை அடுக்கிலிருந்து கங்கா பிரவாகத்தில் பாய்ந்து விட்டாள்!

ஆனால் ஜனங்களுக்கு அது தெரியாது! அவர்கள் கொழுந்து விட்டெரியும் தீ ஜ்வாலைகளைப் பார்த்து ''ஸதி மாதா! ஸதி மாதா!'' என்று உணர்ச்சிப் பரவசமாகிக் கத்தியபடியே கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

ஃ ஃ ஃ

சம்பாதி நதியில் பாய்ந்ததை இரு கூரிய கண்கள் கவனித்தன. அவை இன்ஸ்பெக்டருடையவை. அவர் ஒரு படகுக்குப் பாய்ந்தோடினார். விரைவாக அதைச் செலுத்திக் கொண்டு போய் மூழ்கும் தறுவாயிலிருந்த சம்பாதியின் கேசத்தைப் பிடித்திழுத்து அவளைப் படகில் ஏற்றினார்.

மக்கள் கூட்டம் இருக்கும் இடத்துக்குப் போனால் சம்பாதியின் கதி என்ன ஆகும் என்பது அவருக்குத் தெரியும். வேறு ஒரு துறைக்குப் படகைச் செலுத்திக்கொண்டு போனார்.

சம்பாதியைக் கரையேற்றி வண்டி வைத்து நகருக்குக் கொண்டு சென்றார். ஆஸ்பத்திரியில் சேர்த்தார். சம்பாதி நாலைந்து நாட்கள் மரணத்துடன் போராடினாள். உடம்பெல்லாம் பரவியிருந்த தீப்புண்களின் வேதனை தாளாமல் துடித்தாள். ''இதுவா சொர்க்கம்? என் கணவர் எங்கே? ஐயோ எரிகிறதே!'' என்று கதறி அழுதாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்கு ஏதோ புரிவது போலிருந்தது. சம்பாதியின் அருகில் இருந்து, ஆறுதல் வார்த்தை சொல்லி, அவளைப் பேசத் தூண்டினார். சம்பாதி பேசப் பேச, அந்த அப்பாவிப் பெண்ணுக்கு அவள் கணவன் விட்டுச் சென்ற சொத்தை அபகரிக்கக் கொடிய உறவினர்கள் செய்த சதி அவருக்கு அம்பலமாயிற்று. சம்பாதியின் வாக்குமூலத்தைச் சாட்சிகள் அருகில் இருக்க எழுதி, அவளிடம் கையெழுத்து வாங்கினார்.

ஃ ஃ ஃ

இதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு தீப்புண்கள் காரணமாகச் சம்பாதி காலமானாள். இத்தனை வேதனைப் பட்டுவிட்ட அவள் உண்மையாகவே சொர்க்க பதவியை அடைய வேண்டும் என்று உளமாறப் பிரார்த்தித்தார் இன்ஸ்பெக்டர். அவர் அத்துடன் நிற்கவில்லை.

சம்பாதியின் உறவினர்களையெல்லாம் நியாய மன்றத்தில் குற்றவாளிகளாக நிறுத்தி வைத்தார். அவர்களுக்கு எதிராக வழக்கை எடுத்துரைக்கச் சர்க்கார் தரப்பு வக்கீலுக்கு உதவினார்.

மறுத்துக்கூற முடியாத விதத்தில் கொலைக் குற்றம் ருசுவாயிற்று. 1928ல் தீர்ப்பு வழங்கும்போது ஆங்கிலேய நீதிபதி கோர்ட்னி ஃபெரல் சம்பாதியின் துயரகரமான முடிவை எண்ணித் தமது கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டார் என்று நீதிமன்ற தஸ்தாவேஜுகளே குறிப்பிடுகின்றன.

பாட்னா உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கையிலேயே இந்த விவரம் ஏதும் தெரியாத சில எளிய கிராம மக்கள் சம்பாதி உடன்கட்டை ஏறிய இடத்தில் அவளுக்கு நினைவுச் சின்னம் எழுப்பி அதை ஸதி மாதா கோயிலாக்கி வழிபடவும் ஆரம்பித்து விட்டனர்!

பதினைந்து முதல் இருபது வருஷங்கள்வரை குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை விதித்த நீதிபதி ஃபெரல் இறுதியாகச் சொன்னார்:

''சம்பாதிக்கு ஒரு நினைவுச் சின்னம் எழும்பியிருப்பதாக அறிகிறேன். இந்தக் குற்றவாளிகள் தண்டனைக் காலம் முடிந்து விடுதலை பெற்றதும் மன்னிக்கப்பட்டவர்களாகிவிட மாட்டார்கள். சம்பாதியின் நினைவுச் சின்னம் உள்ள இடத்துக்குப் போய் வணங்கித் தொழுது மனப்பூர்வமாக அவளிடம் மன்னிப்புக் கேட்கட்டும். இவர்களை அவள் மன்னித்தால்தான் உண்டு!''

— வி. எஸ். சுக்டன்கர்

“**வா**, பாபு.... சிவகுமார்!, லலிதா! மோகன்!.... பாபு வந்தாச்சு....” என்று அறிவித்துக் கொண்டே லட்சுமணன் உள்ளே நுழைந்தார். அவருடைய கைகள் இரண்டிலும் விருந்தாளி பாபுவின் பெட்டியும், இன்னும் ஏதோ சாமானும் இருந்தன. திண்ணையிலேயே அவற்றை அவர் ஓரமாக வைத்தார்.

பாபு தயங்கிக் கொண்டே நின்றான்.

இதற்குள் உள்ளேயிருந்து சிவகுமாரும், மோகனும் ஓடி வந்தார்கள்.

“பாபு வந்தாச்சா?” என்று கேட்டவாறு பக்கத்து வீட்டுத் திண்ணையில் இருந்த தூணைப் பிடித்துக் கொண்டு திண்ணையைத் தாவிப் பரக்கப் பரக்க ஓடி வந்தாள் லலிதா.

“ஷூஸை எங்கே பெரியப்பா கயட்டிப் போடறது?” என்ற கேள்வியுடன் அப்படியே நின்று விட்டான் பாபு.

“உள்ளே கயட்டி வைக்கலாம். அப்படியே வா, பரவாயில்லே” என்று லட்சுமணன் கூற, அவன் பின்னால் சென்றான்.

அவனுடைய முழுக் கைச்சட்டை, அதில் பளபளத்த கஃப்-லிங்க்ஸ், மிடுக்கான டிராயர், நைலான் ஸாக்ஸ் எல்லாமே வீட்டுக் குழந்தைகள் கண்களைக் கவர்ந்தன.

சிவகுமார் வாய் திறந்தே சொல்லிவிட்டான். “அடி சக்கை, இத்தனூண்டு பையனுக்குக் கூட ஃபுல் கைச்சட்டையா?”

எல்லோருமே சிரித்து விட்டனர். லட்சுமணன் அவனைப் பார்த்துக் கூறினார்—“சின்னவாள்ளாம் முழுக்கை சட்டை போடப்படாதுன்னு சட்டம் ஒண்ணும் கிடையாதுடா, சிவகுமார். யார் வேணுலும் போட்டுக்கலாம்.”

சிவகுமார்தான் வீட்டிலேயே சின்னவன். “நான் தீபாவளிக்கு வாங்கிக் கொடுன்னப்போ, நீ சொன்னியே, அப்பா. அதெல்லாம் சின்னவா போட்டுக்கப்படாதுன்னு. அப்பா சொன்னாரோல்லியோடி, லலிதா?” என்று அவன் லலிதாவைச் சாட்சிக்கு இழுத்தான்.

“ஆமாம்.” —இது அக்காக்காரி.



பெரியப்பா

''இப்ப பாபு மட்டும் போட்டுண்டிருக்கானே அது சரியோ?''

லட்சுமணன் சமாதானம் சொன்னார்: ''பாபு டில்லியிலேருந்து வரான். அங்கெல்லாம் குளிர் ஜாஸ்தி. அதனாலே முழுக் கைச் சட்டை போட்டுண்டா குளிராம இருக்கும்.''

பாபு காலணிகளைக் கழற்றி ஓரமாக வைத்துவிட்டு ஒதுங்கினாற்போல் நின்றான். அவனருகே போய்ச் சிவகுமார் கேட்டான், ''பாபு, எப்பவுமே நீ அங்கே முழுக்கை வச்சதா போட்டுக்குவே? வெய்யில் காலத்திலே வேர்க்காது?''

பாபு பதில் சொல்லுவதற்கு முன், உள்ளே யிருந்து வந்த அவனுடைய பெரியம்மா அவன் கையைப் பற்றிச் சொன்னாள்: ''கால் அலம்பிட்டு, ஏதாவது சாப்பிடலாம் பாபு. அதுக்குள்ளே நச்சு நச்சினு இந்தச் சிவகுமார் இப்படித்தான் தொண தொணப்பான். உள்ளே வா.''

பாபு கால்சராய்ப் பையிலிருந்து எதையோ எடுத்தான். ''சிவகுமார்! இந்தா. மோகன், லலிதா இந்தாங்கோ உங்களுக்கும்.''

''மில்க் டாஃபி. பிடிச்சிருக்கா உங்களுக்கு?'' எனக் கேட்ட வண்ணம் ஆளுக்கொன்றை நீட்டினான்.

''பெரியப்பா, உங்களுக்கொண்ணு. பெரியம்மாவுக்கும் ஒண்ணு.'' பாபு விநியோகம் செய்தான்.

''இந்தூர்லியும் இருக்கு. சந்துக்கடை முடுக்குத் திரும்பின இருக்கு. அங்கே ஜாடி ஜாடியா வச்சிருக்கான். ஆனால் நாங்க இதைச் சாக்லேட்டுன்னுதான் சொல்லுவோம். நீ வேறென்னவோ பேர் சொல்லியே?''

''டாஃபின்னும் சொல்லலாம். அங்கெல்லாம் மில்க் டாஃபின்னுதான் இதுக்குப் பேர்.''

சிவகுமார் உடனே ஒரு நிர்மானத்துக்கு வந்தவனாக அறிவித்தான். ''நாமும் இனிமே அப்பிடியே சொல்லுவோம், லலிதா மோகன். இந்தூர்லே எல்லாரும் முழிப்பா.''

கிணற்றடியில் கால்களைக் கழுவிக்கொண்டு பாபு, அடுக்களையுள் நுழைந்தான்.

''என்ன குடிப்பே நீ அங்கே இருக்கறப்போ? காப்பியா அல்லது வேறு ஏதாவது...'' பெரியம்மா அடுப்பின் மீது காய்ந்து கொண்டிருந்த பாலைக் கரண்டியினால் கிளறியவாறு விசாரித்தாள்.

''என்ன வேணாலும் சாப்பிடுவேன், பெரியம்மா. ஓவல்டின், போர்ன்விடா, டிரிங்கிங் சாக்லேட் ஏதானும் சரி.''

லட்சுமணன் உள்ளே வந்தார். ''நான் நெனச்சது சரி. அதுதான் ஸ்டோரிலே வாங்கிண்டு வந்தேன், ஒரு டப்பா.'' அவர் தம் ஊகம் சரியாக அமைந்ததற்குப் பெருமைப்பட்டார்.

பெரியம்மா கண்டக் காய்ந்த பாலில் ஒரு ஸ்பூன் பானப் பொடியைக் கலந்து, டம்ளர் விளிம்பு வரை நுரை தங்குமாறு கலக்கி அவன் எதிரே வைத்தாள்.

''ஏ ஒன், பெரியம்மா. அம்மா கலந்தா இவ்வளவு ஜோரா இருக்காது.''

பெரியம்மாவின் உள்ளம் குளிர்ந்தது.

''எனக்கு அம்மா'' என்று கூறிக்கொண்டே சிவகுமார் உள்ளே வந்தான்.

பாபு, ''ஒரு டம்ளர் எடு. அதுக்குப் பாதியாகச் சாப்பிடலாம்.'' எனவே, பெரியம்மா குறுக்கிட்டாள். — அதெல்லாம் வேண்டாம். நீ சாப்பிடு. லலிதா, மோகன் — இந்தக் தடியனை எங்கியாவது கூட்டிண்டு போய்த் தொலையறதுதானே?'' சிவகுமார் எட்ட நின்று விட்டான்.

''நீ வரதுக்கு முன்னேடிதான் ராகிக் கஞ்சி டம்ளர் முட்ட முட்டக் குடிச்சான். கம்மனாட்டும் கேக்கறான்.''

பாபு குடித்துவிட்டு எழுந்தான். சிவகுமாரோடு கிளம்பினான்.

''உனக்கு ஓவல்டின், போர்ன்விடாவெல்லாம் பிடிக்காது?'' பாபுவின் சந்தேகம் இது.

''ஊஹூம். எனக்கு வீட்டிலே பண்ணின ராகிலே கஞ்சி கொடுப்பா அம்மா. அதுதான் பிடிக்கும்.''

''பெரியம்மா இப்பக் கொடுத்த ட்ரிங்க் எவ்வளவு நன்னா இருந்தது தெரியுமா?'' என்று பாபு கேட்க, சிவகுமார் சொன்னான்— ''எனக்குத்தான் பிடிக்காதே ராகிக் கஞ்சியைத் தவிர வேறொண்ணும்?''

குழந்தைகள் வெளியே சென்றுவிட்டனர் ■

ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.




வீடு பிடிக்கவில்லை!

திரிசங்கு

கோலம் போடுவோருக்கு .....

விடை :



நகலல்: ரமணன்

ரசம் முடிந்து, சாதம் பரிமாறி ஆகியது. பெரியம்மா ஓர் அலுமினியக் கரண்டியில் கெட்டியாக ஆடைத் தயிரை எடுத்து வந்து பாபுவின் இலையில் வார்த்தாள்.

''தயிர் டில்லி மாதிரியே இங்கேயும் நன்னா யிருக்கு'' என்று பாபு மகிழ்ச்சியோடு கூவினான்.

''இன்னும் கொஞ்சம் வேணுமா?'' பரிவுடன் பெரியம்மா வினவினாள்.

''கேட்பானேன்? குழந்தைக்குப் போடு'' என்றார் லட்சுமணன். எஞ்சியிருந்த தயிரை அப்படியே பாபுவின் இலைச் சாதத்தில் விட்டு எஜமானி வார்த்தாள்.

''எத்தனை நேரம்மா காத்திண்டிருக்கிறது? எங்களுக்கு மோர் குத்தலாமோல்லியோ?'' மோகன் பேசினான்.

ஜாடியை எடுத்து வந்து ஒவ்வொருவர் இலையிலும் மோர் வார்த்தவாறு, தாயார் கேட்டாள் — ''அப்படி என்ன அவசரம்? சாப்பிட்டுட்டு ஆபீசுக்குப் போய் வேலை பண்ணப் போறேளா? ஒவ்வொருத்தராத் தானே பரிமாறணும்?''

சிவகுமார் இந்த மாதிரியான இடங்களில் எப்போதுமே அழகுறப் பேசுபவன். ''ஆபீசுக்குப் போனால்தானா? நான் சாப்பிட்டுட்டுப் பம்பரம் விளையாடப் போறேன்.''

அவன் இலையிலும் மோர் பரிமாறப்பட்டது.

''சிவகுமார், உனக்கு மோர்தான் பிடிக்குமா? தயிர் குத்திக்கோடா. டில்லிலே ஃப்ரிஜ்லே வெச்ச தயிர்கூட இவ்வளவு ஜோரா இருந்ததில்லே.''

சிவகுமார் ஒன்றும் பேசவில்லை.

பெரியம்மா இங்கே பேசலானாள்—''இவாளுக்கெல்லாம் தயிர்னா பிடிக்காது. இது கிராமாந்தரம் பாரு. தயிர், பால் எல்லாம் வேணது சாப்பிட்டாச்சு. அலுத்தும் போயாச்சு. நீ கேட்டு நிறையச் சாப்பிடு.''

பாபுவுக்கு வியப்பாக இருந்தது. ''தயிர் கூட அலுத்துப் போகுமா? என்னால் நம்பவே முடியல்லே, பெரியம்மா.''

இதற்குள் வீட்டுக் குழந்தைகள் மூன்றும் மோர் சாப்பிட்டுவிட்டுச் சென்றனர்.

''நானும் வரேன், சிவகுமார், விளையாடறதுக்கு'' என்று கூறிக்கொண்டே பாபு அவர்கள் பின்னால் ஓடினான்.

''மோகன்—லலிதா—குழந்தையையும் கூட அழைச்சண்டு போங்கோ!'' பெரியப்பாவின் பேச்சு இது.

சிவகுமார், ''நான் இருக்கேன் பாபு, என்னோட வா'' — இருவரும் ஏறத்தாழ ஒரே வயதினர். பேசிக் கொண்டே சென்றனர்.

திண்ணையின் முகப்பில் தூணை அணைத்துக் கொண்டு பாபு நின்றிருந்ததைப் பார்த்து விட்டு உள்ளிருந்து லட்சுமணன் வந்தார்.

''பாபு, எங்கியாவது போகலாமா? குழந்தைகளெல்லாம் அவா எக்ஸ்கர்ஷனுக்குப் போயிருக்கு. அவா ஸ்கூலிலே கூட்டிண்டு போயிருக்கா. ராத்திரிக்குத்தான் வருவா.''

பாபு பதில் சொல்லு முன், அவனுடைய பெரியம்மா யோசனை கூறினாள். ''பாபுவை எங்கியாவது அழைச்சண்டு போங்களேன். அதுகள் வர நேரமாகும். ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுங்கோளேன் அவனுக்கு. இங்கே ஐஸ்கிரீம் எப்படிஇருக்குன்னுபார்க்கட்டும்பாபு.''

லட்சுமணன் மேலுக்குச் சட்டை அணிந்து கொண்டு வந்தார். ''பாபு, பெரியம்மா சொன்னதைக் கேட்டயா? ஐஸ்கிரீம் இந்தூர்லே எப்படி இருக்குன்னு நீ சர்டிபிகேட் கொடுக்கணுமாம்.''

''இந்தூர்லே எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஐஸ்கிரீம் சூடா இருக்குமா அல்லது உறைக்குமா?''

இருவருமாக ஊர் சுற்றிவிட்டுத் திரும்பினர். வீட்டுக் குழந்தைகள் வரும் வழியாக இல்லை. பாபு சாப்பிட்டு விட்டுப் படுத்தான். அதற்கப்புறம்தான் குழந்தைகள் வீடு வந்து சேர்ந்தனர். பஸ்ஸைக் கோட்டை விட்டு விட்டு எங்கெங்கோ அலைந்து திரிந்துவிட்டு அவர்கள் வந்தனர்.

மூவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

சிவகுமார்தான் கேட்டான் — ''பாபு எங்கேம்மா, காணோம்?''

''அவன் சாப்பிட்டு விட்டுத் தூங்கிட்டான்.''

''சத்தம் போடாமே சாப்பிடுங்கோ: பாபு தூங்கறான்'' எனக் கூறிவிட்டு லட்சுமணன், எதிர் வீட்டுத் திண்ணைக்குப் போய் அமர்ந்தார். அங்கு பெரியவர்களின் சீட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

மோகன் முணு முணுப்பாகத் தொடங்கி வைத்தான் — ''என்ன அம்மா, நீ — இந்தப் பாபு வந்தாலும் வந்தான் — மோரை ஆறு லும் நீர் மோரா ஆக்கிட்டே? எனக்கொண்ணும் இந்தத் தண்ணி மோர் வேண்டாம்.'' சிவகுமாரைக் கிளப்பிவிட்டது மோகனின் பேச்சு. ''எனக்கு ஒரு நாள் ஆடைத் தயிரைக் கண்ணாலே காமிச்சிருக்கியா, அம்மா நீ? பாபுவுக்குக் கெட்டியாப் போட்டியே?''

லலிதா விடுவாளா? ''எத்தனை நாளா ஓலவ்புன் கேட்டிண்டிருந்தோம் நாங்கள்ளாம். இப்ப மட்டும் வாங்க முடிஞ்சுதாக்கும்?''

அம்மா சமாளிக்க முயன்றாள். ''அசடுகளா! பாபு நம் வீட்டுக்கு மெனக்கட்டு வந்திருக்கான். அவன் டில்லிலே எவ்வளவு வசதியா இருக்கிறவன். அவன் அப்பாவுக்கு மாசம்

நாள் முழுதும் தலைமயிர் படிந்திருக்க



கல்கெமிகோவின்

காஸ்டரால்

சுகந்த கூந்தல் தைலம் உபயோகியுங்கள்

மிக சுத்தமான களிம்பற்ற ஆமணக்கெண்ணெயிலிருந்து தயாரித்தது, மயிர்க்கால்களை புஷ்டிப்படுத்தி மங்கலான மயிர்களுக்கு புத்துயிரையும் பிரகாசத்தையும் அளித்து நாள் முழுதும் மயிர் கலையாமல் இருக்கவும் உதவுகிறது.



ஒரு கல்கத்தா கெமிக்கல் தயாரிப்பு

CAS-1/68 T/3

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. பை.	ஆறு மாதம் ரூ. பை.
இந்தியா	20-00	10-00
பர்மா, மலேயா இதர நாடுகள்	40-00	20-00
	இலங்கை நாணய மதிப்புப்படி	
இலங்கை	21-00	10-50

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்படவேண்டும். வி.பி.பி. கிடையாது.

மானேஜர் :

கல்கி காரியாலயம் :: சென்னை-31

மூல நோயை

முற்றவிடாமல் நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து நிவாரணம் அடையுங்கள்;

—ரண சிகிச்சையையும் தடுங்கள்

DGL-1221 TAM.

இரண்டாயிரம் ரூபாய் சம்பளம். அவரோடே நீங்க போட்டி போடலாமா?''

''ஆமாம். எங்களுக்கு மாத்திரம் வீட்டிலே பண்ணின ராகிக் கஞ்சிதான் கொடுக்கணும்'' —மோகன்.

''யாராவது விருந்தாளி வந்தால் வீட்டிலே இருக்கிறவா தன்னோடே சௌகரியத்தைக் குறைச்சிக்கத்தான் வேணும். இதுக்கெல்லாம் மூஞ்சி சிணுங்குவாளோ? நீங்கள்ளாம் சமர்த்து இல்லியா?''

''அம்மா நம்ம தலையிலே ஐஸ் வெக்கறா. ஏமாறுதேங்கோ'' என்று உரக்கக் கூவினான் மோகன்.

''இன்னும் நாலைஞ்சு நாட்கள் இருந்தா ஜாஸ்தி. அதுக்கு மேலே பாபு இங்கே தங்க மாட்டான். முன்னாடியே சொல்லி யிருக்காப்பலே, எல்லாரும் நாக்கைக் கட்டிண்டு எந்த நல்ல பண்டம் இலையிலே விழுந்தாலும் பிடிக்காதுன்னு சொல்லிண்டு சமர்த்தா நடந்துக்கணும். தெரிஞ்சுதா?''

''ஆமாம்'' என்று மூவரும் அழகு காட்டினர்.

''பாபு ஊருக்குப் போகட்டும். உங்களுக்கு எல்லாம் தரேன்.''

''ஆமாம், இனம் நம் வீட்டிலே தயிர் தோய்ச்சு வாழுறுமோல்லியோ?'' என்று லலிதா கேட்க, அம்மா சீறினள். — ''பெரிய தனமாப் பேசினா வாயிலே போடுவேன் இந்தக் கரண்டியாலே.''

மூவரும் முனகிய வண்ணம் சாப்பிட்டு முடித்தனர்.

லட்சுமணனால் தம் கண்களையே நம்ப முடியவில்லை. எதிர்ச் சிறகில் நான்கு கடைகளுக்கு அப்பால் இருந்த தபாலாபீஸ் கட்டிடத்தின் உள்ளே யிருந்து வெளியே வந்தவன் பாபுதான். வியப்போடு அவர் கவனித்தார். அவனும் திருட்டுத்தனம் ஏதோ செய்கிறவன்போல், சட்டென்று சந்தில் நுழைந்து மறைந்து விட்டான்.

லட்சுமணனுக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. தபால் காரியாலயத்தினுள் எட்டிப் பார்த்தார். சன்னலில் அதிகாரியின் முகம் தெரிந்தது. அவரே தலையை நிமிர்த்தி, ''என்ன வேணும்?'' என விசாரித்தார்.

''இப்ப இங்கே ஒரு பையன் வந்தானா?''

''ஆமாம்; ரொம்ப ஸ்மார்ட் பாய்! டில்லிக்குத் தந்தி கொடுக்கணும்னான். நீட்டா ஃபாரத்திலே எழுதினான்.... ஏன் உங்களுக்குத் தெரிஞ்ச பையனா?''

தந்தி என்றதும் லட்சுமணனுக்கு என்னவோ, ஏதோ என்று வேதனையாக இருந்தது.

''என் தம்பி பையன் சார். டில்லியிலேந்து லீவுக்கு வந்திருக்கான்.''

''அப்படியா? தெரியாதே. எனக்கு.''

லட்சுமணன் துடிப்புடன் கேட்டார். ''என்ன தந்தி அடிச்சான்? கொஞ்சம் சொல்ல முடியுமா?''

மூக்குக் கண்ணாடியைக் காது வரையில் இழுத்து விட்டுத் தேடி அந்தக் காகிதத்தையே எடுத்து நீட்டினார். அவர்.

பாபு தன் தந்தைக்குத்தான் தந்தி அனுப்பி யிருந்தான். ''இந்த ஊர் எனக்குப் பிடிக்கவில்லை. வாசு 'அங்கிள்' கூட நாளைக்கே புறப்படுகிறேன்.'' -

இந்த வாசகத்தைப் படித்த லட்சுமணனின் கண்களை ஒரு விநாடி இவ்வார்த்தைகளை மறைத்தன. ''சரி, நான் வரேன்'' எனக் கூறிவிட்டுக் கிளம்பினார். தன் குழந்தைகள் மூன்றும் அவனை ஏதேனும் வம்புக்கிழுத்து மாட்டி வைத்திருக்குமோ என்று ஒரு குறுகுறுப்பு. இவ்வளவு நாட்களும் சந்தோஷமாக இருந்தது அவ்வளவும் இப்படி விருடிப் போதில் பாழாகி விட்டதே என்ற வேதனை வேறு. அவர் முகம் பேயறை பட்டாற்போல் ஆகியது. வராதவன் 'வந்தானே என்று சந்தோஷப்பட்டேன். அது இப்படியா முடிய வேண்டும்?' என்று அவர் வாய் முணுமுணுத்தது. டில்லிக்குப் போய் என்ன சொல்லப் போறானோ? தம்பி அதையெல்லாம் கேட்டு என்ன நினைத்துக் கொள்வானோ? —இப்படி நீளமாக ஒரே விசாரம்.

'**சா**ர், போஸ்ட்!'' என்று தபால்காரர் நீட்டிய கடிதத்தை வாங்கி லட்சுமணன் வெகு ஆவலோடு பிரித்துப் படித்ததற்குக் காரணம், அக்கடிதம் டில்லியிலிருந்து வந்திருந்ததே. பாபுதான் எழுதியிருந்தான்.

அன்புள்ள பெரியப்பாவுக்கு,

இன்னும் சில நாட்கள் அங்கே தங்கலாம் என்று ஆசையோடு இருந்த நான் திடுதிப்பென்று புறப்பட்டு வந்ததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்.

ஆமாம், அங்கே தங்கியிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. குமார், மோகன், லலிதா எக்ஸ்கர்ஷன் போய்விட்டு வந்த பின் சாப்பாட்டின்போது பேசியது அவ்வளவும் என் காதில் விழுந்தது. பெரியம்மா பதில் சொல்லிச் சமாதானப்படுத்தியதும் நான் விழித்துக்கொண்டே படுத்திருந்ததால் எனக்குக் கேட்டது.

உங்கள் அன்புக்கு நான் வெறும் 'தாங்க்ஸ்' சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியுமா? அறுவும் என் வயதுகூட ஆகாத சிவகுமார் எனக்காக எவ்வளவு பெரிய தியாகம் செய்தான். அந்த ஏழெட்டு நாட்களும் என்பதை நினைத்தால் என் கண்களில் நீர் பெருகுகிறது. மோகனும் லலிதா அக்காவும் எனக்காகத் தம் ஆசைகளை அடக்கிக் கொண்டு விட்டுக் கொடுத்ததை யெல்லாம் நான் மறக்கவே மாட்டேன்.

அந்த ஊர் எனக்குப் பிடிக்கவில்லை என்பதன் காரணத்தை அப்பாவுக்கு விளக்கிச் சொன்னேன். உடனே அப்பாவும் அம்மாவும் ''அந்தக் குழந்தைகள்தான் முன்னுக்கு வரப் போகிறார்கள். இந்த வயசிலே என்ன நல்ல குணம், எவ்வளவு தியாக புத்தி எத்தனை பெருந்தன்மை அவர்களுக்கு இருக்கிறது! நீயே பார்த்துத் தெரிந்துகொள். நீயும்தான் இருக்கிறாயே'' என்று என்னை ஏசத் தொடங்கி விட்டார்கள்.

நான் திடீரென்று கிளம்பி வந்ததற்கு மீண்டும் ஒரு முறை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். குமார், மோகன், லலிதா அக்காவுக்கு என் அன்பு. உங்கள் இருவருக்கும் என் வணக்கங்கள்.

—பாபு.''

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

பாடுபட்டுச் சேமித்த உங்கள் பணத்தைப் போட்டு வைப்பதற்கான நல்ல பாங்க் எதுவென்று தீர்மானிக்குமுன்...



நீங்கள் அறிய வேண்டிய சில உண்மைகள் இதோ...

- உங்கள் சேமிப்புக்கு அதிக பட்சப் பாதுகாப்பை அளிக்கிறது ஸ்டேட் பாங்க்.
- நாடு முழுவதும் 1500-க்கு மேற்பட்ட ஆபீசுகளை உடையது. நீங்கள் எங்கு சென்றாலும், அங்கே உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது அது.
- அது நாட்டிலேயே மிகப் பெரிய பாங்க். அதன் பண வாய்ப்புக்கள் யாவும் சேர்ந்து, அதற்கு இணையற்ற வலிமையை அளித்துள்ளது.
- உங்களைப் போல் 18,000,00 மக்கள் தங்கள் பணத்தை ஸ்டேட் பாங்கிலே போட்டு வைத்துள்ளனர்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

REGISTERED No. M. [illegible]
Registered as a Newspaper in Ceylon